Registered as a News Paper



உங்கள் எண்ணம் போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்
முத்துமாரி நகைமாடம்
78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வன்னியில் நாச்சிக்குடாச் சந்தியில் செயற்பட்டு வந்த எமது நிறுவனம் தற்போது பெயர் மாற்றத்துடன் யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்றது.
(சி-7411)

ஈழநாதம்
Eelanatham
வெள்ளி நாதம்
விலை: 12.00

நாதம் -13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | ஐப்பசி -01 | 18-10-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 242



இப்போது வன்னியில் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் முதற் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் கருத்துப் பகிர்வுடன் இரண்டாம் சுற்றுப் பேச்சுகளுக்கான முன் தயாரிப்புகளில்...

## தொடரும் தமிழ் மக்கள் மீதான படையினரின் தாக்குதல்கள்

# சமாதான எதிர்ப்பு சக்திகள் பின்னணியில்; கட்டுப்படுத்த இயலாத நிலையில் அரசு!

### —பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் குறித்து ஆய்வாளர்கள் அச்சம்—

**அண்மையில் மட்டு- அம்பாறை காஞ்சிரங்குடாவிலும் திருகோணமலை மாவட்டத்திலும் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரும், பாதுகாப்புப் படையினரும் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல் நடவடிக்கைகளின் பின்னணியில் சமாதானத்திற்கு எதிரான சக்திகள் உள்ளன என்ற சந்தேகத்தினை அரசாங்கத் தரப்பு வட்டாரங்கள் எழுப்பினாலும் கூட, சிறிலங்காவின் பாதுகாப்புப் படைகளும், பொலிஸ் படையும் - குறிப்பாக விசேட அதிரடிப்படையும், பாதுகாப்பு அமைச்சு மற்றும் உள்துறை அமைச்சின் கட்டுப்பாட்டினுள் இயங்கவில்லையா? அல்லது அவற்றைக் கட்டுப்படுத்தும் ஆளுமைத்திறன் இவ்வமைச்சுக்களுக்கு இல்லையா? அன்றேல் இவ்வமைச்சுக்களுக்கும் மேலாக இவற்றை தம்விருப்பப்படி செயற்படுத்தும் அதிகாரத்தை வேறுயாராவது எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்ற கேள்வியை இராணுவ - அரசியல் ஆய்வாளர்கள் எழுப்பியுள்ளனர்.**

பாதுகாப்புப் படையினரும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் சமாதான நகர்வுகளை ஆதரிக்கவில்லையா? அல்லது அவர்களுக்கு புரிந்துணர்வு உடன்பாடு குறித்தும் அதன் செயற்பாட்டு நடைமுறைகள் குறித்தும் பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சுக்கள் அறிவுறுத்தல்களை வழங்கவில்லையா? என்றும் அவர்கள் சந்தேக மெழுப்பியுள்ளனர்.

இத்தகைய நடவடிக்கைகளை அசம்பாவிதங்கள் என்றோ, அல்லது அலட்சியப்படுத்திவிடக் கூடிய சாதாரண வழமையான நிகழ்வுகள்தானென்றோ எவரும் வரையறை செய்து கொள்ளக் கூடாது. இவை மிகவும் பாரதூரமான சம்பவங்கள். அரசின்-குறிப்பாக பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சுக்களின் படைகள் மீதான கட்டுப்பாட்டு ஆளுமைத்திறனை சந்தேகிக்க வைத்துள்ள சம்பவங்கள் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை இச்சம்பவங்கள் தொடர்பாக ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் கருத்துக்களை வெயிடும் தன்மைகளைப் பார்க்கையில் அவர்கள் தங்களின் அரசியல் சுயலாபங்களை இலக்கு வைத்து ஒருவர் மீது மற்றொருவர் குற்றம் சுமத்துவதிலேயே கண்ணாக இருப்பது தெரிகிறது.

சமாதான நகர்வுகளை படைத் தரப்பினர் விரும்பவில்லையெனில் பேச்சுவார்த்தைகள் எந்தவகையான உறுதியான முடிவையும் தரப்போவதில்லை.

'படைத்தரப்பினை சுயாதீனமாக- அரசு கட்டுப்பாடுகளை மீறி இயங்க அனுதிப்பதும், அதன்போதான அவர்களின் மனித உரிமை மீறல், புரிந்துணர்வு உடன்பாட்டு மீறல், மற்றும் அவர்களின் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் போன்றவற்றுக்கு நியாயம் கற்பிக்கவும், அவற்றை அக்கறைப்படுத்தாது விடவும் முயல்வது சமாதானம் மீதான தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும், பற்றுறுதியையும் பரிகசிப்பதாகவே அமையும்'. என்று தெரிவிக்கும் தன்னை இனங் காட்ட விரும்பாத ஒரு அரச உயர் நிர்வாகி இராணுவ முற்றுகைக்குள் இயல்பு வாழ்க்கை என்பது அர்த்தமற்ற விடயம் என்றும் வலியுறுத்தினார்.

'வெறும் விசாரணைகள், ஆணைக்குழுக்கள், நீதிமன்ற வழக்குகள் இந்த விடயங்கள் எந்தவிதமான நீதியையும் நியாயத்தையும் உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்போவதும் இல்லை, என்றும் தெரிவித்த அவர் அரசாங்கம் இப்போது தன்னைத்தானே சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரப் பிடியினின்றும் விடுவிக்கப் போராடிக்கொண்டுள்ள நிலையில் படைத்தரப்பின் நடவடிக்கைகள் குறித்து கடுமையான,தீர்க்கமான முடிவுகள் எதனையும் எடுக்கும்நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர் விபரித்தார்.



சுதந்திர வேட்கை
பக்கம் - 04



தமிழீழ காவல்துறை...
பக்கம் - 05



திருமணம் ...
பக்கம் - 11



போராட்டத்துடன் ...
பக்கம் - 13

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ். சாலை, கிளிநொச்சி 18.10.2002

## பொறுப்பற்ற செயற்பாடுகள்....

அம்பாறை காஞ்சிரங்குடா படுகொலைகள் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஒருதலைப் பட்சமாக - பிரச்சினையில் பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பினதோ அல்லது விடுதலைப் புலிகளினதோ கருத்துக்களை எண்ணங்களைப் பகிர்ந்து உண்மை நிலைமையை சரியான முறையில் உணர்ந்துகொள்ளாது.... ஒருதலைப்பட்சமாக ஒரு அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டுள்ளன.

இதற்கு அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு தரப்பு- அதாவது காங்சிரங்குடா படுகொலைகளுக்கு பொறுப்பான விசேட அதிரடிப்படையினரின் கருத்துக்களை மட்டும் கேட்டுவிட்டு அம்பாறை மாவட்ட கண்காணிப்புக்குழுத் தலைவியான 'லூயிஸ்' என்பவரே இந்த ஒருதலைப்பட்ச அறிக்கையைத் தயாரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தப் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவி தனது அறிக்கைக்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து-தனது அறிக்கை இருதரப்பினரதும் ஆலோசனைகள்-கருத்துக்கள் மற்றும் நியாயங்களை உரியமுறையில் பகுப்பாய்வு செய்யாமல் விடுக்கப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டுள்ளமையேயாகும்.

ஒரு பொறுப்பான தலைவி அதுவும் மிகவும் சிக்கலான மிகமிக அவதானத்துடனும் பொறுப்புடனும் 'போர்நிறுத்தம்' தொடர்பான கண்காணிப்புப் பணிகளை 'கத்திமுனையில்' நடக்கும் நிதானத்துடன் செயற்பட வேண்டியவர் இப்படியொரு உணர்வுமயமான பிரச்சினையை அலட்சியமாக கையாண்டது மட்டுமல்லாமல் அதனை ஒப்புக்கொண்டுள்ளமையும் அவர்தனது பணியின் பொறுப்பினை உணராது உள்ளார் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தனது பணிகளில் அக்கறையின்றி ஏனைய பலகுழுக்களைப் போன்று வெறுமனே கூடிப்பேசி குடித்துக் கலையும் குழுவாக செயற்படுவது என்பது சமாதான நடவடிக்கைகளை கேலி செய்வதாகவும் ஏன் அதற்கு எதிரானதாகவுமே இருக்கும்.

பக்கச்சார்பு- ஒருதலைப்பட்ச முடிவு அலட்சியமான செயற்பாடு ஆகியன போர்நிறுத்த நடவடிக்கையினைக் கண்காணிக்கும் பொறுப்பிலிருப்பவர்கள் மீதான நம்பகத்தன்மையை சிதறடித்துவிடும் விடயங்களேயாகும்.

இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் சரியாக புரிந்துகொள்ளாவிட்டால் இதனால் ஏற்படக் கூடியதான விளைவுகளுக்கும் இவர்களே பொறுப்பேற்க வேண்டிநேரிடும்.

2

சிறிலங்காவின் பதில் பொலிஸ்மா அதிபராக இருந்து தற்காலிக பொலிஸ்மா அதிபராகி இப்போது நிரந்தர பொலிஸ்மா அதிபராக முழுமையாக பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுவிட்ட தமிழரான T.E.ஆனந்தராஜா அவர்கள் தனது பணிப்பொறுப்பிலிருந்து முதல் வெளியிட்டுள்ள கருத்துக்களில் முக்கியமானது காஞ்சிரங்குடா சம்பவம் பற்றி அவர் கூறியவைகளாகும்.

காஞ்சிரங்குடா சம்பவம் பற்றி ஆராய விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது...சி.ஐ.டி விசாரணை நடைபெறுகிறது. நீதிமன்ற விசாரணை நடக்கிறது. போதாக்குறைக்கு சனாதிபதி தானும் இருக்கிறேன் என்று காட்டுமாப்போன்று தனக்கு இது குறித்த விசாரணை அறிக்கையை உடன் தருமாறும் கோரியுள்ளதாகவும் தெரிகிறது. ஆனால் எந்தவிசாரணைக் குழுவின் முழுமையான அறிக்கையும் இன்னும் வெளிவரவில்லை.

இந்தநிலையில் ஆனந்தராஜா எந்தவகையிலான விசாரணையை மேற்கொண்டாரோ தெரியவில்லை. ஆனால் 'காஞ்சிரங்குடா சம்பவத்தில் அதிரடிப்படையினர் மீது எந்தக் குற்றமும்கிடையாது' எனத் தீர்ப்பு வழங்கிவிட்டார்.

விசேடஅதிரடிப்படையினர் பாவம் அப்பாவிகள் அவர்கள் ஆயுதங்கள் எதுவுமின்றி நின்ற மக்களை அவர்களால் தமக்கு ஆபத்து வரக்கூடாது என்ற தற்பாதுகாப்பு உணர்வுடனேதான் சுட்டார்கள் என்ற தொனிப்படக் கருத்துக் கூறி தனது தீர்ப்பிற்கு நியாயம் கற்பித்துள்ளார்.

அதுமட்டுமல்ல விசேட அதிரடிப்படை முகாமை எந்தவகையிலும் அகற்ற முடியாது என்று வலியுறுத்திக் கூறியுள்ளதுடன் அந்த முகாம்களுக்கு மேலதிக விசேட அதிரடிப்படையினரையும் அனுப்பி மக்களால் அவர்களுக்கு ஆபத்து ஏற்படாதவாறு (!?) உரிய நடவடிக்கைகளையும் அரச விசுவாசத்துடன் எடுத்துள்ளார்.

விசேட அதிரடிப்படையின் கடந்தகால வரலாறு ஆனந்தராஜா அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம் அல்லது அதற்கும்அவர்கள் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருப்பவர்கள் என்பதற்காக நியாயங்களைக் கூறக்கூடியதாகவும் இருக்கலாம் ஆனால் உண்மையை ஒருகாலமும்அவரால் மறைத்துவிட முடியாது.

மக்களும்-காலமும்அதனை நன்கு பதித்துக்கொண்டேயுள்ளனர்.

தவறுகளுக்கு நியாயம் கற்பிக்க முயலாதீர்கள். முயன்றால் வரலாறு உங்களை மன்னிக்கவே மாட்டாது.

## தூரனின் பார்வையில் ....

## திருமலை-காஞ்சிரங்குடா படுகொலை சம்பவங்களின் சூத்திரதாரிகள் சமாதான எதிர்ப்பு சக்திகளாயின்.....

அண்மையில் மட்டக்களப்பிலும்- திருகோணமலை யிலும் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரும், சிறிலங்கா இராணுவத்தினரும், மேற் கொண்ட படுகொலைகளும் தமிழ் பொதுமக்கள் மீதான தாக்குதல்களும் வெறுமனே திடீரென நடைபெற்ற ஒன்றல்ல என்பது அதனையொட்டி நிகழும் பல தொடர் சம்பவங்கள் மூலம் உணரக்கூடியதாக உள்ளது.

சிறிலங்காவின், முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட சனாதிபதியினதும், பிரதமரினதும் இரட்டை ஆட்சி முறையின் வெளிப்பாடாகவே இதனைக் கொள்ள வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சு ரணிலின் அரச பிடிக்குள் கொண்டு வரப்பட்டாலும் நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட சனாதிபதியே முப்படைகளின் தளபதியாகவும் முப்படை மற்றும் பொலிஸ் சேவைகளில் உயர் பதவிக்கான நியமனங்களை தீர்மானிக்கும் சக்திவாய்ந்தவராகவும் இன்னமும் இருப்பதானது, பாதுகாப்புப் படைத்தரப்பைத் தொடர்ந்தும் கட்டுப் படுத்துவது யார் என்ற விடயத்தில் மிக மோசமான நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது.

பாதுகாப்புப் படை - மற்றும் பொலிஸ் சேவை ஆகியவற்றை ஆட்சியிலிருந்த சிறிலங்காவின் அரசியல்வாதிகள், அரசியல் மயமாக்கியதன் மூலம் அவற்றைத் தமக்கு அநுகூலமான செயல்களையே செய்யும் அமைப்பாக மாற்றியதால் 'பொதுச் சேவை - தேசிய சேவை' என்ற தனிமையை அவை பெரும்பாலும் இழந்து விட்டதாகவே கூற வேண்டும்.

ஒருவகையில் இந்தப் பாதுகாப்பு அமைப்புக்கள் யாவும் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான பெரும்பாலும் அழித்தொழிப்பு வேலைகளை மேற்கொள்வதையே இலக்காகக் கொண்டு இயங்க வைக்கப்பட்டதுடன் தென் பகுதிகளில் ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சியினருக்கு எதிரான செயற்பாடுகளை மேற் கொள்ளவுமே பழக்கப்படுத்தியும் பணிக்கப்பட்டும் இருந்துள்ளனர்.

இவையெதுவுமே ரகசியமாக மேற்கொள்ளப்பட்டவையல்ல, மாறாக சிறிலங்காவின் சனநாயக சோசலிச அரசியல் கோட்பாட்டின் ஓரங்கமாகவே கடைப்பிடிக்கப்பட்டும் வந்துள்ளது என்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

இவற்றின் அடிப்படையில்தான் கிழக்கு மாகாண அசம்பாவிதங்களின் பின்னணியை பார்க்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர் இராணுவமும், கடற்படையும் நடந்து கொள்ளும் முறைகளையும், விசேட அதிரடிப்படையின் செயற்பாடுகளையும் கூர்ந்து மீள்நோக்கிய பார்வையில் கொண்டுவருதலும் அவசியமானதாகும்.

கடந்த ஏழு மாதத்திற்கும் அதிகமான காலப்பகுதிக்குள் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து இராணுவம் மற்றும் கடற்படையின் அணுகுமுறைகளிலும் ஒரு இரட்டைத் தன்மை நிலவி வந்துள்ளதை இதன் மூலம் நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஒருபுறம் சமாதான நடவடிக்கையில் முழுமூச்சாக இறங்கி அதற்கான செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவது போன்று உலகிற்குக் காட்டிக் கொள்ளும் வேளையில் மறுபுறம் அவர்களின் நடவடிக்கைகள் பலவும் புரிந்துணர்வு உடன்பாட்டை முற்றும் முழுதாக மீறுவதுடன் ஒரு புதிய போருக்கான அறைகூவலை விடுப்பது போன்றும் அமைந்து வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

இதனடிப்படையில் பார்த்தால் சனாதிபதி பிரதமர் என்ற இரட்டை ஆட்சி முரண்பாடுகள் பாதுகாப்புப் படையினரிடையேயும் இரட்டை அணுகுமுறைகளைக் கையாளும் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளமையையும் புரிந்து கொள்ள முடியும்.

பாதுகாப்புப் படையினர் மற்றும், பொலிஸ் தலைமைகளிலும் உயர் பதவிகளிலும் ரணிலின் அரசு சிபார்சு செய்யும் வகையில் சனாதிபதி முடிவுகளை எடுப்பதில்லை. மாறாக இராணுவ விதிமுறைகளை மீறி தனக்கு சார்பானவர்களுக்கு பதவியுயர்வுகளையும், சேவைக்கால நீடிப்புக்களையும் வழங்கி அவர்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நகர்வுகளையே மேற் கொண்டும் வருகிறார்.

குறிப்பாக இராணுவத்தளபதி லயனல் பலகல்லேயின் சேவைக் காலத்தை ஓராண்டுகாலம் நீடித்ததையும், கடற்படைத்தளபதி தயா சந்தகிரியின் சேவைக் காலத்தை என்றுமில்லாதவாறு மூன்றாண்டுக் காலம் நீடித்ததையும் கூறலாம்.

இவ்விருவருமே சந்திரிகாவின் விசுவாசிகள் என்பதில் கருத்து வேறுபாடே கிடையாது. புதிய பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவும் சந்திரிகாவின் மறைமுகமான ஆதரவாளரே. இதன்காரணமாகத் தான் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனியாவுக்கு சேவை நீடிப்பை வழங்கி சிங்களவரான அவரின் கோரிக்கைகளையும் பரிசீலிகாது ஆனந்தராஜா பொலிஸ்மா அதிபராக்கும் சிபார்சை மறுப்பின்றி சந்திரிகா ஏற்றுக்கொண்டார். இதற்கு வேறு சில உள்நோக்கங்களுடன் கூடிய திட்டமும் இருக்கவே செய்கிறது. யாழ். மாவட்ட துணை இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் இரட்ணசபாபதி என்ற தமிழரை நியமிக்க சந்திரிகா ஒப்புதல் அழித்ததும் இந்த உள்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதுதான்.

தமிழரான லக்ஸ்மன் கதிர்காமரை வைத்துக்கொண்டு அவர் மூலமாகவே தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்ள வைத்து சர்வதேச ரீதியில் தனது கருத்தை நியாயப்படுத்த சந்திரிகா மேற்கொண்ட நடவடிக்கைகள் ஊரறிந்த விடயமே. அதேபோன்ற நோக்கங்களே இந்த நியமனங்களின் அடிப்படையாகவும் உள்ளன.

மட்டு - அம்பாறையில் விசேட அதிரடிப்படை முகாம்களை அகற்ற முடியாது என்றும், காஞ்சிரங்குடா தாக்குதலில் அவர்கள் தவறு செய்யவில்லையென்றும், தற்பாது காப்பு நடவடிக்கைகளின் போதே பொது மக்கள் பாதிக்கப்பட்டதாகவும் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தமது தரப்பினரின் குற்றங்களை நியாயபடுத்தி உள்ளமையையும், யாழ் குடாவில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் உடனடியாக அகற்றப்படமாட்டாது, அவை தொடர்ந்தும் எந்தவிதமான மாற்றங்களுமின்றி அப்படியே இயங்கும். எனப் பலாலி இராணுவ முகாமில் வைத்து தம்மைச் சந்தித்த பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதிகளிடம் மேஜர் ஜெனரல் இரட்ணசபாபதி வலியுறுத்திக் கூறியுள்ளதையும் மேற் குறிப்பிட்ட நோக்கங்களுடன் ஒப்பீடு செய்து பார்த்தால் இந்த அனுமானங்களின் உண்மை தன்மையை புரிந்து கொள்ள முடியும்.

எங்களின் கைகளைக் கொண்டே எங்களின் கண்களைக் குத்த வைக்கும் தந்திரோபாயமே இவற்றின் அடிப்படையாகும்.

அடுத்து திருமலை- மற்றும் காஞ்சிரங்குடாச் சம்பவங்களின் பின்னணியில் சமாதானத்துக்கு எதிரான சக்திகள் உள்ளதாக பாதுகாப்பு செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ கூறியுள்ளதன் அடிப்படையைப் பார்த்தால் சில எண்ணங்கள் எழவே செய்கின்றன.

சமாதானத்திற்கு எதிரான சக்திகள் என அவர் பொதுவாகக் குறிப்பிட்டாலும் அவர்யாரைக் குறிப்பிடுகிறார் என்பதில் அதிககுழப்பம் ஏற்பட வாய்ப்பேயில்லை.

சமாதானத்திற்கு இன்று எதிரானவர்களாக இருப்பது -

பொதுசன ஐக்கிய முன்னணி-மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கூட்டமைப்பின் கீழான பேரினவாத சக்திகள்.

சில பிக்குமார் தலைமையிலான பௌத்தமதவாத சக்திகள்

பாதுகாப்புப்படை மற்றும்- பொலிஸ் தரப்பில் உள்ள மேற் குறிப்பிட்ட கட்சிகளின் ஆதரவுச் சக்திகள் போன்றவையே ஆகும்.

ஆகவே இந்த இரு சம்பவங்களிலும் நேரடியாகவே விசேட அதிரடிப்படையினரும், பாதுகாப்புப் படையினரும் பங்கு கொண்டிருப்பதால் இவர்கள் சனாதிபதிக்கும், ஜே.வி.பி. யினருக்கும் ஆதரவான அதேசமயம் சமாதானத்திற்கும், விடுதலைப் புலிகளுடனான அரசின் அமைதிப் பேச்சுவார்த்தைக்கும் எதிரான சக்திகள்தான் என்பதில் சந்தேகம் கொள்ள வேண்டிய அவசியமேயில்லை.

நிச்சயமாக ரணிலின் சமாதான முயற்சிகள் ஆத்மார்த்தமான தென்றும் நியாயமானதென்றும் நம்பும் படைத்தரப்பினர் இதனைச் செய்திருக்க மாட்டார்கள்.

ஆகவே சில வட்டாரங்கள் ஏற்கனவே சந்தேகம் எழுப்பியது போன்று ஜே.வி.பி.யினரே இதன் பின்னணியில் இருந்தார்கள் என்பது உண்மையானால், இவர்களுக்கு சனாதிபதி சந்திரிகாவின் ஆசீர்வாதமும், அவரது படைத்தரப்பில் உள்ள ஆதரவாளர்களின் பரந்த அளவிலான ஆதரவும் இருந்திருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

வலுவான சக்தியொன்றின் ஆதரவு பின்னணியின்றி விசேட அதிரடிப்படையினரோ,பாதுகாப்புப் படையினரோ தன்னிச்சையாக இதில் செயற்பட்டிருக்க முடியாது என்பதற்கு பொலிஸ்மா அதிபர் விசேட பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தியிருப்பதே சான்று.

ஆக இரு ஆட்சி-இரு படைகள் இருக்கும் சிறிலங்கா இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒருமுகப்பட்டதாக எப்படி ஒரு சமாதானத்தீர்வை எட்டப் போகிறது என்பதே இப்போது விடைகாண வேண்டியுள்ள மில்லியன் டொலர்பெறுமதியான கேள்வியாகும்.

◇◇◇◇◇◇

# நறுக்கென...

ரணில் விக்கிரம சிங்கவும் அவர் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியும் அவர்கள் விரும்பியபடி ஆட்சி நடத்த அனுமதிக்க மாட்டேன் என்று தான் விரும்பியபடியெல்லாம் எவரையும் மதிக்காது நிறை வேற்று அதிகார மமதையோடு ஏழாண்டுக்கும் மேலாக மோசடிகளுக்கும் ஊழலுக்கும் பெயர் போன ஆட்சியொன்றை நடத்திய பின் மக்களால்- அதுவும் சிங்கள மக்களால் தூக்கியெறியப்பட்ட சிறிலங்காவின் சனாதிபதி கடந்த வாரத்தில் கூறியுள்ளார்.



சிறிலங்காவில் ஆட்சிக்கு வரும் அரசியல் கட்சிகள் அனைத்துமே தம் இஷ்டப்படி நாட்டின் நலனையோ மக்களின் அபிலாசைகளையோ கருத்தில் கொள்ளாது ஆட்சி நடத்துவதும் பின்னர் ஏதாவது ஒரு கட்டத்தில் அந்த

## அரசியல் கயிற்றிழுவை

ஆட்சியை அரியணை ஏற்றிய மக்களே தூக்கியெறிவதும் அதிசயமான நிகழ்வுகளேயல்ல.

இரு பிரதான கட்சிகள் மட்டுமே உள்ள சிறிலங்காவில் மாறி மாறி ஆட்சியைக்கைப்பற்றி ஆழும் அந்த இரு கட்சிகளின் தலைமைகளும் ஒன்றை மற்றொன்று மதித்ததாக வரலாறும் கிடையாது:

சரி இப்போது சந்திரிகா இப்படியொரு மிரட்டல் விடுவதற்கு என்ன காரணம்?

அரசுக்கும்- சனாதிபதிக்கும் இடையேயான அதிகாரப்போட்டி ஒரு முக்கியமான கட்டத்தை நெருங்கிவிட்டது என்பதேயாகும்.

நிறைவேற்று அதிகார சனாதிபதியின் அளவற்ற அதிகாரங்களை வெட்டிக் குறைக்க முயலும் ஐக்கிய தேசிய முன்னணியின் நகர்வுகளும், அதை முறியடித்து எப்படியாவது எதிர்வரும் டிசம்பர் மாத முடிவுவரை காலத்தைக் கடத்திய பின் ஓராண்டு முடிவில் ஏதாவது காரணத்தைக் காட்டி ரணிலின் ஆட்சியைக் கலைக்கும் அவரது உள்நோக்கத்தை இதன் மூலம் சந்திரிகா வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

'ஆளும் கட்சியின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி பண்டாரநாயக்க மற்றும் ரத்வத்த குடும்பத்தவர்கள் ஓடிஒழியப் போவதில்லை.' என்னும் அவர் கூறியிருப்பது அவரது ஆழமான வெஞ்சினத்தையே வெளிப்படுத்துகிறது.

ஆக சந்திரிகா - ரணில் அரசியல் கயிறிழுத்தல் போட்டி ஆரம்பமாகிவிட்டது. அவர்கள் பிடித்திழுப்பது சமாதானக் கயிற்றைத்தான் என்பதுதான் முக்கியமானது.

❖❖



கடந்த வாரம் கிழக்கில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் அரசின் அமைதி நகர்வுகளுக்கு பெரும் சவாலாக அமைந்திருக்கிறது. அரசின் - அதாவது ரணிலின் அமைதி முயற்சிகளுக்கு எதிரான சக்திகள் ஆயுதப்படைகள் மத்தியிலும்,

## 'ஆனந்த'க் கருத்து...

பொலிசிலும் மிகவும் நுணுக்கமாகவும் - திட்டமிட்ட வகையிலும் மீண்டும் ஒரு போரை ஆரம்பிப்பதற்கான பின்தள வேலைகளில் மிகவும் தீவிரமாக முயல்வதையே இது எடுத்துக்காட்டுகிறது.

குறிப்பாக சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மட்டு-அம்பாறை மாவட்டங்களில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் சமாதானத்துக்கு எதிரானவைகள் என்பதில் ஐயமில்லை: விசேட அதிரடிப்படையின் உருவாக்க நோக்கமே எல்லைப்புற பிரதேசங்களில் இருந்து தமிழர்களை வெளியேற்றி, சிங்களக் குடியேற்றங்களை விஸ்தரித்து அதற்குப் பாதுகாப்பும் - சிங்களக் குடியேற்ற வாசிகளுக்கு இராணுவப் பயிற்சிகளை வழங்குவதையே அடிப்படையாகக் கொண்டது.

இம்முறை காஞ்சிரங்குடாப் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட மனித வேட்டையை அடுத்து அவர்கள் முகாமுள் முடக்கி வைக்கப்படுவார்கள் என சிலதரப்பினர் கூறியபோதும் தொடரும் சம்பவங்கள் பொதுமக்களுக்கு- தமிழ் மக்களுக்கு -மேலும் அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

காங்சிரங்குடா,தாண்டியடி படைமுகாம்களுக்கு மேலதிக விசேட அதிரடிப்படையினரை அனுப்பிவைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையானது அப்பகுதி மக்களை மிரட்டும் நடவடிக்கை என்பதைத் தவிர வேறில்லை.

குறிப்பிட்ட காஞ்சிரங்குடா சம்பவம் தொடர்பாக புதிய பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா முன்னாள் வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் பாணியில் கருத்து வெளியிட்டுள்ளமை அவரது சுயமுகத்தை வெளிப்படுத்தியுள்ளது. இப்பகுதியில் அதிரடிப்படையினர் மேற்கொண்ட படுகொலைகள் தொடர்பாக அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை வெளிவரமுன்னரே 'அதிரடிப்படையினர் எவ்வித குற்றமும் செய்யவில்லை... தற்பாதுகாப்புக்காகவே துப்பாக்கிச் சூட்டை நடத்தினார்கள்'. எனக் கருத்து வெளியிட்டு தனது அரச விசுவாசத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஒன்று மட்டும் உண்மை பாதுகாப்பு படைகள் எப்போதுமே அரசில் உள்ளவர்களுக்கும்- தமக்கும் பாதுகாப்பை மேற்கொள்ளும் படைகளாக மட்டுமே உள்ளன. அவை மக்களை பாதுகாக்கும் படைகளாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை என்பதே அதுவாகும்.

❖❖

நெடு காலத்தின் பின்னர் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஒரு இறுக்கமான கருத்தை வெளியிட்டுள்ளார்.

'தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை பயன்படுத்தாத நிலையில் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அரச



## உண்மையான கருத்து...

படைகளால் முடியாது என்பதை திருமலைச் சம்பவம் உணர்த்தியுள்ளது'- இவ்வாறு சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்கவிடம் அவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய சமாதான காலத்திலும் இதுவே மிக முக்கியமான விடயமாகியும் உள்ளது.போர்ச்சூழலில் மக்கள் எச்சரிக்கையாக ஓரளவுக்கேனும் பாதுகாப்பாகவும் தங்களின் நடமாட்டங்களை வைத்துக் கொள்வார்கள். ஆனால் 'அமைதி'அவர்களை ஆபத்தின் பிரவேகங்களை உணரமுடியாது வைத்துவிடுகிறது.

-காஞ்சிரங்குடா-திருமலைச் சம்பவங்கள் புகட்டும் பாடம் இதுவேதான்.

'தொண்ணூற்றைந்து சதவீதமானோரை சிங்களவர்களாகக் கொண்ட பொலிஸ்படையும், தொண்ணூற்றொன்பது சதவீத சிங்களவரைக் கொண்ட இராணுவத்திடமும் இனியும் தமிழ் மக்களின் பாதுகாப்பை நம்பி விட்டுவிடமுடியாது' என்றும் அவர் கூறியுள்ளமையானது மிகவும் சரியான கருத்தென்றே கூறவேண்டும்.

வெறுமனே அரசின் வாக்குறுதிகளும், ஒப்பந்தங்களும், உத்தரவாதங்களும் மட்டும் தமிழ் மக்களை எந்தவகையிலும் பாதுகாக்காது என்பது வரலாறு.

பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியிலிருந்தாலும் சரி ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியிலிருந்தாலும் சரி அவர்களின் கீழ் இயங்கப்போகும் இராணுவமும், பொலிசும், ஏனைய படையினரும் காலங்காலமாக தமிழ் மக்களுக்கு எதிரான சுபாவங்களுடனேயே வளர்க்கப்பட்டவர்கள் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

"சிங்கள மக்கள் தங்களுக்கென பொலிஸ், இராணுவம் மற்றும் ஊர்காவல்படை பாதுகாப்பாக இருக்கின்றது என்ற மனத்துணிவுடன் வாழ்கிறார்கள். ஆனால்,தமிழ் மக்களின் பாதுகாப்புக்கென இருக்கும் ஒரேயொரு அமைப்பான விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை உறுதியாக கடைப்பிடிப்பதால் தான் பொலிசாரும் இராணுவமும் இப்படியெல்லாம் செய்யக் கூடியதாக உள்ளது."

இவ்வாறு சம்பந்தன் அவர்கள் கூறியுள்ளது சிங்கள அரசின் கருத்தில் படுமோ இல்லையோ.... தமிழ் மக்கள் அனைவரும் ஆழமாக கருத்தில்கொள்ள வேண்டிய விடயம் இதுவாகும்.

❖❖

'முஸ்லிம் மக்களுக்கு தனியலகு வழங்கினால் மலையக மக்களுக்கும் தனியலகு வழங்கப்பட வேண்டும், இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வீடமைப்பு-பெருந்தோட்ட தொழில் துறை அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர்



## தனியலகு சுதந்திர நாடாகாது...

காங்கிரசின் பொதுச் செயலாளருமான ஆறுமுகம் தொண்டமான் கூறியுள்ளார்.

தமிழினத்தைப் பிரித்தாலும் பேரினவாத சக்திகளின் ஆதிக்க அரவணைப்புக்கு இஸ்லாமியத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும் பலியாவது அவர்களின் தொலைநோக்கும் தீர்க்க தரிசனமும் அற்ற செயற்பாடேயாகும்.


சிறிலங்காவின் பிரதான ஏற்றுமதி வர்த்தகத்துறையின் முதுகெலும்பாக இருக்கும் பாரிய உழைக்கும் சக்தியான மலையகத் தமிழர்களின் தலைமைகள் வெறுமனே சுயஅரசியல் இலாபநோக்கில் சிந்திப்பதை இனிமேல் பூரணமாக விட்டுவிட வேண்டிய நிலை உருவாகி வருவதை புரிந்துகொள்ளாவிடில் முழுமலையகத் தமிழர்களும் தங்களின் சுயஅரசியல் - வாழ்வியல் - அடையாளங்களை இழக்கவைக்கவே உதவும்.

ஈழத்தமிழராயினும், இஸ்லாமியத் தமிழராயினும், மலையகத் தமிழராயினும் தாங்கள் அடிப்படையில் தமிழர்கள்....சிறிலங்கா அரசின் பேரினவாத ஆட்சியியல் கோட்பாடுகளையொட்டி ஒடுக்கப்பட்டு வரும் சிறுபான்மைச் சமூகத்தவர்கள் என்ற உண்மையினை உணர்ந்துகொள்ள வேண்டிய காலகட்டமிது.

'தனியலகு' என்பதெல்லாம் பேரினவாத அரசுகள் தங்கத் தாம்பாளத்தில் வைத்துத் தரப்போகும் ஒன்றல்ல வேண்டுமானால் இன்னும் ஓரிரு மந்திரி-அரை மந்திரிப் பதவிகளும் நிறைவேற்றவே மாட்டாத சில வாக்குறுதிகளும் கிடைக்கலாம். அவ்வளவுதான்.

ஆறுமுகம் தொண்டமான் போன்ற தலைவர்கள் தங்களின் ஆற்றல்மிக்க மக்களின் சக்தியை ஒன்றிணைத்து ஒட்டுமொத்த தமிழினத்தின் விடிவிற்காக முன்வைத்து போராட வேண்டிய தமது வரலாற்றுப் பொறுப்பினை உணர்ந்து செயற்பட வேண்டிய தருணத்தை தவறவிடக் கூடாது.

❖❖



# மதவடி மயிலர்

செய்தி:- சமாதான முயற்சிகள் தொடர்பாக சிகல உறுமயவுக்குள்- விரிசல்

மயிலர்:- எப்பதான் சிகல உறுமயவுக்குள் ஒற்றுமையும் புரிந்துணர்வும் இருந்திருக்காம்... வெளியாலை பௌத்த சிங்கள இனத்தின் காவலர் போல வேஷம் உள்ளுக்குள் பதவிப்போட்டி, சமாதான முயற்சிகள் தொடர்பாக சண்டை பிடிப்பவர்களை என்னென்று கூறுவது...? ஒன்று மட்டும் சொல்லலாம் பாருங்கோ... சிகல உறுமயவை சிங்கள மக்களே தூக்கியெறிஞ்சு விட்டநிலை... அவையளுக்கை ஒற்றுமை வந்தென்ன... விரிசல்வந்தென்ன எல்லாம் ஒண்டுதான் பாருங்கோ...!

செய்தி:- கிளிநொச்சியில் இராணுவத்தினரின் அரண்களை அகற்றுவதற்கு 40 மில்லியன் ரூபா தேவை...

மயிலர்:- அகற்ற 40மில்லியன் ரூபா தேவையெண்டா அந்த அரண்களை போட எத்தனை மில்லியன் செலவழித்திருப்பினமோ தெரியேல்லை... எல்லாம் மக்களின்ரை வரிப்பணமும் வெளிநாட்டுக்கடனும் தானே... அது மட்டுமே, எங்கடை வளத்தையும்மெல்லே அதுக்குள்ள வெட்டியும் கொத்தியும் கொட்டியிருக்கினம்... கொட்டுறவனுக்கு ஒரு நாள் வேலை, அள்ளுறவனுக்கு பலநாள் வேலை... பாருங்கோ.

செய்தி:- வடக்கு, கிழக்கு புனரமைப்பு நிதியை வேறு பகுதிகளுக்கும் பகிரத் திட்டம்...

மயிலர்:- உது மட்டுமே இன்னும் கனதிட்டம் வைச்சிருப்பினம் கவனமா இருக்க வேணும் பாருங்கோ. உலகம் தாற உதவி கலகக்காரர் கையிலை போனால் புனரமைப்பும் இல்லை புனர்வாழ்வுமில்லை... உலகம் இதிலை கண்டும் காணாததும் போல் இருக்க விடக்கூடாது... பாதிக்கப்பட்டது நாங்கள் நிவாரணம் பெறுவது வேறு ஆரோ எண்டால் சமாதானத்திற்கு என்னதான் அர்த்தமாம்! பிச்சை எடுக்குதாம் பெருமாள் அதைப் பிடுங்கித் தின்னுதாம் அனுமார் எண்ட கதை போலெல்லே இருக்குப் பாருங்கோ...

செய்தி:- தமிழர் தம் பாரம்பரிய கலைப் பொக்கிஷங்கள் வெளியாருக்கு விற்பனை.

மயிலர்:- கலையை இழந்தவன் தலையை இழந்தவனுக்கு சமன்... இது கூட ஒரு வகையிலை திட்டமிட்ட எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை அழிக்கும் வேலையாக இருக்கவும் கூடும் எச்சரிக்கையாக இருக்கும்... எங்கடை பாரம்பரியப் பெருமைகளை பணத்துக்கு விற்பதைப் போலை பாதகச் செயல் வேறொன்றுமில்லை... அதுதான் எங்கடை வரலாற்று முதுசம்... விலைமதிக்க முடியாதற்கு விலைபேசி விற்பது விவேக மற்றவரின் செயல்தான் பாருங்கோ.


செய்தி:- நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பியினர் மக்களால் முற்றாக விரட்டியடிப்பு...

மயிலர்:- நெடுங்காலப் பழியை நெடுந்தீவுச் சனம் தீர்த்திருக்குப் பாருங்கோ... எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே... சொந்தநாட்டிலே... நம் நாட்டிலேயென்று ஒரு பிரபலமான எம்.ஜி.ஆர் கால சினிமாப்பாட்டு தான் நினைவுக்கு வருகுது பாருங்கோ... எட கடற்படையோடையெல்லே தரையிறங்கப் பார்த்திருக்கினம்... கடைசீலை துண்டைக் காணோம் துணியைக் காணோம்... எண்டெல்லோ ஓடியிருக்கினம்...

செய்தி:- தனியார் மயமாக்கல் மூலம் இவ்வாண்டு 2200 கோடி ரூபாய் திரட்ட அரசு திட்டம்.

மயிலர்:- தனியார் மயமெண்ட பேரிலை வெளியார் மயமாக்கல் தான் நடக்கப் போகுது பாருங்கோ... எல்லாவிதமான கஷ்டமும் இனித்தான் வரப்போகுது பாருங்கோ... எல்லாத்தையும் தனியார் மயமாக்கி காசை என்ன நிரந்தர வைப்பிலேயே போடப் போகினம் பாருங்கோ. தனியார் மயமாக்கல் நாட்டையும் மக்களையும் கொஞ்சக் காலத்திலை அநாதைகளாக்கப் போகுது... நாட்டையும் தனியார் மயமாக்காமல் விட்டால் நல்லது...!

தவறை ஒத்துக் கொள்வதில் தோல்வி இல்லை, அந்த ஒப்புதலே வெற்றியாகும். - மகாத்மா காந்தி




01

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நேரடியாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உண்மைத் தரிசனங்களை தன்னுள்ளே உள் வாங்கிக் கொண்ட திருமதி அடேல் பாலசிங்கம் அவர்கள் எழுதிய -'சுதந்திர வேட்கை' தமிழீழ விடுதலைப் போராட்டம் உள்ளிருந்து ஒரு நோக்கு- நூலினை தொடராக வெள்ளிநாதத்தின் ஊடாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

# சுதந்திர வேட்கை

## புதிய தரிசனங்கள்

நாம் பிரியவேண்டிய வேளை வந்து விட்டதை உணர்ந்தேன். படகின் வெளியிணை இயந்திரத்தின் விசிறிகள் சுழன்று, சுழன்று, கடலைக் கடைய கடல்நீர் வெண்நுரையாக வழிந்து கொண்டிருந்தது. பதினேழு ஆண்டுகளாக நாம் வாழ்ந்த மண்ணை, நாம் நேசித்த மண்ணை, நாம் கூடி வாழ்ந்த மக்களை விட்டுப்பிரிந்து செல்லும் நேரம் நெருங்கி விட்டது. கரையிலே எம்மோடு கூடிப் பழகிய விடுதலைப் புலிப்போராளிகள். இளம் பெண்களும், ஆண்களும், பழைய நண்பர்களுமாக எல்லோருமே ''போய் வாருங்கள்'' என்று கைஅசைத்தபடியே கரை நீளம் நின்றார்கள். நீலம் பாரித்த கரையோர நீர்ப்பரப்பிலிருந்து இந்து மா கடலின் மங்கலான ஆழப் பகுதிக்குள் படகு மெதுவாக எம்மை உந்திச் சென்றபோது, கரையிற் தென்பட்ட மனித உருவங்களும் நீள் கரையோர இயற்கைக் காட்சியும் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின. குளமாகி விட்ட எனது கண்களில், கடலோர நிலப்பரப்பு ஒரு மெல்லிய கறுப்புக் கீறாக மறைந்து கொண்டிருந்தது. என்னில் ஒரு பகுதியை பின்னால் விட்டு விட்டு நான் போய்க் கொண்டிருந்தேன்.

எம்மை எதிர்கொண்டு ஓடி வந்தது இந்துமா கடல். நாம் பிசகான வேளையில் வந்திருக்கின்றோம் என்பதையும், அடுத்துவரும் பலமணிநேரம் வாழ்க்கையே வெறுக்கும் அளவிற்கு நிலைமை மோசமானதாக இருக்கப் போகின்றது என்பதையும் அது தயங்காமல் எமக்கு உணர்த்தியது. வேண்டாத விருந்தாளிகளாக நாம் அந்தப் பரந்த நீர்ப் பர்ப்பில் நின்றோம். மேலெழுந்து சுழற்றியடித்த அலைகள் வெளிப்படையாகவே தமது சீற்றத்தைக் காட்டின. விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதி சூசை, படகின் அணியத்தில் கட்டளை நிலையெடுத்து நின்று, படகைப் பொறுபோடு நேர்த்தியாகச் செலுத்திக் கொண்டிருந்தார். கொந்தளிக்கும் கடலிலே, சீறியெழும் அலைகளினூடாக சூசையும் அவரது அணியினரும் இலகுவாக படகோட்டும் இலாவகம் கண்டு நான் மரியாதை கலந்த வியப்போடு நின்றேன். வெறியாடும் கடல்மீது தடுமாறிச் செல்லும் படகில் உறுதி தளராது அவர்கள் கால் பதித்து நின்றார்கள். குளிர்நீர் படகு மீது சவுக்கடியாக விழுந்து அவர்களைத் தெப்பமாக நனைத்த போதும் கடமையில் கண்ணாக நின்று செல்லும் திசையின் இலக்கைக் குறி வைத்து, படகினை நுட்பமாக இயக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இளம் போராளிகள் தான். ஆயினும் வயதிற்கு மிஞ்சிய சாமர்த்தியமும் தன் நம்பிக்கையும் அவர்களிடம் இருந்தது. சினந்து எழும் அலைகளின் மிரட்டல்களுக்குக் கிறங்காது, கடலும் படகும் ஆட, தாமும் இலாவகமாக அந்த ஆட்டத்திற்கு ஒத்திசைவாக அசைந்தவாறு அவர்கள் படகோட்டினார்கள். தளபதி சூசை காட்டிய திசையிற் பார்த்தோம். எமக்குப் பின்னால், தூரத்திலே, மங்கலாக இரண்டு கரும்புள்ளிகள் தெரிந்தன. இரண்டும் படகுகள். எமது வேகத்திற்கு அனுசரணை யாக வந்து கொண்டிருந்தன. நாம் சென்று கொண்டிருந்தது போன்ற அதே மாதிரியான படகுகள். ஆனால் தூரத்தில் சிறிய உருவத்தில் தெரிந்தன. துள்ளிப் பாய்ந்து, முல்லைத்தீவுக் கடற்பரப்பை உழுதபடி வந்து கொண்டிருந்தன.எமது காவற் கவசங்கள் இவை. துணிச்சல், தியாகம், அர்ப்பணிப்பு - அவற்றோடு வெடிமருந்துகளும் நிரம்பிய படகுகள். இவர்கள் கடற்கரும் புலிகள். எமது பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்டவர்கள்.

நாம் உயிர்வாழ வேண்டும் என்பதற்காக, தமது உயிரையும் கொடுக்கத் தயாராக வந்தவர்கள். எமது பயணத்துக்கு அச்சுறுத்தலாக சிறிலங்கா கடற்படைப் படகுகள் வருமயானால் அவற்றோடு மோதி அவற்றை அழித்தொழிக்கும் முடிவோடு வந்து கொண்டிருந்த ஆண்களும் பெண்களும் இவர்கள். எமது உயிர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக எத்தகைய தியாகத்தையும் புரிய மக்கள் தயாராக இருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும் போது, இந்த அன்பிற்கும், மதிப்புக்கும் தகுதி யுடையவள் அல்ல என நான் உணர்ந்து கொண்டது இதுதான் முதற்தடவையல்ல. தளபதி சூசையை எனக்கு நீண்ட காலமாகத் தெரியும். சிங்களக் கடற் படையால் எழக்கூடிய ஆபத்துகள் பற்றி அவர் நன்கறிவார் என்பதும், அப்படியான ஆபத்தான சூழ்நிலை எழுந்தால் அதனை சமாளித்து வெற்றி கொள்ளும் திறனாற்றல் அவரிடமுண்டு என்பதிலும் எமக்கு அசையாத நம்பிக்கை இருக்கிறது. ஆனால் எனது கணவர் பாலாவைப் பொறுத்தவரை அவருக்கு மேலதிகமாக ஒரு ஆபத்து இருந்தது. அது அவருக்கு உள்ளே, அவருடைய உடலில் இருந்தது.

பாலாவுக்கு சிறுநீரக நோய். சிறுநீரகச் செயற்பாடு பாதிக்கப்பட்டு நாட்பட்டிருந்த வியாதி திடீரென சமீபத்தில்தான் கடுமையாக்கி அவர் தப்பிப் பிழைத்திருந்தார். அவர் பிழைத்தது அதிசயம் தான். அவரைப் பராமரித்து வந்த மருத்துவர்களின் கருத்து அதுதான். இருபத்தைந்து ஆண்டுகளாக நீடித்த நீரிழிவு நோய் அவரை நன்றாகப் பதம் பார்த்து விட்டது. அவரது நோயின் நிலைமையைச் சோதித்துப் பார்க்கக்கூடிய மருத்துவக் கருவிகள் எதுவும் முல்லைத்தீவில் இருக்கவில்லை. இதனால் அவரைச் சோதிக்கவோ, அவரது நோய் எத்தகையை கடுமைநிலை கண்டிருக்கின்றது என்ற விளக்கம் பெறவோ முடியவில்லை. அறுவைச் சிகிச்சை செய்த பின்னர்தான் சிறுநீரகம் பெருமளவு இயங்கவில்லை என்பதும், சிறுநீரக முடக்கம் மிக மோசமாக இருந்தது என்பதும் எமக்கு முழுமையாகத் தெரியவந்தது. அவருடைய இடது சிறுநீரகம் ஒரு தேங்காய் அளவிற்கு உப்பி இருந்தது என்பதும், எந்நேரமும் வெடித்துப் பிளக்கும் நிலையில் இருந்தது என்பதும் எமக்கு முன்னரே தெரிந்திருந்தால், மருத்துவப் பராமரிப்பும், சிகிச்சைக் கருவிகளும் இல்லாமல் ஆபத்து நிறைந்த கடற்பயணத்தை மேற்கொள்ள எமக்குத் துணிவு வந்திருக்குமோ தெரியாது.

முல்லைத்தீவில் பாலாவின் சிறுநீரகம் கடுமையாகப் பாதிப்படைந்து, அதனால் உயிராபத்து ஏற்பட்டு அதிலிருந்து அவர் தப்பிப் பிழைத்த போதும் அவரது உடல்நிலை மிக மோசமாகவே இருந்தது. அதிர்ஷ்ட தேவதை அவர் பக்கம் இருந்ததால்தான் அவர் தப்பிப் பிழைத்ததோடு, மிகவும் நீண்ட, ஆபத்தான வங்களாவிரிகுடாக் கடற் பயணத்தையும் சமாளித்தார் என்று கூறவேண்டும். வன்னி என்றால் அங்கே மலேரியா, நெருப்புக் காய்ச்சல், மஞ்சள் காமாலை, விஷக்காய்ச்சல்; இனி எந்த நாளும் வரக்கூடிய வெவ்வேறு நோய்கள்! இவைகளால் சுகதேகிகளுக்கே அங்கு ஆபத்து ஏற்பட்டு விடுகின்றது. சிறுநீரக நோயால் உயிர் ஆபத்து நிலையில் இருந்த பாலாவுக்கு இவை நிச்சயமாகச் சாவைக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனபடியால், ஒருபக்கம் அவருடைய சிறுநீரக, நீரழிவு வியாதிகள். மறுபக்கம் வன்னி வெப்ப சூழலில் எழக்கூடிய நோயாபத் துக்கள். பாலாவின் உடல்நலம் வேகமாக மோசம் அடைவதை அவதானித்த இயக்க உறுப்பினர் களும் சரி, பொதுமக்களும் சரி, அவர் பயணம் செய்யக்கூடிய நிலையில் இருக்கும்போதே, எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு விரைவாக அவரை வெளியேற்றி விடவேண்டும் என்று ஒரே குரலில் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

இதனால் ஒருபுறம் பிரிவுக் கலக்கம்; மறுபுறம் நோய் அச்சம். இவற்றுக்கு மத்தியில்தான் தமிழீழத்தை விட்டு நாம் கடல் மார்க்கமாக வெளியேறுவதற்கு பிரபாகரன் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். இப்படியான பயணத்தில் ஆபத்து இருப்பது எமக்குத் தெரியும். ஆனால் வேறு வழி இருக்கவில்லை. ஒன்றில் முல்லைத்தீவில் தங்கிநின்று சாவைச் சந்திக்க வேண்டும். அல்லது, ஆபத்தான பயணத்தை மேற்கொள்ளவேண்டும். சிலசமயம் வெளிநாட்டில் சரியான மருத்துவப் பராமரிப்புப் பெற்று, அவர் மேலும் சிறிது காலம் உயிர்வாழ இயலுமாய் இருக்கும் என்பதையும் சிந்தித்தோம். ஆனால் சமுத்திரத்தில் இறங்கியதும் இரக்கமற்ற கடுமையான கடற்சூழல் பாலாவை அடுத்த ஆபத்தான கட்டத்துக்கு தள்ளிவிட அதிகநேரம் பிடிக்கவில்லை. ஆர்ப்பரித்துக் குமுறும் அந்தப் பெண்ணம் பெரிய கடலில், எமது சின்னஞ்சிறிய படகு, முக்கி முக்கித் தத்தளித்தபடி முன்னேறிக் கொண்டிருந்தது. அடிவானத்தில் ஒளி மங்கிக் கொண்டிருந்தது. அந்த நேரம் பாலாவின் முகம் வெளிறத் தொடங்கியது. இயலாமை அதிகரிப்பது தெரிந்தது. அவர் வயிற்றை எக்கி, எக்கி வாந்தி எடுத்துக் கொண்டிருந்தார். அதனைக் கடற்புலி வீரர்கள் பாத்திரங்களில் ஏந்திக் கொட்டினார்கள். அவருடைய நெற்றியையும் தாங்கிப் பிடித்தார்கள். எனக்கும் கடல் குமட்டல் குணம். ஆற்றாமை என்னையும் தொற்றிக் கொண்டது. கடற்பயணக் கனதி என்னையும் தாக்கியது. இந்தப் பயணம் பற்றி நான் கொண்ட அச்சங்கள் இப்பொழுது மெய்யாகி விட்டதை உணர்ந்தேன். நாம் புறப்படுவதற்கு முன்னரே, அனேகமாக மூன்றுவகை உடல்நல ஆபத்துகள் பாலாவுக்கு வரலாமென அறிந்து கொண்டேன். அவருடைய இரத்த அழுத்த மாத்திரைகள் தாழ்ந்த குருதி அழுத்தத்தை ஏற்படுத்தலாம். அடுத்தது கடல்வாந்தியால், உடலில் நீர்வற்றி, சிறுநீரக வியாதியைக் கடுமையாக்கிவிடலாம். இனி, அளவுக்கு மிஞ்சி வாந்தி எடுத்தால் குருதியோட்டத்தில் 'குளுக்கோஸ்' குறைந்து மயக்கநிலை ஏற்படலாம். எனக்கும் குமட்டல். தியங்கிப் போனேன். இடையில் விழித்து அவரை நிமிர்ந்து பார்த்தேன். அவரது நெற்றியில் வியர்வைத் துளிகள். இது எந்தவகையான உடல்நல ஆபத்து? அனுமானிக்க முடியவில்லை. சூசையின் பார்வை ஏதாவது செய்யும்படி என்னைக் கெஞ்சியது. பாலா கையை நீட்டினார். 'குளுக்கோஸ்' குறைவு ஏற்பட்டிருப்பதை சைகையால் காட்டினார். தமக்கு சீனி வேண்டும் என்பதையும் உணர்த்தினார். மிகத் தேவையான மருந்து அது. நான் ஆயத்தமாகக் கொண்டு சென்ற பொதியில் இருந்து சீனி எடுத்துக் கொடுத்தேன். அதை நக்கிய சில நிமிடங்களில் அவருடைய நெற்றி வியர்வை உலர்ந்தது. அந்த நேரம் என்னால் இயன்றது அவ்வளவுதான். படகு ஆடிய ஆட்டத்தில் மிக எளிமையான மருத்துவ உதவியைக் கூட வழங்க முடியவில்லை. படகின் பக்கவாட்டில் பாலா சரிந்து படுத்தார். ஆனால் வெகுவாக நைந்து போயிருந்தார். தமது நெற்றிக்கு முன்னே அவர் தமது கையைச் சோர்வாக சுழற்றியபோது, அவருக்குத் தலை கிறுகிறுக்கிறது என்பதும், இரத்த அழுத்தம் வடிந்திருக்க வேண்டும் என்பதும் எனக்குப் புரிந்தது. சில நிமிடங்கள் வயிற்றை மீண்டும் எக்கப் போகிறார் என்பதும் அதன் பின் களைத்து விழப்போகிறார் என்பதும் தெரிந்தது. அவருடைய உடலும் சோர்ந்து, துவண்டு போய் இருந்தது.

எமது பயணம் தொடர்ந்தது. பாலாவின் நிலை ஒன்றில் நேரம் போகப் போகத் தேறி, சமாளிக்கும்



நிலைக்கு வந்துவிடும். அப்படியானால், தொடர்ந்து செல்லலாம் என்ற நம்பிக்கை. அல்லது அவரால் இயலாமல் போய்விடும். அந்த நிலையில் திரும்பிவிட வேண்டும் என்ற முடிவு. எனக்கு இருதலைக் கொள்ளி எறும்பு நிலை. ஆனால் நாம் போக வேண்டிய தூரத்தை விட, ஓடி வந்து விட்ட தூரம் அதிகம் என்பது தெரிந்தது. ஆகவே திரும்பப் போவதில்லை. பயணம் தொடரவேண்டியது தான். வேறு வழியில்லை என்பது அவருக்கும் தெரியும். சூசை என்னைப் பார்த்தார். கடற்போராளிகள் ஒருவரை ஒருவர் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எதையாவது செய்ய வேண்டும் என்று சூசை தவித்தார். படகின் வேகத்தைக் குறைக்குமாறு ஓட்டியிடம் உரத்துக் கூறினார். ''கடற்படைப் பீரங்கிப் படகுகள் திருகோணமலையிலிருந்து புறப்பட்டு விட்டன,'' என்று பதில் வந்தது. எட்டத்திலிருந்து வரப்போகும் ஆபத்தை உதாசீனப்படுத்தியவராக, ''கொஞ்ச நேரம் மெதுவாக ஓட்டு,'' என்று சூசை திரும்பவும் கத்தினார். ஆழக்கடலின் ஊடாகவும், அதிகரிக்கும் இருட்டின் ஊடாகவும், கடலின் நிலைமைக்கு ஏற்றவாறும், பாலாவின் உடல் உபாதைக்கு ஏற்றவாறும் படகின் வேகத்தை மாற்றியபடி சென்று கொண்டிருந்தோம். சூசை தான் குந்தியிருந்த அணியத்தின் விளிம்பிலிருந்து ஒரு கணமும் நகரவில்லை. கடல் மீது, தமது கூர்மையான பார்வையைத் தூரத்தில் பரத்தியபடி இருந்தார்; அவ்வப்போது பாலாவின் மீது ஒரு கண்ணோட்டம். இனித் தமது தோழர்களுக்கு திசை பற்றியும் வேகம் பற்றியும் குறிப்புகள். சூசையும் அவருடைய வீரர்களும் இப்படிப்பட்ட பயங்கரச் சூழலில் வாழப் பழகியவர்கள். களைப்பின் சுவடோ, ஆபத்தின் கலக்கமோ அவர்களில் தெரியவில்லை. தற்கொடைத் தியாகத்தின் முதிர்ச்சியில் முகிழ்ந்த அமைதி வடிவமாக, ஓர் ஒத்திசைவோடு இயங்கும் உடலின் வெவ்வேறு உறுப்புகள் போல சூசையும் அவருடைய வீரர்களும் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருந்த உபத்திரவத்திற்கு முடிவே இல்லையா என்று நான் அயர்ந்து கொண்டிருந்த போது, ''அங்கை பாருங்கோ அன்ரி'' என்று இயந்திரங்களின் இரைச்சலுக்கு மேலாக, சூசை என்னை நோக்கிக் குனிந்து கத்தியபடியே, தூரத்தில் மினுங்கிய ஒளியைச் சுட்டிக் காட்டினார்.

(தொடரும்)

# “தமிழீழக் காவல்துறையினரின் சேவையானது நாடுமுழுவதற்கும் விஸ்தரிக்கப்படவேண்டும்”

## ஓர் ஆங்கிலப் பத்தி எழுத்தாளரின் ஆலோசனை

இருதசாப்தங்களாக ஒரு கொடிய போருக்கு முகம்கொடுத்து,தமது உரிமைகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும் ஒரே தேசியத் தலைவரின் வழிநடத்தலின்கீழ் ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில்,இன்று போர் ஓய்ந்து ஒரு அமைதிச் சூழல் தோன்றியுள்ள நிலையில்,அவர்கள் மத்தியில் ஒரு உறுதியான, ஊழல்களற்ற ஒரு நீதி,நிர்வாகக் கட்டமைப்புக் கட்டியெழுப்பப்பட்டிருப்பது கண்டு, இந்த நாட்டின் தென்பகுதிமக்களும், சர்வதேச சமூகமும் வியந்துநிற்பதை அவதானிக்கமுடிகிறது.



**சிறிலங்காவின்** கந்தானைப் பொலிஸ் பகுதியில் வெலிசற சந்தியில் அண்மையில் (04-10-2002) இடம்பெற்ற கோரவிபத்து ஒன்றில் இரு பாடசாலை மாணவிகள் கொல்லப்பட்டனர்.பாதசாரிகள் வீதியைக் கடப்பதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட பாதைக் கடப்பினூடாக மேற்படி மாணவிகள் இருவரும் வீதியைக் கடக்க முயன்றபோதே,வேகமாக வந்த அரச போக்குவரத்துக்கழக பஸ்ஒன்று இந்த மாணவிகள்மீது மோதி அவர்களைக் கொன்றுதீர்த்தது.இந்த விபத்தைத் தொடர்ந்து உடனடியாக அப்பகுதியில் திரண்ட பொதுமக்கள் குறிப்பிட்ட பஸ்ஸையும் சாரதியையும் மோசமாகத் தாக்கியதுடன், அவ்வேளை வீதியால் வந்த மற்றுமொரு பஸ்ஸையும் தாக்கிச் சேதப்படுத்தினர். கட்டுக்கடங்காமல் சென்ற மக்களெதிர்ப்பைச் சமாளிப்பதற்காக பொலிசார் அப்பகுதியில் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பாவிக்கவேண்டியேற்பட்டது.சுமார் நாற்பதுபேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். பஸ் சாரதி கடுமையாகத் தாக்கப்பட்டு படுகாயமுற்றநிலையில் தற்போது வைத்தியசாலையில் பொலிஸ்

**-அனசூயா-**

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர்மீது மேலும் தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சம் காரணமாக இவரை கொழும்புக்கு மாற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சிறிலங்காவைப் பொறுத்தவரையில் இதுதான் முதன்முதல் நடைபெற்ற பயங்கர வீதிவிபத்து என்று சொல்லமுடியாது.இந்த ஆண்டின் ஆரம்பம்முதலே கொழும்பிலும், அதனைச் சூழவுள்ள பல பகுதிகளிலும் அடிக்கடி வீதிவிபத்துக்கள் நடந்தேறின.இதில் பலர் கொல்லப்பட்டும், படுகாயமடைந்தும் போயினர்.சில இடங்களில் அப்பகுதிப் பொதுமக்கள் திரண்டு விபத்துக்குக் காரணமான வாகனங்கள்மீதும், சாரதிகள்மீதும் தாக்குதல்கள் மேற்கொண்டுமுள்ளனர். இத்தகைய மோசமான வீதிவிபத்துக்களைத் தவிர்ப்பதற்காக பொலிசார் தீவிரமுயற்சிகள் மேற்கொண்டுவருவதாகக் கூறப்படுகின்றபோதும்,பொலிசாரது நடவடிக்கைகளால் வீதிவிபத்துக்கள் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதாகக் கூறமுடியாதளவுக்கு அவை தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

சிறிலங்கா அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே போர்நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு நாட்டில் ஒரு சமாதானச் சூழல் மலர்ந்தபிற்பாடே வீதிவிபத்துக்கள் நாட்டின் பலபகுதிகளிலும் அதிகரித்துள்ளதை புள்ளிவிபரங்கள்மூலம் அறிந்துகொள்ளமுடிகிறது. அமைதிச் சூழல் ஏற்பட்டபின்னர், நாட்டின் பல பகுதிகளிலும் பாதுகாப்புக் கெடுபிடிகள் தளர்த்தப்பட்டு, போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும் பெருமளவு நீக்கப்பட்ட நிலையில் தற்போது நாடுபூராகவும் பொதுமக்களின் போக்குவரத்து முன்னெப்போதும் இல்லாதளவுக்கு அதிகரித்துள்ளது.இந்த அதிகரித்த போக்குவரத்துக்கு ஏற்ப போக்குவரத்து நடைமுறைகள் உரியளவுக்கு கடைப்பிடிக்கப்படாமையே இந்த வீதிவிபத்துக்களுக்குக் காரணம் எனலாம்.யுத்தக் கெடுபிடிச் சூழலில் நாட்டை நிர்வகித்துப் பழக்கப்பட்டுப்போன சிறிலங்காவின் இராணுவத்துக்கும், பொலிசுக்கும், தற்போதைய சமாதானச் சூழலில் சிவில் நிர்வாக நடைமுறைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதையே நிலைமைகள் சுட்டுகின்றன.

இதுதவிரவும் சிறிலங்காப் பொலிசுக்குள் நிலவும் ஊழல்களும் இந்த விபத்துக்கள் தொடரக்காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.பல பஸ்போக்குவரத்துக் கம்பனிகளை நடாத்திவருபவர்கள் இளைப்பாறிய முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்களாக இருப்பதால், இவர்கள்மீது சட்டத்தின் பிடி இறுக்கப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.அவ்வாறே சட்டத்தின் பிடியில் சிக்கவேண்டியேற்படும் சந்தர்ப்பங்களிலும் லஞ்சம்,அரசியல் தலையீடு என்பவற்றின் காரணமாக குற்றவாளிகள் எளிதில் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடுகிறார்கள். இதனால் வீதிவிபத்துக்கள் தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

இவற்றுக்கு மாறாக, இருதசாப்தங்களாக ஒரு கொடிய போருக்கு முகம்கொடுத்து,தமது உரிமைகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும் ஒரே தேசியத் தலைவரின் வழிநடத்தலின்கீழ் ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில்,இன்று போர் ஓய்ந்து ஒரு அமைதிச் சூழல் தோன்றியுள்ள நிலையில்,அவர்கள் மத்தியில் ஒரு உறுதியான, ஊழல்களற்ற ஒரு நீதி,நிர்வாகக் கட்டமைப்புக் கட்டியெழுப்பப்பட்டிருப்பது கண்டு, இந்த நாட்டின் தென்பகுதிமக்களும், சர்வதேச சமூகமும் வியந்துநிற்பதை அவதானிக்கமுடிகிறது. இந்த நீதி நிர்வாகக் கட்டமைப்பையே முழுநாட்டுக்குமுரியதாக்கினால் நன்று என தென்பகுதி புத்திஜீவிகள் இப்போது அபிப்பிராயம் தெரிவிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

♣♣

நாட்டில் அமைதிச் சூழல் தோன்றியதைத் தொடர்ந்து,புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிப் பெருநிலப்பரப்பிலும் மோசமான போக்குவரத்து நெருக்கடிகள் தோன்றின.ஏ-9 நெடுஞ்சாலை மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்துவிடப்பட்டதும், அதனூடாக மிகஅதிகளவிலான போக்குவரத்துக்கள் இடம்பெற ஆரம்பித்தன. யாழ்ப்பாணத்தில் தமது சொந்த இடங்களைப் பார்ப்பதற்காகச் சென்ற தமிழ்மக்கள் ஒருபுறமும், இதைவிட மிக மிக அதிகமாக, முதன்முதலாக யாழ்ப்பாணத்தை பார்வையிடுவதற்காக வகைதொகையின்றி தென்பகுதியிலிருந்து வாகனங்களில் பயணித்த தென்பகுதிச் சிங்களவர்கள் எனவும் ஏ-9 நெடுஞ்சாலை போக்குவரத்து நெரிசலுக்கு உட்பட்டது.

ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக பராமரிக்கப்படாமலும், அபிவிருத்தி செய்யப்படாமலும் இருந்த இந்த ஏ-9 நெடுஞ்சாலை,படைநடவடிக்கைகள் காரணமாக முற்றாகச் சீரழிந்தே காணப்பட்டது.இந்நிலையில் திடீரெனத் தோன்றிய போக்குவரத்துத் தேவைகளுக்காக இவ்வீதி ஓரளவுக்குப் புனரமைக்கப்பட்டபோதும், போக்குவரத்து நெரிசல்கள் மிக்க ஒரு நெடுஞ்சாலைக்கு இருக்க வேண்டியளவு தகுதிக்கு அது அபிவிருத்திசெய்யப்படவில்லை. இந்நிலையிலும், அந்த வீதியை இடையூறுகளேதுமின்றிப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தக்கூடியதாகத் திட்டமிட்டதில் தமிழீழக் காவல்துறையினரின் பங்கு முக்கியமானது.

ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டபின்பே,திடீரென ஏற்பட்ட தேவைக்கு ஏற்ப தமிழீழக் காவல்துறையில் போக்குவரத்துப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது என அதன் பொறுப்பாளர் பா.நடேசன் அண்மையில் கொழும்பு தமிழ் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தார். ஆனாலும் காவல்துறையினரின் போக்குவரத்துப் பிரிவினர் மிகக் கச்சிதமாக இந்த நெடுஞ்சாலையில் போக்குவரத்து நடைமுறைகளைக் கண்காணித்துவருகின்றனர்.காவல்துறையினரின் இந்தச் செயற்பாடுகள் குறித்து, அண்மையில் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையொன்றில்,ஒரு பத்தி எழுத்தாளர் வியந்து போற்றி எழுதியிருந்தார்.அண்மையில் ஏ-9 நெடுஞ்சாலையில் நடைபெற்ற ஒரு வீதி விபத்துத் தொடர்பில் காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டியே அவர் இந்தப் பத்தியை வரைந்திருந்தார்.

செப்டம்பர்மாதம் 19 ஆம் திகதி புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் பழையமுருகண்டியில் நடைபெற்ற ஒரு வாகன விபத்தில், எட்டுவயதுச் சிறுவன் ஒருவன் பலியானான்.இந்த விபத்துத் தொடர்பில் வாகனச் சாரதியும்,குறிப்பிட்ட பஸ்சும் தமிழீழக் காவல்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டனர்.குறிப்பிட்ட சாரதியும்,வாகன உரிமையாளரும் தமிழீழ நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டு,சாரதியும்,அவர் ஓட்டிவந்த பஸ்சும் ஒன்றரை இலட்சம் ரூபா பிணையிலே விடுவிக்கப்பட்டன. ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி இவர்கள் மீண்டும் வழக்குக்குச் சமுகமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர். காவல் துறையினரின் இந்த நடவடிக்கை தொடர்பிலேயே இந்தப் பத்தியெழுத்தாளர் பாராட்டி எழுதியுள்ளார்.

‘ தமிழீழக் காவல்துறையினருக்கு மூன்று பாராட்டுக்கள்’ என்ற தலைப்பில் இப்பத்தியை எழுதியுள்ள ஊவர்,தான் வழமையாக தமிழீழ விவகாரங்கள் தொடர்பில் எழுதுபவரல்ல எனவும்,ஆனாலும் நல்ல விடயங்கள் எங்கு நடந்தாலும் அதைப் பாராட்டத்தானே வேண்டும் என்றும் குறிப்பிட்டே இப்பத்தியை வரைந்துள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பில் முதலில், விபத்தில் கொல்லப்பட்டவரின் குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபா நஷ்டஈடாகச் செலுத்துமாறு பணிக்கப்பட்டபோது, ஒரு உயிருக்கு இவ்வளவு தொகை மிக அதிகம் எனக்கூறி பஸ் உரிமையாளர் அதற்கு மறுத்துவிட்டதாகவும் எழுதியுள்ள அவர்,ஒரு உயிரை இவ்வளவு மலிவாகவா இவர்கள் மதிப்பிடுகிறார்கள் என ஆச்சரியப்படுகிறார். இறுதியாக இந்தச் சாரதியும் பஸ்சும் ஒன்றரை இலட்சம் ரூபா பிணையிலேயே விடுவிக்கப்பட்டன என்பதையறிந்ததும் காவல்துறையினர் மீது தனக்கு மிகவும் மதிப்பு ஏற்பட்டதாக அவர் குறிப்பிடுகிறார்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதும் எழுந்த அவசர தேவையையொட்டி ஆரம்பிக்கப்பட்ட தமிழீழக் காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவு,இவ்வாறு செயற்பட்டுவருவது உண்மையில் தென்பகுதியில் பலரையும் ஆச்சர்யத்துக்கு உட்படுத்தியுள்ளது.திடீரென எழுந்த போக்குவரத்து நெரிசலைச் சமாளிப்பதற்காக ஏ-9 வீதியில் காவல்துறையினர் வேகக் கட்டுப்பாட்டை நடைமுறைப் படுத்தியுள்ளனர். பொதுவில் மணிக்கு 40 கி.மீ.வேகமும்,சனநெரிசல் மிக்க முக்கிய பகுதிகளில் மணிக்கு 30 கி.மீ.வேகமுமே காவல்துறையினரால் அனுமதிக்கப்படுகிறது.இந்த வேகக் கட்டுப்பாட்டை கண்காணிப்பதற்கு உரிய கருவிகள் இன்றியும்,வெறும் நிறுத்தற்கடிகாரத்தை (STOP WATCH) வைத்தே காவல்துறையினர் வேகத்தைக் கட்டுப்படுத்திவருகின்றனர்.இந்த ஒழுங்கை மீறுவோருக்கு 250 ரூபா தண்டம் விதிக்கப்படுகிறது.இந்த கடுமையான நடைமுறைகள் காரணமாகவே ஏ-9 வீதியில் பெருமளவுக்கு விபத்துக்கள் கட்டுப்படுத்தப்பட்டுவருகிறது.நாட்டின் பிறபகுதிகளுடன் ஒப்பிடும்போது,ஏ-9 வீதியில் விபத்துக்கள் பெருமளவு குறைவு என்றே குறிப்பிடவேண்டும.கொழும்பிலிருந்து யாழ்நோக்கிப் பயணித்த பல வாகனங்கள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வெளியிலேயே மோசமான விபத்துக்களுக்கு உட்பட்டுள்ளன என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இதன்காரணமாகத்தான் போலும், இந்த ஆங்கிலப் பத்தி எழுத்தாளர், ‘நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள வீதிகளைவிட தமிழீழப் பகுதிகளிலுள்ள வீதிகளே, போக்குவரத்துக்கு மிகவும் பாதுகாப்பானதாக இருக்கப்போகின்றன’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு(தமிழீழக் காவல்துறையினரின் காவல் நிலையத்தை அவர் இப்படித்தான் குறிப்பிடுகிறார்) சென்ற தனது அனுபவத்தை இந்தப் பத்தி எழுத்தாளர் வியந்து விபரிக்கிறார்.அங்கே வெடித்த மோட்டார் ஷெல் துண்டுகளை வைத்து காவல்துறையினர் அமைத்துள்ள பூச்சாடிகள் பற்றிக் குறிப்பிட்ட அவர், ‘நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள பலரைப் போலும்,இவர்கள் எதனையும் விரயமாக்கும் பண்புகொண்டவர்களல்ல’ எனக் குறிப்பிடுகிறார்.காவல் நிலையத்தின் உட்பகுதி,வழமையான பொலிஸ் நிலையங்களைப் போல்,சங்கிலிகள், தடிகள், பொல்லுகள் என நிரம்பியிருக்காது அழகாக அது காணப்பட்டதாக அவர் விபரிக்கிறார்.உள்ளே நுழைந்ததும்,நேராக முன்சுவரில் மாட்டப்பட்டிருந்த தேசியத் தலைவரின் படமே தனது கவனத்தை ஈர்த்ததாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

தற்போதைய சமாதான முயற்சிகளின் ஒரு படிநிலையில், நாட்டில் ஒரேயொரு பொலிசும், இராணுவம் மற்றும் கடற்படையும், விமானப்படையுமே இருக்கவேண்டும் என்கின்ற வாதம் தென்பகுதிச் சிங்கள முக்கியஸ்தர்கள் சிலரால் முன்வைக்கப்படுகின்றது.இந்த விடயத்தில்,அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களும்,சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவருபர்களும் மண்டையைப் போட்டுப் பிய்க்கிறார்கள். இதுபற்றிக் குறிப்பிடும் மேற்படி ஆங்கிலப் பத்தி எழுத்தாளர்,தன்னிடம் இதற்கு ஒரு அற்புதமான திட்டம் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்.அவரது திட்டம் இதுதான்.

“முழுநாட்டுக்கும் தமிழீழம் வழங்கக்கூடிய சிறந்தனவற்றை நாம் பெற்றுக்கொள்வோம்.வடக்குக்கும் தென்பகுதிக்குமான பொலிசாக தமிழீழப் பொலிசாரே இருக்கட்டும்”என்று குறிப்பிடுகிறார் அவர்.இதன்மூலம்,நாட்டுமக்கள் முழுப்பேரும் சிறந்த நன்மையைப் பெறுவர் என்பது அவரது அபிப்பிராயமாக இருக்கிறது.

தமிழீழப் பொலிசாரை தென்பகுதிக்கும் நியமிக்கும் தனது திட்டத்துக்கு மாற்றீடாக சிறிலங்கா இராணுவத்தினரே முழுநாட்டுக்கும் உரிய ஒரே இராணுவத்தினராக இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.ஆனாலும்,தமிழீழக் காவல்துறையினரின் செயற்பாடுகள் பற்றியும்,அவர்களது பணியகங்களையும் அறிந்துகொண்டதுபோல, விடுதலைப் புலிகளின் இராணுவக் கட்டமைப்பையும்,அவர்களது ஒழுக்நெறிகள்,கட்டுப்பாடுகளையும் அவர் அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிட்டுமாயின் ஒருவேளை அவர் தனது இந்த அபிப்பிராயத்தையும் மாற்றிக்கொண்டுவிடுவார்.முழுநாட்டுக்கும் புலிகளின் இராணுவமே பொருத்தமானது என்றும் அவர் துணிந்து கூறிவிடுவார் என்பதில் ஐயமென்ன இருக்கிறது.

இந்தப் பத்தி எழுத்தாளர் அறிந்துகொண்டுள்ள விடயங்களைத் தென்பகுதிச் சிங்கள மக்கள் அறிந்துகொள்வார்களா கவிருந்தால், அவர்களது அபிப்பிராயமும் இதுவாகத்தானே இருக்க முடியும்.எந்தவொரு குடிமகனும், தன்னுடைய வரிப்பணத்தில் சம்பளம் பெற்றுத், தனக்குச் சேவையாற்றவென நியமிக்கப்பட்டுள்ளவர்கள், ஊழல்களற்ற சிறந்த சேவையாளர்களாக இருக்கவேண்டும் என்றுதானே எதிர்பார்ப்பான்.

||

பிறர் தவறுகளைக் கண்டு தன் தவறுகளைத் திருத்துபவன் அறிவாளி. - ப்ளூட்டார்க்

பிரிட்டன் - கேம்பிரிட்ஜ்சில் வாழும் சிங்களப் பேராசிரியர்
**'அட்றியன் விஜயமானா'** எழுதிய
ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்- சச்சி.

# கையாலாகாதவர்களின் வாய்ச்சவடால்







குடியரசுத் தலைவர், சந்திரிகா, அவரது கட்சி உறுப்பினர்,மக்கள் விடுதலை முன்னணி (ம.வி.மு)யின் தலைவர்கள் ஆகியோர் அடிக்கடி பிரதமர் ரணிலை விளித்து, ''விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு நிலப்பகுதியில் தனியான ஆட்சி நடக்கிறதே! பிரதமரே நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்க உள்ளீர்கள்" எனக் கேட்டு வருகின்றார்கள்.

எவ்வழியில் என்றோ? எப்படிச்செய்யலாம்? என்றோ சந்திரிகாவைச் சார்ந்தவர்கள் கருத்துக் கூறவில்லை. அவர்களுக்கு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு நிலப்பகுதியில்தனியான ஆட்சி நடைபெறுவது ஏற்புடையதாக இல்லை. விரைவில் அதை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பது அவர்களின் விருப்பம்.

பிரதமரின் நாற்காலியில் அவர்கள் இருந்திருப்பின் இப்படிச் செய்திருப்போம் என்றாவது கூறியிருக்கலாம். அவர்களது விருப்பத்தை நிறைவேற்ற அவர்களுக்கே வழிதெரியாது என்பதே மெய்நிலை.

கடந்த இருபது ஆண்டுகளாக விடுதலைப் புலிகள் தமது நிலப்பகுதியில் தரைப்படையணியையும், கடற்படையணியையும் படிப்படியாக விரிவுபடுத்தி வந்துள்ளனர். தொடர்ச்சியாக இப்படைகள் அரசுப் படைகளுடன் மோதி வந்துள்ளன.

கடந்த ஆறு ஆண்டுகளில் நடைபெற்ற மோதல்களிலும் போரிலும் விடுதலைப்புலிகளே தொடர்சியாக வெற்றி பெற்று வந்துள்ளனர். இந்தநிலை பிரதமரின் பேச்சாளருக்குத் தெரியும். தீவின் அனைத்து மக்களுக்கும் தெரியும்.

1995 ஏப்ரல் தொடக்கம் 2001 ஏப்ரல் வரை, சந்திரிகா கட்சியினரின் ஆட்சிக்காலத்தில், விடுதலைப் புலிகளைப் போரில் தோற்கடிக்கவும், முடிந்தால் அழித்தொழிக்கவும் கடும் முயற்சி செய்தனர். இதனால் நாட்டின் கருவூலம் வெறிச்சோடியது. அரசு வாங்கிய கடனின் அளவு எல்லை மீறி வீங்கியது. இதனால் தொடர்ந்து போரை நடத்த அரசால் முடியவில்லை.

சந்திரிகா கட்சியினர் வருமுன்பிருந்த இலங்கை அரசுகள் எதுவும், பாரிய போருக்காக அனைத்து வழங்களையும் இவ்வாறு பயன்படுத்தியதில்லை. எந்த வழியையும் இந்த அரசு விட்டுவைக்கவில்லை. எனினும் அந்த அரசுக்கு இந்த முயற்சியில் படுதோல்வியே. அக்காலத்தில் முன்பில்லாத வாறு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு எல்லைகள் விரிந்தன. விடுதலைப்புலிகளின் படைப்பலம் பெருகியது. தொடக்கத்தில் இருந்ததை விடப் பன்மடங்கு வலிமைமிக்கவர் களாக விடுதலைப் புலிகள் வளர்ந்தனர். இதைச் சந்திரிகாவும் அறிவார். தீவின் மக்கள் அனைவரும் அறிவர்.

விடுதலைப்புலிகள் படையணிகளை வைத்திருக்கவும் பெருக்கவும் ஏன் அனுமதிக்கிறீர்கள் என எவரும் பிரதமர் ரணிலிடம் கேட்பதில்லை. இதைப்பற்றிப் பிரதமர் எதுவும் செய்ய முடியாது என எல்லோருக்கும் தெரியும். கசப்பான மெய்நிலைகள் உள்ளன. அவற்றை நீக்க எவரும் எதுவும் செய்ய முடியாது.

இக்கசப்பான மெய்நிலையை நேரடியாகச் சந்திப்பதைத் தவிர்த்தே அனைத்து மட்டங்களில் உள்ளோரும் அரசியல் நடத்துகின்றனர். தீவு முழுவதற்கும் ஒரே ஆட்சி என்ற நிலையைப் பேண வேண்டும் என்பதில் குடியரசுத் தலைவரும் பிரதமரும் ஒற்றுமையாக உள்ளனர். தீவு முழுவதற்கும் ஒரே ஆட்சி நீண்டகாலமாகவே இல்லை என்பதும் ஒரே குடையின் கீழ்க் கொண்டு வரும் முயற்சிகள் இதுகாறும் படுதோல்வியடைந்து விட்டதையும் இவர்கள் இருவரும் ஒப்புக்கொண்டு அரசியல் நடத்துவதில்லை. எப்படியோ பழையநிலை மீண்டுவிடும், கொழும்பு அரசே தீவின் அனைத்து பகுதிகளையும் ஆட்சி செய்யும் என்ற மாயையை மக்களுக்கு ஏற்படுத்த முயலுகின்றனர். இவர்களின் கையாலா காத்தன்மையே இந்த கனவுகளைத்தருகின்றது.

பிறநாடு ஒன்றை அரசு அழைத்து , இடைத்தூதராகச் செயற்படுமாறு கேட்டமை யையே, படைவலியுடன் ஆட்சியை மீட்டெடுக்கலாம் என்பதைக் கற்பனைகள் மிகுந்த கனவாகியுள்ளது.

எதிர் எதிரான படைகள் கொண்ட இரு பகுதியார், ஒருவரை ஒருவர் போரில் அழிக்கமுடியவில்லை. ஒருவரை மற்றொருவர் சரணடையச் செய்ய முடியவில்லை. இத்தகைய சமவலிமையுள்ள இரு பகுதியாருக்கிடையே சமாதானம் பேசப்பிறநாடு உதவுகிறது. விடுதலைப் புலிகள் மீது ஒரு தீர்வை அரசால் திணிக்க முடியவில்லை. எனவே இரு பகுதியாரும் ஒருவரோடு ஒருவர் பேசி ஏற்படும் உடன்பாட்டின் மூலமே அமைதி ஏற்பட முடியும். இதுதான் மெய்நிலை.

இந்த மெய்நிலையைத் தெரிந்துகொண்டு, பேச்சில் கலந்து கொள்ளவிருக்கும் அரச அமைச்சர் இருவர், விடுதலைப்புலிகளுக்கு அதிகாரப் பரவலாக்கு மூலம், இடைக்கால, ஆட்சியைஅவர்களின் கட்டுப்பாட்டு நிலப் பகுதிகளுக்கு வழங்குவது பற்றிப் பேசுகிறார்கள்.

அரசு விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தனியான ஆட்சி முறை வெளிப்படையாகவே வளர்ந்து வருகின்றது. இந்த மெய்நிலையை இவர்கள்தம் உரைகளில் ஏற்றுக் கொள்வதில்லை. விடுதலைப் புலிகள் அரசிடமிருந்து அதிகாரத்தைப் பெறுபவரல்லர். அவர்கள் தன்னுரிமை கொண்டவர்கள். அரசுக்க எதிராகவே ஒவ்வொரு முறையும் விடுதலைப் புலிகள் நடந்துவருகின்றனர். அரசு இதில் கையறு நிலையிலேயே உள்ளது. இந்தச் சூழ்நிலையில், விடுதலைப் புலிகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் என அமைச்சர் இருவரும் உரைப்பது கையாலாகாத நிலையை மறைக்க முயலும் வாய்ச்சவடாலே.

தீவு முழுவதும் ஒரே ஆட்சி நடைபெறுகிறது என்ற மாயையே இந்தப் பேச்சின் அடிப்படை. நீண்ட காலத்திற்கு முன்பே ஒரே ஆட்சி என்ற நிலை மாறியது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு நிலப்பகுதியில் கொழும்பு ஆட்சியின் தொட்டல் தொடுதலே உள்ளது.

எதிர் எதிராக உள்ள இரு படையணியினரும் தத்தமக்கெனக் கட்டுப்பாட்டு நிலப்பகுதிகளை வைத்திருக்கின்றனர். அங்கே ஆட்சி அமைப்புகளையும் நடத்துகின்றனர். இந்த இரு பகுதியாரும் ஒருவரோடு ஒருவர் இணக்கமாக இருக்கவும் தத்தம் எல்லைக்குள் வாழும் மக்களுக்கு நல்வாழ்வுக்குரிய வசதிகள் செய்யவும் அமைதியுடன்பாடு ஏற்படவுள்ளது. தீவு முழுவதும் ஒரே அரசு என்ற நிலைப்பாடு வெறும் மாயையே. கையாலாகாத்தன்மையை வாய்ச்சவடால் மூலம் வெளிப்படுத்துவதற்குரிய எடுத்துக்காட்டே!

ஆவணி தொடக்கம் பாங்கொக்கில் நடைபெறும் பேச்சு நீண்ட காலம் தொடரக் கூடியது. பல ஆண்டுகள் ஆனாலும் ஆகலாம். இதுவரை நடைபெற்ற பேச்சுக்களுக்கும் பாங்கொக் பேச்சுக்கும் இடையே பல வேறுபாடுகள் உண்டு. அவற்றைப் பின்வரும் வரிசையில் தருகிறேன்.

முதலாவதாக: இரு பேச்சுக் கிடையில் போர் நடந்த காலம் இதுவரை நிகழாத அளவுக்கு மிக நீண்டது. சித்திரை 1995 தொடக்கம் மார்கழி 2001 வரை ஆறு ஆண்டுகளும் எட்டுத் திங்களுமாக போர் நீண்டு வந்தது. போரிட்ட இரு சாராரும் தங்களால் முடிந்த வலிவைக் காட்டினர். எனினும் எவருக்கும் வெற்றி தோல்வி இல்லை. இப் போரின் இறுதிப்பகுதியாகிய ஐந்து ஆண்டு - எட்டுத்திங்களில் (1996 ஆடி- முல்லைத்தீவு முதல் 2001 சித்திரை- பளை வரை) அரசுப் படைகள் தொடர்ச்சியான படுதோல்விகளைத் தழுவின. அரசின் கடற்படை கடும்பின்னடைவுகளைச் சந்தித்ததுடன் விலையுயர்ந்த பல போர்க்கப்பல்களையும் இழந்தது. இதற்கு முன் நிகழ்ந்த மூன்று பேச்சுக்களின் முன்பும் இத்தகைய பாரிய இழப்புக்கள் அரசுப்படைகளுக்கு ஏற்படவில்லை. பேச்சுத்தோற்றால் படைவலிவு மூலம் வெல்லலாம் என்ற நிலை முன்பு அரசுக்கிருந்தது. இப்பொழுது அவ்வாறில்லை.

இரண்டாவதாக: 2000 சித்திரையில் ஆனையிறவுப் படைத்தள வளாகம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்தது. இதற்குப்பின்னர் படைக்கலங்களைப் பெருமளவில் வாங்கியதால் அரசின் கருவூலம் வெறிச்சோடியது. அரசின் நிதி நிலை மோசமடைந்தது. வெளிநாடுகளின் கடனுதவி கிடைத்தது. பொதுக்கடன் கற்பனைக்கெட்டாதளவு பெருகிப் பலூனாக வீங்கியது. ஆண்டுஒன்றுக்கு ஆறாயிரம்கோடி ரூபாய் கடன் மீளளிப்பு தொகை என்ற நிலை மாறி ஆண்டு ஒன்றுக்கு முப்பத்து மூவாயிரம் கோடி ரூபாய் கடன் மீளளிப்பு தொகை ஆகியுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு இருபத்தெண்ணாயிரம் கோடி ரூபாய் மட்டுமே அரசின் மொத்த வருவாய். எனவே போருக்கு மீளலாம் என்றஅரசின் வழி எப்பொழுதோ மூடிவிட்டது. விடுதலைப்புலிகள் அரச அமைப்பு அல்ல. எனவே பொதுக்கடன் வாங்கும்நிலை அவர்களுக்கு இல்லை. நாணயங்களை அவர்கள் அச்சிடுவதில்லை. உலகெங்கும் வாழும் தமிழர் தம்சேமிப்புக்களில் இருந்து வழங்கும் நிதி ஆதாரங்களே விடுதலைப் புலிகளின் போர்ச்செலவுகளின் கருவூலம் விடுதலைப் புலிகளுக்கு கடன் சுமை இல்லை. அது மட்டுமல்ல வலிமை மிக்க நாணயங்களில் விடுதலைப்புலிகளுக்கு நிதி திரள்வதற்குக் காரணம் செல்வம் செழிக்கும் நாடுகளில் உலகத்தமிழர் வாழ்வதுதான். நாணயங்களை அச்சிடுவதன் மூலமும் உலகெங்கும் கடன்வாங்குவதன் மூலமும் இலங்கை அரசு ரூபாயின் மதிப்பைக் குறைத்து ரூபாயைப்பிழிந்து சக்கையாக்கியுள்ளது. உலக நாணயங்களுடன் ஒப்பிட முடியாத மதிப்பிழிவைஇலங்கை ரூபாய் பெற்றுள்ளது. போருக்கான ஆற்றல் அழிந்தது மட்டுமல்ல, பொதுமக்கள் நலன் பேண செலவுகளுக்குக் கூட அரசிடம் நிதி ஆதாரங்கள் இல்லை.

மூன்றாவதாக: பேச்சுக்கு நடுவராக உள்ள நோர்வே அரசுக்கு, இஸ்கண்டிநேவியன் நாடுகள் மட்டுமல்ல, ஐரோப்பிய கூட்டமைப்பு முழுவதும் பின்னணியாக உள, ஐரோப்பிய கூட்டமைப்பு இலங்கைக்கு பெருமளவில் நிதி உதவி வழங்குகிறது. அமெரிக்காவும் ஜப்பானும் இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகள். இவையும் நோர்வேக்கு பின்னணியாக உள. எனவே பேச்சின் உள்ளடக்கமும் இருசாரரின் நிலைப்பாடுகளும் உலக நாடுகளுக்கு உடனுக்குடன் தெரியவரும். முன்பு நடந்த மூன்று பேச்சுக்களின் போதும் இந்த நிலை இருக்கவில்லை.

நான்காவதாக: சிறு சிறு விக்கல்களைத்தவிர இருசாரரும் கவனத்துடன் போர் ஓய்வு உடன்பாட்டைக் கைக்கொண்டு வருகின்றனர். பேச்சு நடக்கையில் இது முக்கியமானதாகும். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உணவும் மருந்துகளும் தடையின்றிப் போகின்றன. மீன்பிடிப்பதில் தமிழ் மீனவர்களுக்குள்ள கட்டுப்பாடுகள் தளர்ந்துள்ளது. நம்பிக்கைத் தளத்தைக் கட்டியெழுப்ப இந்த முன்முயற்சிகள் தேவையாகின. இதனால்அறிவு சார்ந்ததும் பயன்தரக்கூடியதுமான பேச்சுக்காக இருசாரரும் ஒருவரை ஒருவர் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளலாம்.

ஐந்தாவதாக: சிங்கள இன வெறியரின் அழுத்தங்களை இலங்கை அரசு வெற்றிகரமாகச் சமாளித்துள்ளது. இத்தகைய இன வெறியாளரின் அழுத்தங்களே தமிழ்த் தலைவர்களுடன் முன்பிரு முறைகளிலும் ஏற்பட்ட உடன்பாடுகள் உடையக் காரணமாகின. மக்கள் விடுதலை முன்னணியும் சந்திரிகா அணியில் உள்ள சிலரும் தொடர்கின்ற எதிர்ப்புகள் கையாலாகாதவரின் வாய்ச்சவடாலாகவே பரந்து கருதப்படுகின்றன.

கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத கடும் முயற்சியாக அமைதிப் பேச்சுக்கான அரங்கம் அமைந்து வருகிறது. உலக நாடுகள் பல இதில் ஈடுபாடு காட்டுகின்றன. உலகெங்கும் வாழ் தமிழர் இப்பேச்சில் அளவற்ற ஆர்வமும் ஈடுபாடும் காட்டுகின்றனர். அமைதி வரவேண்டும் என இவ்வளவு பேர் ஆசைப்படுவதால் அதையே சாக்காகக் கொண்டு எதையும் கொடுத்தாலும் தமிழர் ஏற்றுக் கொள்வர் எனக் கருதலாகாது.

தீவுக்குள் ஒரே ஆட்சிதான் அமைய வேண்டுமென்ற பத்தாம் பசலிக் கற்பனையில் கொழும்பு அரசு மிதக்க முடியாது. தீவில் வாழும் இரு நாட்டினங்களுள் ஒன்றான தமிழ் நாட்டினத்தின் எதிர்பார்ப்புக்களை மற்ற நாட்டினமான சிங்களவர் அடக்கிவிட முடியாது. தமிழ் நாட்டினத்தின் வேதனையில் தீவுக்கு ஒரே அரசு என்ற சாதனையை இலங்கை அரசு அடையமுடியாது.

தத்தம்மக்களுக்கு அமைதி வேண்டும், கொடும் போரிலிருந்து விடுபட வேண்டும். இதுவே இலங்கை அரசின் விருப்பம். இதுவே விடுதலைப் புலிகளின் விருப்பம். இதற்காகத்தான் பாங்கொக்கில் பேச உள்ளனர். ஒரு நாடு, ஓர் அரசு, ஒருமைப்பாடான தீவு என்ற நிலையைப் பேண இரு சாரரும் பாங்கொக் போகவில்லை. இலங்கை அரசு மட்டும் ஓர் அரசின் ஒருமைப்பாட்டைப் பேண விரும்பும், விடுதலைப் புலிகளுக்கு இதில் அக்கறை இல்லை.

(15ஆம் பக்கம் பார்க்க)

**எதிர் எதிராக உள்ள இரு படையணியினரும் தத்தமக்கெனக் கட்டுப்பாட்டு நிலப்பகுதிகளை வைத்திருக்கின்றனர். அங்கே ஆட்சி அமைப்புகளையும் நடத்துகின்றனர். இந்த இரு பகுதியாரும் ஒருவரோடு ஒருவர் இணக்கமாக இருக்கவும் தத்தம் எல்லைக்குள் வாழும் மக்களுக்கு நல்வாழ்வுக்குரிய வசதிகள் செய்யவும் அமைதியுடன்பாடு ஏற்படவுள்ளது. தீவு முழுவதும் ஒரே அரசு என்ற நிலைப்பாடு வெறும் மாயையே. கையாலாகாத் தன்மையை வாய்ச்சவடால் மூலம் வெளிப்படுத்துவதற்குரிய எடுத்துக்காட்டே!**

ஒளிப்பந்தம் தாங்கி நிற்போர், மற்றவர் கைக்கும் மாற்றித் தருவர். - பிளேட்டோ

# ஊடகங்கள் பொறுப்புடன் சிந்திக்க வேண்டும்...

**புலம்பெயர் நாட்டில் வெளிவரும் ஒரு பத்திரிகை 'சுயம்வரம்' என்ற பெயரில் அருகிக் கொண்டு வரும் சாதியத்தைப் புலம்பெயர் சூழலில் வளர்த்தெடுக்கும் அரும்பெரும் பணியைத் தொடங்கியிருக்கிறது. இதுதான் வாய்ப்பு என்று சிலர் தமது சாதிவெறியை அப்பட்டமாக அரங்கேற்றுகிறார்கள்.**

## நிகழ்வு 1

தெரு ஒன்றில் தள்ளாடியபடி ஒரு முதியவர் வருகின்றார். கொழுத்தும் வெய்யிலில் களைப்புற்றிருந்தார். தண்ணீர்த் தாகத்தினால் கிட்டத்தட்ட மயங்கிவிழும் நிலையில் இருந்தார். அருகில் ஒரு கிணற்றைக் கண்டவுடன் அதிலிருந்து தண்ணீர் எடுத்துத் தாகம் தணிக்க முற்படுகிறார். எங்கிருந்தோ வந்த ஒரு கும்பல் அவரிடமிருந்து தண்ணீர் வாளியைத் தட்டிப் பறித்ததுடன், அவர் அருகில் இருந்த மரத்தில் கட்டிவைத்து நையப்புடைக்கின்றது. படுகிறார்.

## நிகழ்வு 2

அது ஒரு தேநீர்ச்சாலை. அங்கிருந்த அனைவரும் கதிரைகளில் உட்கார்ந்தபடி வெள்ளிக் குவளைகளில் தேநீர் அருந்தியவண்ணம் இருந்தனர். எங்கிருந்தோ இருவர் வந்து தேநீர் கேட்டனர். அவர்களைக் கடையின் பின்புற வழியால் வருமாறு சைகை காட்டப்பட்டு, தகரத்தால் செய்யப்பட்ட நெளிவடைந்த குவளையொன்றில் தேநீர் கொடுக்கப்பட்டது. இருந்தபடி அருந்துவதற்கும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகள் ஏதோ இந்தியாவில் ஒரு பகுதியிலோ அல்லது உலகத்தின் வேறொரு பகுதியிலோ நடந்ததாக நினைக்க வேண்டாம். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு முற்பட்ட காலத்தில் தமிழீழத் தெருக்களில் இவ்வாறான கொடிய நிகழ்வுகள் நூற்றுக்கணக்கில் அரங்கேற்றப்பட்டன. யாரவர்கள்? ஏன் அவர்கள் வஞ்சிக்கப்பட்டார்கள்?


நாமே நமது உறவுகளை, சகோதரர்களை, இரத்தங்களை- தமிழனே தமிழனை அடக்கி, ஒடுக்கி அரசாண்ட இருண்ட வரலாறு அது. ஈழத்தமிழனின் இருண்ட பக்கங்களில் அதுவும் ஒன்று.

யாரோ முன்னோர்கள் முற்போக்குச் சிந்தனை இல்லாமல், பகுத்தறிவு இல்லாமல், மூட நம்பிக்கைகளில் மூழ்கிப்போய் தமது சுய இலாபத்திற்காக மனித இனத்தை 'சாதியம்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பிளந்தார்கள்- கூறு போட்டார்கள் முற்போக்குச் சிந்தனை உள்ள இனங்கள் பல இலகுவாக இதிலிருந்து கழன்று கொண்டன. ஆனால் தமிழன் தனக்கே உரித்தான சிறப்புப் பண்பின் அடிப்படையில் பாய்ந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் இந்த சாதியத்தை. விளைவு மேற்கூறிய நிகழ்வுகள் தமிழீழப் பகுதியெங்கும் அரங்கேற்றப்பட்டது. வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயத்தை வீரமாகச் செய்து முடித்தார்கள்.

தமிழ்நாடு தஞ்சைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட சாதியம் பற்றிய குறிப்பொன்றில் உலகிலேயே சாதிவெறி தலைவிரித்தாடிய முக்கிய இடங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் குறிக்கப்படுகிறது.

ஆனால் இதெல்லாம் பழைய வரலாறு. நடந்ததை மறந்து ஒரே இனமாக, ஒரே குடையின்கீழ் உலகத்தமிழினமே ஒரு வரலாற்றுத் தலைவனின் கீழ் எழுச்சிபெற்று நிற்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றம் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு மட்டும் விடப்பட்ட சவால் அல்ல. தமிழீழப் பகுதிகளில் நிலவிய 'சாதியம்' போன்ற இக் கொடூரமான பழக்கங்களிற்கும் சேர்த்தே விடப்பட்டது. அன்றிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் அழிவுற்ற சாதியம் இன்று தமிழீழப் பகுதிகளில் அறவே இல்லை என்று சொல்லுமளவிற்கு வீழ்ச்சி கண்டிருக்கிறது. தமிழன் தமிழீழத்தில் தமிழனாய் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கிறான். சாதி, மத, பேதமற்ற சோசலிச சுதந்திர தமிழீழம் கருவாகி நிறைமாதக் கர்ப்பிணியாய் பிரசவத்திற்காய்க் காத்திருக்கிறது.

ஆனால் இங்கே புகலிடத்தில் அண்மைக் காலமாக கதை வேறுவிதமாகச் செல்கிறது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனைத் தோற்றத்தில், பேச்சில், மொழியில் தன்னை ஒத்த ஒருவனை மிருகங்களுக்குக் கொடுக்கும் மரியாதை கூட வழங்காமல் கேவலமாக நடாத்திய வரலாறு மீண்டும் புகலிடத்தில்



பொய்த்துவிடும் போல் தெரிகிறது.

புலம்பெயர் சூழலில் திருமண விளம்பரங்கள் அவசியம் தேவைப்படுகின்றன. நாடு நாடாகத் தமிழர்கள் பரந்துள்ள சூழலில் இது இன்னும் அவசியமாகிறது. குறிப்பாகக் காதல் திருமணங்கள் என்பது எல்லோருக்கும் சாத்தியமானதொன்றல்ல. ஆகையால் திருமண சேவைகள் அனைத்தும் வரவேற்கப்பட வேண்டியவை. அதற்காக சாதிய அடிப்படையில் தமிழனைப் பிரிக்கும் இவ்வாறான முயற்சிகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது போராட்டம் இன்னும் வலுப்பெற வேண்டுமென்றால் கட்டாயம் கலப்புத் திருமணத்தில் ஈடுபடவேண்டும் தமிழ்ச் சமூகம். அதன் மூலம் சாதி, மத வேறுபாடுகளைக் களைந்து தமிழர் என்ற ஒரே சக்தியாக எழுச்சி பெறலாம். இது இன்றைய அவசரத் தேவையாகவும் உள்ளது. இதை முன்னெடுத்துச் செல்லவேண்டிய ஊடகங்களே திசைமாறினால் வேறுயார் வழி நடத்துவது?

ஒரு சமூகத்தின் விடுதலையென்பது, அடக்குமுறையாளர்களிடமிருந்து சுதந்திரத்தைப் பெறுவது மட்டுமல்ல, அந்த சமூகத்தினிடையே நிலவும் மூடப் பழக்கவழக்கங்களிலிருந்தும் நடைமுறைக்கு ஒவ்வாத விடயங்களிலிருந்தும் தம்மை விடுவிப்பதுமாகும். இந்த உணர்வுக்கு உரமிட்டு விடுதலையை வேகமாக வென்றெடுக்க ஊக்கிகளாகச் செயற்பட வேண்டிய பத்திரிகைகளே இன்று அதற்குத் தடைக் கற்களாக விளங்கும் கோரம் தமிழரிடையே மட்டும்தான் இருக்கும்.

எதிரிகளை இலகுவாக இனம்கண்டு கொள்ளலாம். ஆனால் இவைபோன்ற விசமிகளை இனம் காண்பது கடினம். எம்மிடையே இருந்து எமது இரத்தத்தையே குடிக்கும் இந்த விசச் செடிகளை முளையிலேயே

## மீண்டும் ஒருமுறை சாதியத்தின் பெயரால் ஈழத் தமிழன் பிரிவதை ஏற்றுக்கொள்ள முடியாது...

புதுப்பிக்கப்படுகிறது.

இதில் ஈடுபடுவது தனிமனிதர்களோ அன்றிக் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்களோ அல்ல. மக்கள் எதிர்வழியில் சென்றாலும் அவர்களை நேர்வழிப்படுத்தி அவர்கள் சிந்தனையைச் செழுமையாக்கி வழிநடாத்திச் செல்ல வேண்டிய தமிழ்ப் பத்திரிகைகள் சிலவே இச்செயலில் ஈடுபட்டுள்ளன என்று எண்ணும் போது வேதனைதான் மிஞ்சுகின்றது.

செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்காகவே பத்திரிகைகள் தோற்றம் பெற்றாலும் நாளடையில் சமூக அவலங்களை வெளிக்கொணரும், சமூக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் ஆயுதங்களாகவே பயன்பட்டன... பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் சில பத்திரிகைகள் புலம் பெயர் தமிழ் சமூகத்தின் விழிப்புணர்ச்சியை மழுங்கடிப்பதற்கென்றே தோற்றம் பெற்றவைபோல் செயலாற்றுகின்றன.

**-பரணி-**

அண்மைக்காலமாக புலம்பெயர் நாட்டில் வெளிவரும் ஒரு பத்திரிகை 'சுயம்வரம்' என்ற பெயரில் அருகிக் கொண்டு வரும் சாதியத்தைப் புலம்பெயர் சூழலில் வளர்த்தெடுக்கும் அரும்பெரும் பணியைத் தொடங்கியிருக்கிறது. இதுதான் வாய்ப்பு என்று சிலர் தமது சாதிவெறியை அப்பட்டமாக அரங்கேற்றுகிறார்கள். குறிப்பிட்ட சாதியுடைய தனது மகனுக்கு, மகளுக்கு குறிப்பிட்ட அதே சாதியிலேயே மணமக்களை எதிர் பார்ப்பதாகப் பகிரங்கமாகவே அறிவிக்கிறார்கள்.

வேறு ஒரு பத்திரிகையில் ஒரு பத்திரிகையாளர் 'தலித் என்று தம்மை அடையாளப்படுத்துபவர்கள் தமது சாதியைக் குறிப்பிட்டுவிட்டே மேடைகளில் பேசவேண்டும்' என்ற விசித்திரமான- விசமத்தனமான கருத்தை முன்வைக்கிறார்.

தொடர் போராட்டங்களினாலும், புலம்பெயர் வாழ்வினாலும் தமிழர் என்ற ஒரே அடிப்படையின் கீழ் கலப்புத் திருமணங்களில் ஈடுபட்டு வந்த புலம்பெயர் தமிழ்ச் சமூகம் இதுபோன்ற சில விசமப் பிரச்சாரங்களினால் தடுமாற்றம் அடைவது போல் தெரிகிறது. இது நல்ல அறிகுறி அல்ல. எமது போராட்டமே கிள்ளியெறிய வேண்டும். சாதியத்தின் பெயரால் மீண்டும் ஒருமுறை ஈழத் தமிழினம் பிரிவதை ஏற்றுக் கொள்ள முடியாது. சம்பந்தப்பட்டவர்கள் நிறுத்திக் கொள்ளவேண்டும். வியாபார நோக்கம்தான் காரணமென்றால் அதற்கு வேறு எவ்வளவோ தொழில்கள் இருக்கின்றன. பத்திரிகை என்ற புனிதத்தை அசிங்கப்படுத்தாதீர்கள்.

புலம்பெயர் தமிழ்ச் சூழலில் சாதியம் என்ற சொல்லின் அர்த்தம் தெரியாமலேயே புதிய இளம் தலைமுறை ஒன்று உருவாகி வருகிறது. அந்த இளம் பிஞ்சுகளுக்கு விசத்தை ஊட்டாதீர்கள்.

இலங்கையிலிருந்தும், தமிழகத்திலிருந்தும் இவ்வாறான விளம்பரங்களைத் தாங்கி பத்திரிகைகள் வருகின்றனவே என்ற கேள்வியை இவர்கள் முன்வைக்கலாம். அவர்கள் வியாபாரிகள், தமது பத்திரிகைத் தொழிலை வியாபார நோக்கோடையே நடத்துகிறார்கள்.

ஈழத்திலிருந்து வரும் பத்திரிகைகளானாலும் சரி, புலம்பெயர் சூழலிலிருந்து ஈழ அடையாளத்துடன் வரும் பத்திரிகைகளானாலும் சரி அவற்றின் முன்னே உள்ள பணியே வேறு. விடுதலை வேள்வியில் நின்று கொண்டு ஒரு நெருப்பாற்றை நீந்திக் கடக்க முற்படும் ஒரு இனத்தை அதன் வீச்சுக் குறையாமல் வழிநடத்திச் செல்லவேண்டிய பெரும் பொறுப்பும், எமது போராட்டத்தின் தேவையை எமது மக்களின் அவலத்தை, அடக்குமுறையாளர்களின் அடாவடித்தனங்களை உலகறியச் செய்ய வேண்டிய பெரும் கடமையும் தமிழ்ப் பத்திரிகளுக்கு இருக்கிறது.

ஆனால் இதைவிடுத்து சில வியாபார நோக்கத்திற்காக எமது போராட்டத்தை, தமிழர்களின் விழிப்புணர்ச்சியை மழுங்கடிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. சம்பந்தப்பட்டவர்கள் தமது போக்கை மாற்றிக் கொள்வார்கள் என்று அனைத்து ஈழத் தமிழர்களும் நம்புகிறார்கள்.

சம்பந்தப்பட்டவர்கள் சிந்திப்பார்களா? செயலாற்றுவார்களா?

நன்றி ஈழமுரசு- பாரிஸ்

# இவ்வாண்டின் தேசிய இலக்கிய விழாவில் தமிழுக்குப் புறக்கணிப்பு




சென்ற மாதம் 30ஆம் திகதி (30-09-2002) கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச கருத்தரங்கு மண்டபத்தில் 2000ஆம் ஆண்டிற்கான தேசிய இலக்கிய விழாவும், விருது வழங்கும் வைபவமும் இடம் பெற்றது.

சிறிலங்காவின் பிரதம மந்திரி கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் முதன்மையாளராகவும், மனிதவள அபிவிருத்தி, கல்வி மற்றும் கலாச்சார பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் கருணாசேன கொடிதுவக்கு அவர்களின் பங்கேற்புடனும் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வுகள் பற்றிய அறிமுகங்கள் மாத்திரமே மும்மொழிகளிலும் வழங்கப்பட்டன. உரைகளைப் பொறுத்தவரையில் இந்திய பேராசிரியர் திரு.யூ.ஆர்.அனந்தமூர்த்தி அவர்கள் "எமது சமகால எழுத்தாளர்களின் பொறுப்பு" என்னும் பொருளில் ஆங்கிலத்தில் உரையாற்றினார். அமைச்சர் ரவி கருணாநாயக்க அவர்களும் பிரதமர் அவர்களும் தத்தம் உரைகளை சிங்கள மொழியிலேயே ஆற்றினார்கள். பிரதமர் அவர்களது உரையின்போது மொழி பெயர்ப்பாளர் ஒருவரை ஏற்பாட்டாளர்கள் ஏற்பாடு செய்திருக்கலாம். அது செய்யப்படாதது பெரும் குறையே.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக இலங்கையின் மூத்த இலக்கியவாதிகள் இருவருக்கு 'சாகித்திய ரத்ன' விருதும், உதவு தொகையாக ரூபா50,000 பணமும் வழங்கப்பட்டன.

அவர்களில் ஒருவர் சிங்களப் பேராசிரியர் திரு.எம்.பி. ஆரியபால.

மற்றையவர் தமிழிலக்கிய உலகு நன்கறிந்த மூத்த எழுத்தாளர், விமர்சகர், ஊடகவியலாளர், பிரசுரகர்த்தா என பல துறைகளிலும் சிறந்து விளங்குகின்ற 'வரதர்'என அன்போடு அழைக்கப்படுகின்ற திரு.ரி.எஸ். வரதராஜன் அவர்கள்.

அத்தோடு 2001ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிங்கள, ஆங்கில, தமிழ் இலக்கிய நூல்களுக்கான விருதுகளும், சான்றிதழ், பணப்பரிசு என்பனவும் வழங்கப்பட்டன.

சிறுகதைத் தொகுப்பு, நாடகம், நாவல், கவிதை ஆகிய படைப்புகட்கு ரூபா 35,000 பணப்பரிசும்;

சிறுவர்களுக்கான ஆக்க இலக்கியப் படைப்புக்கு ரூபா 25,000மும்;

மொழிபெயர்ப்பு ஆக்கத்திற்கு ரூபா 30,000மும் வழங்கப்பட்டன.


இந்நிகழ்வு சம்பந்தமாக மலர் ஒன்றும் வெளியிடப்பட்டிருந்தது. அதன் முன் பக்கத்தில் 'தேசிய இலக்கிய விழா' என்ற வாசகமும், பின்பக்கத்தில் இலங்கை தமிழ் சாகித்தியகுழு, தமிழ் நூல்களுக்கான நடுவர் குழுவில் இடம் பெற்றிருந்தவர்களின் பெயர்கள் மாத்திரம் தமிழ் மொழியில் அச்சிடப்பட்டிருந்தது.

சிங்கள் நூல்கள் பற்றிய விபரங்கள் சிங்கள மொழியிலும், வெளியிடப்பட்டிருந்த வேளை தமிழ்மொழி நூல்கள் பற்றிய விபரங்கள் தமிழ்மொழியில் வெளியிடப்படாது ஆங்கில மொழியில் வெளியாகி இருந்தது. தமிழ் சாகித்தியக் குழுத்தலைவர், அங்கத்தவர்கள் பார்வையில் இந்தப் பெரிய குறைபாடு தென்படாமல் போனது ஏன்?

உண்மைகள் கசக்கத்தான் செய்யும். அதற்காக எமது உரிமைகளை விட்டுக் கொடுத்துவிட முடியாது. சமாதானப் பாதையில் அடியெடுத்து வைக்க ஆரம்பித்துள்ளோம் என கூறப்படுகின்ற இன்றைய இந்தக் காலகட்டத்திலும் தமிழ்மொழிக்கு புறக்கணிப்புக்கள் நிகழ்வதனை சுட்டிக்காட்டாமல் இருந்துவிட முடியாது.

இதுபோன்ற குறைபாடுகள் இனிவரும் காலங்களிலாவது நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பெரும்பொறுப்பு குழுக்களில் அங்கம் வகிக்கும் தமிழ்ப் பெருமக்களது தோள்களிலேயே இருக்கின்றது.

**-வல்வையூரான்-**



## சிறுகதை

பயங்கரமான கொடுமை. உயிரை உறிஞ்சும் வேதனை. ஒளிகாணாக் கண்கள் பத்தடி சுவருக்குள் அடங்கிப்போன இரண்டு வருட வாழ்க்கை. விடுதலை பெற உணவை மறந்து இருந்தது எத்தனை நாட்கள். பலன் கிடைக்கவே இல்லை. வெம்மையில் இடையிடையே பூமியைத் தழுவும் மழைத் துளியைப் போல எம்மிடம் சிலர்வந்து போவார்கள். எமக்கு விடிவென்பது ஒவ்வொரு காலையில் மாத்திரம் தான். அதுவும் கூட சூரியனைக் காணாத விடிவாக இருந்து விடு கின்றது. இப்படியேதனது வாழ்க்கையின் போக்கு அழுக்குப் படிந்த சுவருக்குள் முடங்கிக் கொண்டதே என்று நேசனது மனம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

மன ஓட்டத்தை நிறுத்தும் வண்ணம் அருகிலிருந்த மற்றைய அறையில் 'ஜெயில்' காவலாளியின் அதட்டல் சத்தம். அவன் நித்திரை விட்டு எழுந்திருப்பான் என நேசன் நினைத்துக் கொண்டான். ஆனால், நண்பன் எழுந்திருக்கவில்லை. காவலாளிக்கு ஆத்திரம் தலைக்கேற கையிலிருந்த குண்டாந் தடியால் அவனது முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான். எதிர்பாராத அந்த அடியால் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுந்து கொண்டான். அவனது மூக்கிலிருந்து இரத்தம் பெருகத் தொடங்கியிருந்தது. கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு மூலையில் கிடந்த தனது கந்தலான சேட்டை எடுத்து முகத்தை மூடிக்கொண்டான்.

கையைக் கட்டிவிட்டு வீரம் காட்டுகிற கோழைகளின் ஆட்சிதான் இன்றைய உலகம். இப்படியான அலறலும், தினமும் இங்கே சுவாசிக்கும் இரத்த வாடையும் நேசனுக்குப் பழகிப் போன ஒன்று என்பதால் அதனைப் பெரிது படுத்தாது அமைதியாகிக் கொண்டான். இப்படியான கொடுமைகளிலிருந்து நேசனும் தப்பியவனல்ல.


இவ்வலைக்குள் பல தடவை சிக்கியதன் உண்மையையும் அதன் தாக்கத்தையும் அவனது உடல் உறுப்புக்கள் வாயிருந்தால் கத்தியே விடும். இவனது நகங்கள் கூடஇவர்களுக்கு இரையாகியே இருந்தன. தமிழர்கள் வாளேந்தி, மார்பிலே வடு தாங்கி, மறைந்தார்கள் போரினிலே என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஆனால், இன்று நாம் தமிழ் பேசுவதால் எம்மை இன்று பலிக்கடாக்களாக கூண்டிலடைத்து வைத்துக் கூத்துப் பார்க்கிறார்கள்', என நினைத்தவாறு நேசன் தனது உடலில் மறக்கமுடியாத வடுக்களைப் பார்த்து, மெதுவாக வருடியவாறு, நின்றுகொண்டிருந்தான். அவனது உடலில் ஒவ்வொரு தழும்புகளும் பழையதை நினைவு படுத்துவதாகவே இருந்தன. வடுக்களின் ஆழங்களை அவனது விரலும் மனமுமே அறிந்திருந்தன. ஒவ்வொரு தடவையும் அவன் மேனியைக்கண்கள் தழுவும் போது அவனை அறியாமலே நீர்த்துளிகள் அவற்றைச் சந்திக்கும்.நீர்த்துளிகள் பட்டுத் தெறிக்கும் போது நாமாவது சிறையைவிட்டு வெளியே போக மாட்டோமா..? என எண்ணித் தரையிலும், கம்பிகளிலும் பட்டுச்செயலற்றுக் கிடப்பது போன்றே நேசனும் இருப்பான்.

***

அன்றொரு மாலை, வெளியிலே ஒரு சலசலப்பு, ஆரவாரம்: மெலிதான கூச்சல். யன்னலால் எட்டிப்பார்த்த நேசன் மலைத்துப் போனான். இவனது அறையை நோக்கி அந்த உருவங்கள் வந்து கொண்டிருந்தன. அனைத்துக் கண்களும் ஏதோ நடைபெறப் போவதை படமிட்டுக் காட்டிக் கொண்டிருந்தன. நேசன், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளமுடியுமா? என நினைத்துக்கூட பார்ப்பதற்குள் வந்தவர்கள் உள்நுழைந்து'நீ எத்தனை புலிகளுக்கு உதவி செய்தனி, எங்களுக்கெல்லாம் தெரியும்' என்றவாறு, அவர்களது கைகள் அவனைப் பற்ற அவனிடம் மறுக்க வார்த்தையும் எழவில்லை. எதிர்க்கச் சக்தியும் இல்லை: ஆதரவு கொடுக்க அங்கு எவரும் முன்வரவில்லை. அவன் கைதாகிய செய்தி மட்டும் மறுநாள் பத்திரிகையில் பிரசுரமாக்கப்பட்டிருந்தது.

***

காலையில் சிறையில் இருந்து வேலைக்குப் புறப்பட்டால் கல்லிலிருந்து நார் உரிப்பது போன்றே என்னையும் எனது நண்பர்களையும் துவைக்கிறார்களே. நாம் துவண்டு விழும்போதெல்லாம் நாம் அனுபவிக்கும் வேதனையைச் சொல்லி அழ இங்கு யார் இருக்கிறார்களோ என ஏங்குவான். வீட்டில் என்றால், சிறுமுள் குத்தினாலே போதும், 'அம்மா' என அலறும்போது, அம்மா துடிதுடிப்புடன் ஓடிவந்து, கட்டியணைத்து, அன்பாகப் பேசி, மேனியை மென்மையாக வருடி, முள்ளெடுக்கும் அந்தப் பழைய நினைவு வந்து மறையும். நேசன் தாயினுடைய சிறிய ஏச்சைக்கூட ஏற்கமுடியாத இளகியமனதை



உடையவன். இப்படித்தான் ஒருநாள், தாய் காய்ச்சல் காரணமாகப் படுத்துக் கொண்டாள். பாடசாலைவிட்டு வந்தநேசன் தாயைப் பார்த்தவுடன் பதறிப் போனான்.

'அம்மா, என்னண காய்ச்சலோ' என வினவியவாறு அவளது கன்னங்களை தான் ஒரு மருத்துவனைப் போன்றுமாறி மாறி தொட்டுப் பார்த்தான். இது நோவிற்கு ஒத்தடம் எப்படி இருக்குமோ அது போன்றே அவளுக்கும் இருந்தது. அவளருகிலேயே சோகம் நிழலாட அவளதுதலையை அணைத்தவாறு அமர்ந்து கொண்டான். தாய் நித்திரை



யானதும் எழுந்து சென்று இரவு விளக்கைக் கொழுத்துவதற்காக நேசன் விளக்கு சிமிளியை எடுத்துத் துடைக்கும் போது, அவனது கையைவிட்டு நழுவி 'சிலிங்' என்ற ஓசையுடன் சிதறியது. கண்விழித்த அவன்தாய், 'டேய், நேசன்.... என்ன? உனக்கு எந்த வேலையிலதான் அக்கறை இருக்கு? கவனமாக ஒரு வேலையையும் செய்யிறேல்ல' அவ்வளவுதான் படலை சார்த்தும் சத்தம்தான் அவளுக்குக் கேட்டது.

தாய் தனது மனதுக்குள் தன்னையே திட்டிக் கொண்டாள். 'என்னதான் இருந்தாலும் அவன் சின்னவன் அல்லவா? பேசியிருக்கக்கூடாது. அவன் இப்ப போய் எங்க அழுது கொண்டிருக்கிறானோ...?' என எண்ணி நீண்ட பெருமூச்சொன்றை வெளியேற்றியவாறு தனது ஓரக்கண்களை மெதுவாகத் துடைத்துக் கொண்டாள். கொஞ்சநேரமாய் அவனைக் காணாது அவள் மனம் பதற்றமடைந்ததை அவன் அறியான். நேசன் வீதியோர வேம்பின் கீழ் ஆழ்ந்த யோசனையில் இருந்தான். இப்போது அவனுக்குக் கோபம் குறைந்து விட்டது: மனம் இளகியிருந்தது, தாய் மீது இன்னும் பாசமும், பரிவும் அதிகரித்திருந்தன. தான் பிழை செய்து விட்டதை உணர்ந்து கொண்டான். 'என் அம்மாவை நான் தண்டிப்பதா...? கூடாது என நினைத்தவன் படலையை வேகமாகத் திறந்து கொண்டு, தாயினது படுக்கையறைக்கு ஓடி, "அம்மா...நீ அடி அம்மா..., நீ..நல்லா எனக்கு அடி...நான் உன்னை வேதனைப் படுத்தீற்றன்.. நான் இனி ஒருபோதும் உன்னைவிட்டுப் போகமாட்டேன். என்னையும் உன்னையும் எவராலும் பிரிக்க முடியாது"அவளது கால்களை கட்டியவாறு அழுதான். "டேய் நேசன், ஏன் இப்ப அழுகிறாய்... என்னிலதான் பிழை, நீஎன்ர செல்லமடா..." என்றவாறு அவனை இறுக அணைத்துக்கொண்டாள். அவளது விழி நீர் ஒவ்வொன்றும் பாசத்தின் வலிமையை நேசனுக்கு உணர்த்தி நின்றன. அவன்தாயின் அன்றைய அணைப்பு, இன்றும் ஒருதடவை, ஒருநிமிடம், ஒரு கணவேளையாவது கிடைக்காதா என கண்ணீருடன் ஏங்கித் தவிப்பான்.

உள்ளச் சுமைகளை இறக்கி வைத்து ஆறுதல்பெற இங்கே, எங்கே அன்புகொண்ட உள்ளங்கள்? இங்கிருக்கும் அதிகாரிகள் எல்லாம் மனிதன் என்ற கவசம் அணிந்த கொடிய மிருகங்கள். இவர்கள் தமிழனாய்ப் பிறக்கின்றவர்களின் குரல் வளையை நசுக்கும் இரும்புக் கரங்களைக் கொண்டவர்கள். இவர்களுக்கு உடன்பிறப்புக்களே இருக்கமாட்டார்கள் என்றுதான் நேசன் எண்ணிக்கொள்வான். பாசத்தின் பிணைப்பை அவர்கள் இங்கு மறந்துவிட்டுத்தான் பணியாற்றுகிறார்களோ? அல்லது இப்படித்தான் பணியாற்ற வேண்டுமென்ற கட்டாயமோ...?' என அவன் மனம் இப்படியே பலவாறு பல பாதைகளால் ஓடிப் பள்ளம் மேடுகளை பற்றி ஆராய்ந்து கொள்ளும். நேசன் தனது பழைமையான சுத்தம்சுகம் போன்றவற்றை இழந்து அடிமையின் ஆழத்திற்குச் சென்றிருந்தான். நீர் காணாத தேகம், நீண்டதூரம் துர்நாற்றம் வீசும் உடல், ஆடைகள் சலவைகண்டு பல மாதங்கள், எண்ணெய் காணாத பரட்டைத் தலை, சவரம்செய்யாத முகம். இவையே இவனது வாழ்வில் உடலை அழகுபடுத்தும் வர்ணங்களாக ஒட்டிக் கொண்டவை. அங்குள்ளவர்களில் இவன் மாத்திரம் தான் இப்படியல்ல. அனைவருமே இவனது நிலையைக் கடந்து மிக மோசமான தோற்றத்திலேயே இருக்கிறார்கள். இதைவிடக் காலாகாலமாக 'உன்னை விட்டுப்பிரியேன்' என்று மார்பு தட்டிக்கூறும் அவனது கைவிலங்கும் அவனுக்கென்றொரு தனி அழகைக் கொடுத்தது.

நேசனுடன் வாடுபவர்களில் பெரும்பாலனவர்கள் இளைஞர்களே. எதிர்கால வாழ்க்கைக்குத் திட்டம் தீட்டியவர்களும், கற்பனையில் சிறகடித்துப் பறந்தவர்களும், வெளிநாடு செல்லக் காத்திருந்தவர்களும், வேலைக்காய் ஓடியவர்களுமே தற்போது அவர்களின் எதிர்கால வழ்க்கை ஓட்டத்திற்கு கைவிலங்கிட்டு சுவாசிக்கக்கூட சுதந்திரமின்றி அடைத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள். பணம் படைத்தவர்கள் பணத்தைக்காட்டி நீதியை விலைக்கு வேண்டுகிறார்கள். நாம் என்ன செய்வது....? 'ஏழைக்கு ஏது இன்பம்?' என்று சொல்லுவார்கள். அது எங்களது வாழ்க்கையில் ஆரம்பத்திலேயே நிஜங்களான தடங்களாகவே பதிந்து கொண்டன. இக்காலம் முடிந்து புதுயுகம் ஆரம்பமாகி விட்டது என நண்பன் சிவா கூறியது நேசனுக்கு நினைவுக்கு வர அவனுக்கே சிரிப்பை அடக்க முடியவில்லை. இது ஆனந்தச் சிரிப்பல்ல. வேதனையின் வெளிப்பாடு. ஆற்றாமையின் தோற்ற ஆர்ப்பரிப்பே தவிர அவன் உண்மையான மகிழ்ச்சியை என்றோ மறந்துவிட்டிருந்தான். சிவா இவனுக்காக தனது சுமைகளை மூலையில் போட்டுவிட்டு, மன ஆறுதலுக்காய் முக மலர்ச்சிக்காய் தினமும் கம்பிகளினூடாக நேசனுடன் எதையாவது பேசுவான். இன்றும் கம்பிகளினூடே முகம் புதைத்தவன் "ஆட்சி மாறிவிட்டது: எம் போன்ற இளைஞர், யுவதிகளின் வாழ்வு வளம் பெறப் போகின்றது: வாழ்வில் விடிவெள்ளி தோன்றப் போகின்றது: விடிவு வந்து கொண்டிருக்கின்றது: வீடு சேரும் நேரம் கிட்டிவிட்டது"எனக்கூறும் போதெல்லாம் இவன் சந்தோசத்துக்காய் கூறுகின்றானோ அல்லது சந்தோசமாய்த் தான் கூறுகின்றானோ எனத் தெரியவில்லை. ஆனால், வார்த்தைகளின் கருத்துக்களை ஏற்கவும் முடியவில்லை. எடுத்தெறியவும் முடியவில்லை. சிவா எப்படியோ உறவினர்களைச் சந்திக்கும் வாய்ப்பை பல தடவை எட்டியிருக்கிறான். அவனுடைய குடும்பத்தார் இவன் இருக்குமிடத்தை எப்படியோ அறிந்து கொண்டனர். அவனை வெளியே எடுக்கும் முயற்சியில் அவனது தாயும், தந்தையும் முழு மூச்சுடன் ஈடுபடுகின்றார்கள். அவர்களுக்கு இன்னொருபக்க பலமும் உண்டு. சிவாவினது குடும்பத்தினர் வசதிபடைத்தவர்கள். இவனிடம் எந்தவொரு கெட்ட பழக்கமும் இல்லை. நற்பண்புடைய நற்பாளனுக்கு இவனோர் எடுத்துக்காட்டாக திகழ்பவன். நேசனது மகிழ்ச்சி அவனைவிட்டு மூன்று வருடங்களுக்கு முன்செல்லும்போது அவனது நம்பிக்கையையும் தன்னுடன் கொண்டு போய்விட்டது. நண்பனது பேச்சுக்கள் சற்று ஆறுதலைக் கொடுத்தாலும் அவன் மூன்று வருடமாக அனுபவித்த வேதனைக்கு இன்று வரை முடிவு காணப்படவில்லையே. அன்று தொடக்கம் இன்று, இந்த வினாடிவரை என்ன நடக்கும்? என சிந்திக்கும் தன்மையே அவனைவிட உயரமாக வளர்ந்திருந்தது. அவனைச் சார்ந்த சூழலையும், காவலாளிகளின் பேச்சுக்களையும் வைத்து நேசன் தான் இப்போதைக்கு வெளியுலகம் தெரியவேண்டிய அவசியமற்ற கிணற்றுத் தவளையாகிவிட்டேன் என்பதை ஊகித்துக் கொண்டான். எனக்கு சிவாவின் பேச்சுக்களில் எள்ளளவு கூட நம்பிக்கையில்லை. நம்பிக்கையில்லாது போய்விடினும்

**-வி. தேவபானு**

உங்கள் தலைவனாக விளங்க விழைகின்றவர், உங்கள் பணியாளனாகட்டும். - யேசுநாதர்

அவனின் மனம் "நம்பு உனக்கு விடுதலை கிடைக்கும்'' என இடையிடையே அவனுக்கொரு தென்பை ஊட்டியது. ஆனாலும் விடுதலைக்கும் அவனுக்குமான, வெளியுலகத்திற்கும் அவனுக்குமான, உறவுகளுக்கும் அவனுக்குமான, வாழ்க்கைக்கும் அவனுக்குமான, நீதிக்கும் அவனுக்குமான இடைவெளிகள் குறுகவில்லை. அவை அதிகரித்துக் கொண்டேபோகிறது. அவ்இடைவெளி அதிகரிப்பை நெருங்கவோ, அல்லது குறைக்கவோ அவனால் முடியாது என்பதை அவன் மனம் உறுதியாய் சொல்லி நின்றது.

நேசனுக்கு அவன் உறவுகள் கனவில் கூட தென்படுதில்லை. அவனை விட்டு இப்போது கொஞ்சம்கொஞ்சமாக விலகத் தொடங்கியிருந்தது. "நான் கைது செய்யப்பட்டதும் என்னைப் பார்க்க என் அம்மா எத்தனை தடவை துடித்திருப்பாளோ.....? என்னைக்காண எங்கெல்லாம் அலைந்திருப்பாளோ.....? அவளது கால்கள் எவ்வளவு நாட்கள் நடையாய் நடந்து தேய்ந்திருக்கும்...? எவ்வளவு இளைத்திருப்பாள்...? எனக்கு கை விலங்கிட்டுக் "கௌரவிக்கப்பட்ட" அந்தக்கொடிய நாளை கேள்விப்பட்டபோது, அவள்மனம் என்ன பாடுபட்டிருக்குமோ ....? எனக்கு கேற்பட்ட இந்த அவமானத்தை தாங்கியிருப்பாளோ...? நான் சாகும் முன் அம்மாவைப் பார்ப்பேனோ? அப்பாவைப் பார்ப்பேனோ...? அன்புத்தங்கை, ஆசைத்தம்பி...." என ஏக்கங்கள் நிறைந்த வினாக்கள் விடைகாண முடியாததாகப் போனதே தவிர அவனுக்கு விடையளிக்க யாருமே இல்லை..... ஆனாலும் இவற்றுக்கெல்லாம் நண்பனால் எப்படி விடையளிக்க முடியும் .சிவாவிற்கு இன்றைய அரசியல் மாற்றங்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்பிருந்தது. ஆனால், நேசனுக்கு வெளிக்கதவே என்ன நிறம் என்பது தெரியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தான்.

கண்விழித்தபோது சலசல என்று நீர் ஊற்றும்ஓசை. பலத்த குரல்கள் "வேகமாக முடிக்க வேணும்" என்ற வார்த்தைகள் இடையிடையே வந்து போயின. என்னவென்பதை நேசனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அவனது அறையும் கழுவப்பட்ட போது தான் இன்று தங்களைப் பார்வையிட யாரோ வரப் போவதைப் புரிந்து கொண்டான். பழைய உடுப்புக்கள் அன்று மட்டும் தான் விலகிக் கொள்ள புதியவை அவனை மூடிக் கொண்டன.

என்றோ ஒரு நாள் நிறம் மாறும் பச்சோந்திகள் பார்த்து விட்டுப் போனார்கள் தான். அன்று ஏதேதோ பேசி எம்மை மயங்கவைத்து விட்டு எங்களிடம் இருந்து மெதுவாகத் தப்பித்துக் கொண்டார்கள். அவர்கள் பேசும் போது "உங்களை விடுதலை செய்யப் பாடுபடுவோம் நல்லதொரு சூழலை உங்களுக்கு ஏற்படுத்தித் தருவோம். உங்கள் வாழ்க்கை பசுமையாக மாற எம்மை நீராக்குவோம்" இப்படி எத்தனையோ மெழுகு பூசிய வார்த்தைகள். இன்று அவர்கள் அரசியல் எனும் மதுவில் மூழ்கி விட்டார்கள் போலும். ஏனென்றால், இன்னும் தென்படவில்லை. அரசியலில் மூழ்கும் போதும், மூழ்கும் முன்பும் இப்படித்தான் பேசுவார்களோ என்று யோசித்தவாறு தனது அழுக்குப் படிந்த உணவுப் பாத்திரத்தை நோக்கவும், மணி ஒலிக்கவும் சரியாக இருந்தது. பன்னிரண்டாவது இலக்கத் தட்டை எடுத்துக் கொண்டு உணவுக்காகச் சென்றான். வழமையாகச் சமைத்துத் தரும் சோறு, தட்டில் போடும் போதே, அதன் மணத்திலிருந்து பழுதடைந்த அரிசி என்பதை அவன் கண்டு கொண்டான். பூசணிச்சொதியை வாங்கிக் கொண்டு உண்ண முடியாது, கழிவுத் தொட்டியில் கொட்டி விட்டுத் திரும்பினான். உணவு வாங்க மறுத்தால் நிரந்தரமாக நிறுத்தி விடுவார்கள். உணவின் தரம் ஒவ்வொருவரது உடலின் விலா என்புகளையே எண்ணக்கூடிய அளவிற்குக் கொண்டு வந்துள்ளது. நேசன் என்ன செய்வான். விரும்பியோ, விரும்பாவிட்டாலோ இப்படித்தான் இவைகளுக்குள்ளால் நகர வேண்டியிருந்தது.

தனது சிறைக் கூடத்துக்குள் நுழைந்து அப்பிடியே மேல் நோக்கிய வெறித்த பார்வையுடன் படுத்திருந்தான். நீண்ட பல இரவுகள், கடக்க முடியாத சுமைகள், தடம் புரண்ட வாழ்க்கை, தினமும் மனப்பாடம் செய்து மீண்டும் அசைபோடும் மாணவனைப் போல தனது வாழ்க்கையை மீட்டியவாறு அப்போதே தூங்கிப் போனான். வீட்டில் என்றால் அதிகாலை நித்திரை விட்டு எழுப்புவது, அம்மா அன்பாக வளர்க்கும் கறுப்பு மேனியில் மென்சிவப்புப் பூசிய. அழகிய சேவலின் கூவல் தான். ஆனால். இங்கே சிலவேளை காவலாளிகளின் தடிதான் நேசனை "எழும்படா'' என முகத்தில் வேகமாக முட்டிச் சொல்லி விட்டுப் போகும். ஆனால், அன்று அதிகாலையை நெருங்கியிருக்க வேண்டும், தரை சற்று வெளிச்சமாகத் தெரிந்தது. உயரமான பருத்த தோற்றமுடைய மோப்ப நாய்கள், அவர்கள் தான் காவலாளிகள். திடீரெனக் குரைத்தன. திடுக்குற்று எழுந்த நேசன் நிதானித்தவாறு சுவரில் சாய்ந்து கொண்டான். 'பீப் பீப்' என்ற நீண்ட விசில் ஓசை அலறியது. பாதங்களின் ஓசையைத்தான் கேட்க முடிந்தது தவிர, என்ன நடந்திருக்கும் என்பதை அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை.

நேசனால் அப்போது தூக்கத்தை மீண்டும் அழைக்க முடியவில்லை. இது வழமையாக அனுபவித்து வரும் கொடுமைகளில் ஒன்று. 'வெளியில் நடமாடும் எத்தனை இளைஞர்கள் இன்று இங்கே வரப்போகிறார்களோ!' என அவன் மனம் ஏங்கியது. காலையில் தினமும் அவன் கடவுளை வேண்டுவது 'என்னைப் போன்று எவரும் இங்கு வந்து வேதனைப் படக்கூடாது' என்பது தான். 'நீதியை அறியாத இக் கொடிய சட்டத்தால் எம்மைப் போன்ற எத்தனை இளைஞர், யுவதிகளின் வாழ்க்கையைச் சிதைத்து விட்டார்கள். அரசினது வன்மையான போக்கும் எம்மைப் போன்றவர்களுக்கு இளைத்து வரும் கொடுமைகளும் எப்போது உலகிற்கு புலப்படுத்தப்படும். அரசினது முகமூடி எப்போது கிழிக்கப்படும். எப்போது எமக்கு நீதி கிடைக்கும்' என சிந்தனை ரேகைகள் நேசனின் மனதில் படர அவனது இமைகளினூடாக கண்ணீர் வழிந்து அவனது நெஞ்சை நனைத்தது.

⚛



# நூல்நோக்கு

**நூல்** :- சத்தியதரிசனம் (சிறுகதைகள்)
**ஆசிரியர்** :- சிற்பி
**விலை** :- ரூபா 150
**வெளியீடு** :- யாழ். இலக்கியவட்டம், யாழ்ப்பாணம், இலங்கை.




காலத்தின் பதிவாகக் கொள்ளப்படுவது படைப்பிலக்கியத்தின் ஒரு பகுதியாகும். படைப்பாளன் என்பவன், தான் சார்ந்த சமூகத்தின் அசைவியக்கங்களை, மாறுதல்களைப் பெற்ற அனுபவத்தினூடாக எழுதும் போது, அது அக்காலத்தின் பிரதிபலிப்பாகத் தோற்றம் கொள்கிறது.

இந்தவகையில், எமது முதுபெரும் எழுத்தாளர்களில் ஒருவரான 'சிற்பி' என எல்லோராலும் அழைக்கப்படும் திரு.சி.சிவசரவணபவன் அவர்களின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான 'சத்திய தரிசனம்' எனும் நூலை நோக்குமிடத்து இந்நூலில் உள்ள ஒவ்வொரு கதைகளும் ஒரு காலத்தின் பதிவாகவே கொள்ள முடிகிறது.

'சத்திய தரிசனம்' எனும் சிறுகதைத் தொகுப்பை யாழ். இலக்கிய வட்டம் தனது 69ஆவது வெளியீடாக வெளிக் கொணர்ந்துள்ளது. நூற்றுப் பதினெட்டுப் பக்கங்கள் அடங்கிய இத் தொகுப்பில் மொத்தம் பதினொரு சிறுகதைகள் முறையே 1956இல் இருந்து 2001ஆம் ஆண்டு வரையான கால கட்டங்களில் வெளிவந்த ஈழகேசரி, வீரகேசரி, சுதந்திரன், தீபம், சஞ்சீவி, மறுமலர்ச்சி, ஈழமுரசு ஆண்டுமலர், அமிர்தகங்கை ஆகிய சஞ்சிகைகளிலும் மற்றும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. அவையே இத் தொகுப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்தொகுப்பைச் சிற்பி அவர்கள்தமது பெற்றோருக்கு 'காணிக்கை'யாகச் சமர்ப்பித்துள்ளார். கணனி அச்சுப் பதிப்பில் பார்வைக்கு அழகாக, அடக்கமான உருவமைப்புடன் திரு.ரமணி அவர்களின் அட்டைப்பட ஓவியத்துடன், தோற்றப்பொலிவுடன் இந்நூல் வெளிவந்திருக்கின்றது.

மேற்படி,சிற்பி அவர்களின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான இச் சத்தியதரிசனத்தை, இன்றைய கால கட்டத்தோடு ஒப்பிட்டு இவையாவும், 'நவீனத்துவம் அற்ற படைப்புக்கள்' என விமர்சனம் செய்வதைவிடுத்து அக்கதைகளையும், கதைகள் எழுதப்பட்ட காலத்தையும் அக்காலத்தின் சமூக சூழ்நிலைகளையும் நோக்கும் போது கதைகள்யாவும் நன்கு சிறந்ததொரு இலக்கியப் படைப்பாகவே கொள்ளமுடிகின்றது.

அத்தோடு, இன்றைய 2002 ஆம் ஆண்டு காலகட்டத்தில் வாழும் இளம் படைப்பிலக்கியவாதிகளுக்கு, சிற்பி அவர்களின் 1956ஆம் ஆண்டு காலப் பகுதிக்குப் பின்னான இலக்கியப் படைப்புக்கள் பலவும் இச் சிறுகதைத் தொகுப்பினூடாக அக்கால சமூக யதார்த் தத்தினை தெளிவாகப் புரிந்து கொள்ளச் செய்கின்றன. இதே போன்று, வேறு பல மூத்த எழுத்தாளர் களும், தாம் வாழ்ந்த காலத்தின் பதிவுகளைத் தொகுப்பாக, நூலாக வெளிக் கொணர்வது இன்றைய இளம் படைப்பாளிகளுக்கு பயனுள்ளதாக அமையும் என்பது எனது பொதுவான கருத்தாகும்.

மேலும், இத்தொகுப்பில் உள்ள பதினொரு சிறுகதைகளும், எளிய கிராமிய நடையைக் கொண்டிருப்பதோடு, அவற்றை எவரும் இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றன.

உதாரணத்துக்கு- 'புரைதீர்ந்த நன்மை' எனும் சிறுகதையில்; 'இந்த நெரிசலுக்கை நிண்டு, எரிச்சல் பட்டுக்கொண்டு தன்ரை தொழிலைச் செய்யிறவன், ஆரெண்டும்பாராமல் என்னை ஏசத் துடங்கினா னெண்டால்....'(பக்:04)

'மக்கள்தொண்டு' எனும் கதையில்- ''உங்கள் உப்பைத் திண்டு வளர்ந்தவன் நான். இண்டைக்கு மட்டும் அரைக் கொத்தரிசி குடுங்கோ, போதும். என்ரை காய்ச்சல் மாறினாப்பிறகு உழைச்சு, உங்கடை கடனை அடைப்பன் ஐயா!'' (பக்:11) என்று எழுதப்பட்டிருப்பது ரசிக்கக் கூடியதாக இருக்கின்றன.

இதுதவிர, சமகால நவீனத்துவப் போக்குகளில் காணப்படும் குறியீட்டு வடிவங்கள் எதுவுமற்று காணப்படும் இச்சிறுகதைகளை வாசிக்கும்போது மனதை மெல்லிறகால் வருடுவது போன்ற உணர்வு எழவே செய்கின்றது.

''காலங்கள் மாறலாம் ஆனால், காட்சிகள் மாறாது'' என்பதற்கமைய 1956இல் ஈழகேசரியில் வெளியான 'புரைதீர்த்த நன்மை' எனும் சிறுகதையில் பண்டிதர் பரமசாமி பேருந்துப் பயணம்செய்யும் போது, அவர் பெற்றுக்கொள்ளும் அநுபவத்தினூடாக- சிற்பி அவர்கள், ''ஐம்பது பேர் மட்டும் பிரயாணம்செய்யக் கூடிய அந்தப் பஸ்சில் அதைவிடப் பலமடங்கு பிரயாணிகளை 'அடைத்த' பின்னர்தான், கொண்டக்டர் பிரயாணச்சீட்டு விநியோகிக்கும் கடமையைத் தொடங்கினான்'' (பக்:03)எனத் தெரிவிப்பதிலிருந்து, பேருந்துப் பிரச்சினைகள் 1956ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டும்தான் இருந்ததல்ல என்பதையும், அவை இன்றைய 2002ஆம் ஆண்டு காலத்திலும் (உதாரணத்துக்கு புதுக்குடியிருப்பு-மல்லாவி பேருந்துப் பயணம்) தொடர்ந்து நடைபெறுகிறது என்பதையும் கதையை வாசிக்கும் போது புரிந்துகொள்ள முடிகிறது.

அத்தோடு, 1958 இல் எழுதப்பட்ட 'மக்கள் தொண்டு' எனும் சிறுகதையில், சமூகத்தில் இரு வேறுபட்ட வர்க்கங்களை வெளிப் படுத்திக்காட்டும் சிற்பி அவர்கள், ஒரு மனிதன் எப்படி அரசியலுக்கு வருகிறான்? அவனுக்குள்ளே இருக்கும் 'முகங்கள்' எத்தனை? என்பதையும் எடுத்துக்காட்டுவதோடு, கதையின் முடிவைப் படிப்போரின் மனதில் நன்கு பதியும்படியாகவே செய்துவிடுவது பாராட்டத்தக்கதொரு விடயமாகும்.

இதுதவிர, 1977இல் நாட்டில்ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, நடைமுறைக்கு வந்த, திறந்த பொருளாதாரக் கொள்கையினால் உடல்உழைப்பைக் கொண்டிருந்தவர்கள்எவ்வளவு தூரத்துக்கு மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள் என்பதையும், முதலாளித்துவம் அதை எப்படிப் பயன்படுத்தி உழைக்கும் வர்க்கத்தைச் சுரண்டியது என்பதையும் 'ஒரு திருட்டின்கதை' மிகத்தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

இக்கதையில் வரும் வல்லிபுர ஆழ்வார் என்பவனின் கடினமான உடல் உழைப்பை- 'வயலில் அவன் நன்றாக உழைத்தான். அவனுடைய வஞ்சகமற்ற உழைப்பையும், வழிந்தோடிய வியர்வையையும் ஏற்றுச் சுவறிய பூமித்தாய், தனது பூரிப்பை வெங்காயக் கட்டுக்களாகவும், மிளகாய்க் குவியல்களாகவும் வெளியிட்டாள்'' எனச் சிற்பி அவர்கள் எளிமையாக புரியும் படியாகக் குறிப்பிடுவது மனதுள் ரசிக்கக் கூடியதாகவே இருக்கிறது.

மேலும், இக்கதையைப் படித்து முடிக்கும் போது, மனம் இறுகி ஆழ்வாருக்காக அனுதாபப்பட வைக்கும் சிற்பி அவர்கள், அக்காலத்து ஆட்சியாளர்மீதும் ஆத்தரம் கொள்ள வைக்கிறார். கதையைப் படிப்போர்மனதில் வல்லிபுர ஆழ்வார் நன்கு பதிந்தே போகின்றான்.

அத்தோடு, இத்தொகுப்பில் உள்ள ஏனைய சிறுகதைகளும் எளிமையாகவும் எவரும் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் படைக்கப்பட்டிருப்பதுடன், இதில், 'ஒரேஒருத்திக்கு' எனும் சிறுகதையில்உள்ள சில பந்திகள் 'கவிரஸம்' சொட்டுவதாக எழுதப்பட்டிருப்பது, அப்பந்திகளைத் திரும்பத்திரும்ப வாசிக்கவும், ரசிக்கவும் தூண்டுகின்றது.

உதாரணத்துக்கு 59ஆம் பக்கத்தில் உள்ள ஐந்தாவது பந்தியில் உள்ள சிலவரிகளை கவிவடிவத்தில் எழுதும்பொழுது-

''ஆவி பறக்கும்தேநீரை
அன்புடனே அளிப்பாய்.
ஆளுக்கு அரைப்பங்காக
அமுதமெனக் குடிப்போம்.
என்னுடம்பைக் கவனிக்க வேண்டும்
என்று
உபதேசம் செய்வாய்.
உடைகளை அடுக்கி வைத்துவிட்டு
உதவிகள் செய்வாய்.....''

என அமைந்திருப்பதானது சிற்பி அவர்கள் ஒரு கவிஞராகவும் இருந்திருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறாக, தனது முந்தைய காலப்படைப்புகளை அறிந்து கொள்ளவும்,அதன் காலத்தைத் தெரிந்துகொள்ளவும் எமக்கு அவற்றைச் சிறுகதைத் தொகுப்பாக தந்த சிற்பி அவர்கள், பாராட்டுதலுக்கும், நன்றிக்கும் உரியவராகி நிற்பதோடு, அவர் ஈழத்துச் சிறுகதைப் படைப்பாளிகளில் முக்கியமான ஒருவராக.... ஈழத்து நாவலாசிரியர்களில் ஒருவராக... ஈழத்து இதழியலுக்கு மிக முதன்மையான பங்களிப்புச் செய்தவராக இன்று எல்லோராலும் கணிக்கப்பெறுவது மிகையான தொன்றல்ல. ❑

-அம்மான்-

தங்கள் தவறை ஒத்துக் கொள்ளக்கூடியவர்கள் சிலரே; வெகுசிலரே. - ஜானத்தன் ஸ்லி.:.ப்ட்




# இளையநாதம்

## குட்டிக்கதை

### சுயமுடிவு வேண்டும்

ஒருநாள் முதியவருடன் சிறுவன் வெளியூர் பயணத்திற்கு தயாராகினான். முதியவர் குதிரைக்குமேல் ஏறி இருந்தவாறு சவாரி செய்ய சிறுவன் நடையில் புறப்பட்டான். குதிரை, முதியவர், சிறுவன் மூவரும் நெடும் தூர பயணத்திற்காக சாலை வழியே போய்க் கொண்டிருந்த வேளை முதியவரின் நண்பர் மற்றும் அவரது உறவினர் ஆகியோர் முதியவரை கண்டு பயணத்தைப் பற்றி கேட்டறிந்து விட்டு முதியவரிடம் கூறிய வார்த்தை, என்ன முதியவரே நீங்கள் குதிரை மேல் ஏறிச் சவாரி செய்ய சிறுவன் நடையில் வருவதா? இது உங்களுக்கு நல்லதாகத் தெரிகின்றதா எனக் கேட்டார். முதியவர் சற்று யோசித்த பின்னர் அதிலிருந்து பயணத்தை ஆரம்பித்த போது சிறுவனை குதிரை மேல் ஏற்றி, தான் நடந்து சென்றார். பலமைல் தூரம் பயணம் கழிந்து கொண்டிருந்த வேளை எதிர்வழியே வயது வந்த பாட்டி ஒருவர் வந்து கொண்டிருந்தார். பெரியவரைக் கண்டதும் மரநிழலில் நின்று கேள்வி கேட்டு கதைக்க ஆரம்பித்தார். பெரியவரின் கடினமான பயணத்தை



கேட்டு நலம் விசாரித்தார். பின்னர் மீண்டும் பயணத்திற்கு பெரியவர் தயாராகினார். இதன் போது பாட்டி சிறுவனைப் பார்த்து கேட்டார். தம்பி உனது வயதையும் பெரியவரின் வயதையும் ஒப்புட்டுக் கூட பார்க்கமுடியாது நீ நடந்து கொண்டு பெரியவரை குதிரை மீது உட்கார்ந்து வருவதற்கு அனுமதி கொடு என்றார் பாட்டி, பாட்டி சொன்னபடியே சிறுவனும் மாற்றிவிட்டு பயணத்தை ஆரம்பிக்க முடிவெடுத்த போது பெரியவர் சிறுவனுக்கு சொன்னார் எமது பயணம் கடினமானது என்று தெரிந்தும் நாம் புறப்பட்டோம் ஆனால் வரும் வழியில் பலவகையான சோலி நிறைந்த முடிவுகள் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. இனி சொந்த முடிவிலேயே நாங்களும் நடந்து, குதிரையையும் நடத்திக் கொண்டு போவோம் என்றார் பெரியவர், சரி அப்படியே செய்வோம் என்றான் சிறுவன். தொடர்ந்து பயணம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இடையில் வந்த ஒருவன் ஐயா ஏன் நீங்கள் வயது போன நேரத்தில் ஏலாமல் நடந்து வாறீங்கள் குதிரை மீது ஏறிப்போகலாம் தானே என்றான். பெரியவர் சொன்னார் தம்பி உன்னைப் போல பலபேரை வரும் வழியில் கண்டு கொண்டு தான் வாறன் இனி என்ற முடிவில மாற்றமில்லை நடந்தே போகப் போறன் என்று நேர்த்தியான முடிவாகக் கூறினார் பெரியவர். அதன் படியே பயணம் நடந்து கொண்டிருந்தது அப்போது சிறுவன் யோசித்தான் முன்பே இந்த முடிவு எடுத்திருக்க வேண்டும். பரவாயில்லை இப்பவாவது இந்த முடிவு எடுத்தது நல்லதாப் போச்சு என்று சிந்தித்தான் சிறுவன், இறுதியில் நடையிலேயே பயணம் முடிவடைந்தது.

த.நக்கீரன்.

## வாரம் ஒரு குறள் அறிவோம்



சிறுவர்களாகிய நாம் பெரியோர்களை மதித்து அவர்களைப் பணிந்து வாழவேண்டும். நாம் வாழ்க்கையில் முன்னிலைக்கு வருவதற்கு பெரியோர்களின் வாழ்த்தும் ஆசியும் மிக அவசியமாகும். அதாவது வீட்டில் தாய் தந்தையரையும், பாடசாலையில் குருவையும் மற்றும் பெரியவர்களையும் மதித்து போற்றி வாழப் பழக வேண்டும். நாம் பெரியோர்களை உதாசீனம் செய்தால் அது எமக்குத்தான் துன்பத்தைத்தரும். அவ்வாறு நாம் பெரியோர்ரைப் போற்றி வாழ்வோமானால் சீரும் சிறப்புடனும் வாழலாம். நாம் பெரியோரை அவமதிப்போமாயின் துன்பத்தையே அனுபவிக்க நேரிடும்.

இதனையே எமக்கு உணர்த்துவதற்காக திருவள்ளுவர் திருக்குறள் மூலம் அழகாகத் தந்துள்ளார்.

"பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்."

## ரதனும் சுதனும்



ரதன்: சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள சரியான் தொலைவு என்ன?

சுதன்: இந்தத் தொலைவு சராசரியாக 1500 லட்சம் கி.மீ அல்லது 930 லட்சம் மைல்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால் பூமியானது சூரியனை ஒரு சீரான வட்டப் பாதையில் சுற்றிச்சுழல்வதில்லை. முட்டை போன்ற பாதையில் சுற்றுகிறது. ஏப்ரலில் அதன்தொலைவு 1465 லட்சம் கி.மீற்றராகவும்(915 லட்ச மைல்களாகவும்) நவம்பரில் 1515 லட்சம் கி.மீற்றராகவும் (945 லட்சம் மைல்களாகவும்) .இருக்கின்றது. இந்த 48 லட்சம் கி.மீ (30 லட்சம் மைல்) வித்தியாசத்துடன் தொலைவாகப் போனால் குளிரால் நடுங்குகின்றோம், அருகில் சென்றால் கோடைக்காக வருந்துகின்றோம்.


## உங்களுக்குத் தெரியுமா?

பார்த்தால் ஒரு கல்லைப் போல ஒரு மீன் ஆழ்கடலிலே உள்ளது.



ஆழ்கடலினுள் பாறைகளோடு பாறையாய் காணப்படும் இந்த மீனை 'கல்மீன்' (stone fish) என்று அழைக்கின்றனர். தன் உடலில் உள்ள கூரிய ஊசி போன்று முள்ளால் தன் எதிரிகளைக் குத்தித்துரத்தும். இந்த முள்ளில் உள்ள கொடிய நஞ்சு எதிரியை அழித்துவிடும்.


டொல்பின் இன மீனுக்கு கூர்மையான 200 பற்கள் உள்ளன. இந்த டொல்பின் ஒவ்வொரு நாளும் தனது பற்களைத் துலக்கினால் எப்படி இருக்கும் என்று கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்!



ஒரு கட்டை விரல் நகத்தினுள் அடங்கும் அளவிலுள்ள குள்ளக் கோபியே (Dwarf gopy) உலகின் மிகச்சிறிய மீன்.



தண்ணீருக்குள் 100 கிலோ மீற்றர் வேகத்தை ஒரு மணி நேரத்தினுள் நீந்திக் கடக்கும் மீனின் பெயர் செயில்.



இதன் நீண்ட மூக்கு கத்தியைப் போல நீரைக் கிழித்துச் செல்லும்.

உங்கள் உடலில் உள்ள நீண்ட எலும்பு எது? தொடை எலும்புதான் அது.




உலகின் மிகப்பெரிய நண்டின் பெயர் சிலந்தி நண்டு. நாலுமீற்றர் நீளமுடையது. தனது கைகளை நன்கு விரித்து ஒரு நீர் யானையையே இது சுற்றிக் கொண்டு விடும்.



யோகன்

## ஒன்று கூடி வாழுவோம்



ஒன்று கூடி நாங்கள்
ஒற்றுமையாய் வாழுவோம்.
சாதி மதம் இல்லாமல்
சமமாக வாழுவோம்


பெரியார் சிறியார் என்றுமே
பெருமையாக வாழுவோம்
மாணவர்கள் நாங்கள்
மகிழ்ச்சியாக வாழுவோம்

ஒற்றுமையாக வாழ்ந்தால்
உலகம் எம்மை மதிக்கும்
ஒன்று கூடி நாங்கள்
ஒற்றுமையாக வாழுவோம்.


தரம்-10
சுப்பிரமணியம்-லயாசினி
கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

## கண்டு பிடியுங்கள்

வித்தியாசமான பெட்டி எது?




ஐந்து குச்சிகளைக் கொண்டு இரண்டு முக்கோணங்களை உருவாக்குங்கள் பார்க்கலாம்.



## அழகு

கடலுக்கு அழகு
அலைகளாம்
காட்டிற்கு அழகு
மரங்களாம்
மயிலுக்கு அழகு
தோகையாம்
மானுக்கு அழகு
மேனியாம்
செடிக்கு அழகு
மலர்களாம்
சுடருக்கு அழகு
வெளிச்சமாம்
உடலுக்கு அழகு
தூய்மையாம்
உள்ளத்தின் அழகு
நேர்மையாம்

தெ. மோகனதாசன்,
கிளி-புன்னைநீராவி
வித்தியாலயம்.

## "சிரிப்போமா"



சந்தை வியாபாரத்தை முடித்துக் கொண்ட ஒரு வயோதிப மாதுவான மரக்கறி வியாபாரி தனது வெற்றுக் கூடையுடன் பஸ்சில் ஏறினார். அவர் தனது கூடையை சாரதியின் கியர் பெட்டிக்கு அருகில் வைத்துவிட்டார்.

சாரதி பஸ்சை எடுக்க ஆரம்பித்த போது கியர் போடும் பகுதிக்குப் பக்கத்தில் கூடை இருப்பதைக்கண்டு கூடையை இப்படி வைத்தால் கியர் எங்கே போடுவது என்றார்.

அப்போது பஸ்ஸில் இருந்த அந்தக் கூடைக்குரிய வயோதிப மாது, ''தம்பி கியரை என் கூடைக்குள் போடு, நான் இறங்கிப்போகும் போது அதைத் தந்துவிட்டுப் போகிறேன்.'' என்றார்.



யோ – பாணுகோபன்

ஒரு நாட்டின் தலைவர்கள் எப்படியோ, அப்படியே அந்நாடும் இருக்கும். - ஸிஸரோ

### டொக்டர் ருத்திரனின்

# திருமணம் சில எண்ணங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பெண் மணமுறிவுக்குப் பின் பாதுகாப்பின்றி உணர்கிறாள். பணமும்,படிப்பும், வேலையும் வசதியும் இருந்தாலும் பாதுகாப்பின்றி உணர்வதால்அவள் மணமுறிவை ஏற்கத் தயங்குகிறாள். விவகாரத் தானவளை எளிதாக ஏமாற்றி உறவு கொள்ளலாம் என்று பல ஆண்கள் தவறாக நினைத்து



நடந்து கொள்வதாலேயே பெண்ணுக்குள் இந்தப் பாதுகாப்பின்மை , சமூகத்தில் அவளைச் சந்திக்கும் எல்லோருக்கும் துக்கம் விசாரிப்பதும் முதுகுக்குப் பின் குற்றமும் கேலியும் செய்வதையும் தாங்கும்வலிமையின்றியே பல பெண்கள் மணமுறிவைத் தவிர்க்கிறார்கள். சில பெண்களுக்கு மணமுறிவினால் கணவனின் மூலம் கிடைத்த சமூக 'அந்தஸ்து' பெருமை, பணம்,சௌகரியங்கள்- இவை குறையும் அல்லது இல்லாமல் போகும் என்ற அச்சம்கலந்த சுயநலத்தேவையே மணமுறிவைத் தவிர்க்க வைக்கிறது.

ஆண்களில் பெரும்பாலோர்க்கு மணமுறிவு என்பது ஒரு தோல்வியாகவே தோன்றுகின்றது. அது ஒரு திருமணத்தின் தோல்விதான். வாழ்க்கையின் தோல்வியல்ல என்ற தெளிவில்லாததே மணமுறிவை அவர்கள் விரும்பாததற்குக் காரணம் 'ஆண்-வீரன்-தோற்கமாட்டான்' என்ற ஆணாதிக்க மனப்பாண்மையும் இதற்கு ஒரு காரணம்.


மேற்கூறிய காரணங்களை மீறி உண்மையிலேயே திருமண உறவில் நிகழ்ந்த கலப்பைப் போக்கி வாழ்வை மீண்டும் புதிதாய் நிர்மாணிக்க முடியும் என்ற நம்பிக்கை -(ஆசையல்ல, நம்பிக்கை) இருந்தால் மணமுறிவைத் தவிர்க்கமுயலலாம். இதிலும் இருவரின் சம உழைப்பும் முனைப்பும் வேண்டும். பிறருக்காக மீண்டும் இணைந்தால் அந்தப் பொய் மீண்டும் உறவைப் பிளக்கும்.

திருமணம் உயர்வானது அதைவிட ஒருவருக்கு தன் வாழ்க்கை. முக்கியமானது. திருமணம் ஒருவர் மட்டும் தீர்மானித்துச் செல்லும் திசை அல்ல. அது இருவருக்கும் இழுக்கும் அலங்காரத்தேர். ஒருவர்மட்டுமே உழைத்தால் அற்புதமான தேர்கூட அலங்கோலமாக ஓடும். இருவரும் இணைந்து முயன்றால் அந்த ரதம்பார்ப்பவர் வியக்கும்படி யும், மதிக்கும்படியும் அமையும். திருமண வாழ்வுஇப்படித்தான் இருக்க வேண்டும் என்பதைக் கணவன் மனைவி சேர்ந்தே தீர்மானிக்க வேண்டும். இது இருவரின பிரத்தியேகம். அந்தரங்கம்வேறு எவருக்காகவும் நடத்தப்படும் நாடகமல்ல. புரிந்துகொண்டால் இது எளிது. இனிது. புரிய வைக்கவும் புரிந்து கொள்ளவும் இருவரும் தீர்மானித் தால் தான் திருமணம் என்பது நிரந்தரமாகும். நிறைவாகும்.

திருமணம் என்பது அந்த ஆரம்பக்கொண்டாட்டம் மட்டுமல்ல. அதன்பிறகு மீதிவாழ்க்கை. திருமணத்துக்குப்பின் வாழ்க்கையை பல விசயங்கள் உருவாக்குகின்றன. அவற்றில் ஒன்று குழந்தையின் பிறப்பு. கணவன்-மனைவி குழந்தை என்ற குடும்பம் பல கட்டங்களைக்கடக்கிறது. ஒவ்வொரு கட்டத்திலுள்ளவர்கள் வயது கூடுகிறது. அனுபவம் கூடுகிறது. சுற்றிலும் உலகம் மாறுகிறது......ஒவ்வொரு கட்டத்தையும் சுருக்கமாகப் பார்த்தால் முழு வாழ்க்கையும் விளங்கும். முதலிரவு தொடங்கி முதல் குழந்தை பிறக்கும் வரையில் முதல் கட்டம் என்று வைத்துக் கொள்வோம். முதல் குழந்தை இரண்டிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் பெரும்பாலோர்க்குப் பிறப்பதால், திருமணமான முதல் மூன்று ஆண்டு களை -குழந்தை பிறக்கும் வரையிலான காலத்தை- நோக்கினால் கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகமாகிவரும். உடலுறவு இந்தக்கட்டத்தில் அடிக்கடி நிகழும். புதிய உறவு என்பதால் விட்டுக்கொடுத்தல் அதிகமாகவும் குறைகூறுதல் குறைவாகவும் இருக்கும். கூட்டுக் குடும்பத்தில் இருப்பவர்களைவிட தனிக்குடித்தனம் செய்பவர்களுக்கு இந்தக் காலகட்டத் திருமண உறவு மிகவும் மகிழ்வானதாக அமையும். கணவன் மட்டுமோ, இருவருமோ வேலைக்குச் சென்றாலும்- மீதமுள்ள நேரத்தை எதிர்பார்த்து முழுமையாய் இன்பமாய் அனுபவிப்பதில் கழியும்.

குழந்தை பிறந்து விடலைப்பருவம் அடையும்வரை திருமண உறவில் இரண்டாவது காலகட்டம். குழந்தையின் வளர்ச்சி, உடல்நலம், கல்வி, ஆகியவற்றிலேயே தம்பதிகளுக்கு நாட்டம் அதிகமாகும். இருவரும் பிரத்தியேகமாய் அந்தரங்கமாய் இருக்கும் நேரம் இந்தக் கட்டத்தில் குறைய ஆரம்பிக்கும். இதே காலகட்டத்தில் மகிழ்ச்சிக்கு பணமும், சேமிப்பும் அவசியம் என்ற உணர்வு தோன்றும். இது வீட்டை விட வேலையில் அதிக ஈடுபாட்டை ஏற்படுத்தும். இருவரும் புரிந்து உணர்ந்து இதை நோக்கிச் செயல்பட ஆரம்பித்தால் சிக்கலில்லை. குடும்பத்தைவிட வேலை முக்கியமா? பணம்தான் வாழ்க்கையா? என்ற கேள்விகள் இந்தக் கட்டத்தில்தான் ஆரம்பமாகும். சலிப்பின் அறிகுறி இது. அடுத்த கட்டம் குழந்தை இளைஞனாக மாறும் போது ஏற்படும் தம்பதிகள் திடீரென்று சுமைகளை உணர்வார்கள். மற்றவர்கள் முன்னால் தங்கள் 'குழந்தை'யை அறிமுகப்படுத்தும் போது அவனைப்பற்றி பெருமையாகப் பேச நினைப்பவர்கள் . தங்கள் இளமையை, கடந்த காலத்தில் அனுபவித்த துடிப்பை மறந்து, தேவையில்லாமல் தங்கள் ஆசைகளை தங்கள் மகன் மகள் மீது திணிப்பார்கள். திணறுவார்கள். விளைவாக தங்களுக்குள் தேவையின்றி சண்டையிடுவார்கள். ஒருவர் மற்றவரை அதிகம் குறைகூறும் (கூறாவிட்டாலும்- காணும் கால கட்டம் இது).

பெற்ற மகனோ மகளோ திருமணமாகி தனியே சென்றபின், உடம்பின் தேவைகளைவிட உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளும் தேவையை



உணர்வார்கள். இந்தக்கட்டத்தில் வாழ்விலும் தலையிடுவார்கள். சிலருக்கு வயதாகிவிட்டது. ஓய்வு எடுக்கும் கட்டம் என்று புரியாது அதாவது அதை ஏற்க மாட்டார்கள். இந்த வயதிற்குள் இருவரும் தோற்றத்தில் நிறைய மாறியிருப்பார்கள். மாற்றத்தை ஏற்பவர்கள் நிறைவோடும், மறுப்பவர்கள் சலிப்போடும் வாழ்வைக் கழிப்பார்கள். இப்படிப் படிப்படியாய் கடைசி மூச்சுவரை தொடர்வதுதான் திருமண உறவு.

நெடுங்காலம் இருக்கும் இந்த உறவில் தம்பதிகள் தங்களுக்கு பிறர் தொந்தரவு தலையீடு இல்லாத நேரங்களை எப்படிச் செலவிடுகிறார்கள் என்பதை ஹெண்டர்ஸன் என்பவரின் ஆய்வு காட்டுகிறது. அவருடைய கணிப்பில், இங்கிலாந்தில், தம்பதிகள் தங்களுக்குக் கிடைக்கும் நேரத்தை கீழ்க்காணும் வழிகளில் தான் (வரிசைப்படி) அதிகமாகச் செலவழிக்கிறார்கள்.

> **ஆண்களில் பெரும்பாலோர்க்கு மணமுறிவு என்பது ஒரு தோல்வியாகவே தோன்றுகின்றது. அது ஒரு திருமணத்தின் தோல்விதான். வாழ்க்கையின் தோல்வியல்ல என்ற தெளிவில்லாததே மணமுறிவை அவர்கள் விரும்பாததற்குக் காரணம் 'ஆண்-வீரன்- தோற்கமாட்டான்' என்ற ஆணாதிக்க மனப்பாண்மையும் இதற்கு ஒரு காரணம்.**

(01) படுக்கையில்.
(02) தொலைக்காட்சிப் பெட்டியின் எதிரில்
(03) வீட்டில் உள்ள தினசரிக் காரியாலயங்களில்.
(04) சதுரங்கம் போன்ற ( நம் ஊரில் சீட்டு) விளையாட்டுக்களில்.
(05) காலையிலோ மாலையிலோ வெளியே நடப்பதில்.
(06) சாப்பிடுவதில்.
(07) அந்தரங்கமாய் உரையாடுவதில்.
(08) சண்டை போட்டுக்கொள்வதில்.

நம் நாட்டிற்கு இது அப்படியே பொருந்தும் என்று எனக்குத் தோன்றவில்லை. விளையாடுவது, 'வாக்கிங்' போவது எல்லா குடும்பங்களிலும் சாத்தியமில்லை. பொருளாதார வசதியே இந்தப் பட்டியலில் சிலவற்றை நிர்ணயிக்கிறது.

ஆனால் படுக்கையில், தொலைக்காட்சியில், வீட்டு வேலை செய்வதில், சண்டையிடுவதில், நம் நாட்டின் தம்பதிகளும் அதிக நேரம் செலவழிக்கிறார்கள். இவற்றில் சுகம் தரும் விஷயங்களை அதிகரித்து, தங்களுக்குள் பேசும் வாய்ப்புக்களை அதரிகரித்துக் கொண்டால் உறவுக்கு உதவும்.

திருமண உறவை திருப்தியாக வைத்துக்கொள்வது என்பது இருவர் கையிலும் உள்ளது. இதற்குப்பொதுவாக சில விஷயங்கள் உதவும் என்று மனவியல் ஆய்வுகள் கூறுகின்றன. அவற்றில் நம் நாட்டிற்குப் பொருத்தமானவற்றில் சில.

(01) இனிமையாகப் பேசுவது: சின்னச் சின்ன சந்தோசங்களை வாய்விட்டுச் சொன்னால் அடுத்தவருக்கும் மகிழ்ச்சியாக இருக்கும். குறைகூறும்போதும் அடுத்தவர் மனதுக்கு வலிக்குமளவு மென்மையாக ஆனால் தெளிவாகப் பேசுவது உதவும்.

(02)இனிதாய்ப் பழகுவது அன்புடன் அணைப்பது, ஆதரவாகக் கையைப் பிடிப்பது போன்ற காரியங்கள் சொல்லாமலேயே நம் அன்பையும் அக்கறையையும் அடுத்தவர்க்கு உணர்த்தும். உடலுறவில: அச்சம் கூச்சம் தவிர்த்து இருவரும் சம அளவில் பங்கேற்பதே சிறப்பாகும். தருவது யார் பெறுவது யார் என்றில்லாமல் தேவையைக் கேட்டும் பெற்றுக் கொள்ளலாம். அடுத்தவரிடம் கறை இருந்தால் அதைப்போக்க அன்போடு உதவலாம். குறையைச் சுட்டிக்காட்டும் போதுமட்டும் மிகவும் கவனமாக இருக்க என்ற தொனியில் கேலி இருக்கக் கூடாது. கனிவு இருக்கக் கூடாது.

நேரம்: கிடைக்கும்போதெல்லாம் ஒன்றாக இருக்க வேண்டும். அந்த நேரங்களில் இருவருக்கும் பிடித்த பொழுது போக்குகளில் ஈடுபட வேண்டும். பொழுதுபோக்கு உடலுக்கும் மனதுக்கும் ஓய்வு தரும். ஓய்வுக்குப் பின் ஓர் உற்சாகம் வரும். பலர் பொழுது போக்காகச் சில விஷயங்களில் ஈடுபடுவதைக் காலம் வீணாவதாக நினைக்கிறார்கள். இது தவறு. பொழுது போக்கு வாழ்க்கைக்கும் உறவுக்கும் அத்தியாவசியமானது.

(05) பொருளாதாரம்: முழுவாழ்க்கை முன்னே விரிந்து கிடக்கும் போது, திட்டமிடுவது அவசியம். இருவருக்கும் தங்களது குடும்பத்தின் பொருளாதார நிலைமை தெளிவாகத் தெரிய வேண்டும். அதைப் பொறுத்து வசதிகளையும் சௌகரியங்களையும் அடைய முயலவேண்டும். சேமிப்பு அவசியம். சௌகரியம் அதைவிட முக்கியம்.

திருமண உறவுதான் மீதி வாழ்க்கை என்பதால் நிச்சயமாக அதில் கீழ்க்காணும் விஷயங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். இவை விதிமுறைகள்தான். திருமணம் என்ற ஒப்பந்தத்தில் பேசப்படாத கேட்கப்டாத விதிகள்தான். இவை குறையும் போதும், மீறப்படும் போதும் தான் தோன்றும்.

முதலில் நம்பிக்கையை நினைவில் கொள்ள வேண்டும். இருவருக்கும் தனித்தனி நண்பர்கள் இருக்கலாம். ஆனால் வாழ்வில் வேறு எவருக்கும் பங்கு கிடையாது என்பதில் தெளிவு வேண்டும். ஒருவரது வருத்தம் சிறிதாக இருந்தாலும் தோல்வி பெரிதாக உடைந்தாலும் ஆதரவாக இருக்க வேண்டும். கஷ்டங்களைப் பற்றிச் சொல்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் மகிழ்ச்சிக்கான சிறிய வெற்றிகளைக் கூட பகிர்ந்து கொள்ள வேண்டும். வீட்டை இருவரின் விருப்பப்படி அழகாக அமைதியாக வைத்துக்கொள்ள முயலவேண்டும். நிறையப் பேச வேண்டும். நெருக்கத்தை வெளிப்படையாகக் காட்ட வேண்டும். மற்றவர் எதிரில் விளையாட்டாகக் கூட ஒருவரையொருவர் மட்டமாகப் பேசக்கூடாது. அதேபோல் துணைவர் எதிரே இல்லாத நேரத்திலும் அவரை விட்டுக் கொடுத்துப் பேசக்கூடாது. ஒருவருக்கு ஏற்படும் அவமானத்தை இருவருமாய் ஏற்க வேண்டும். இருவருக்கும் நண்பர்கள் தனித்தனியே இருக்கலாம். அவர்களில் சிலரைப் பிடிக்காமலும் இருக்கலாம். ஆனாலும், கணவனின், மனைவியின் நண்பர்களை ஓரளவிற்குப் பொறுத்துக் கொள்ளலாம் இந்தளவு என்னென்ன என்பதையும் தம்பதிகள் தங்களுக்குள் தெளிவாய்ப் பேசித்தீர்மானிக்கலாம். ஒருவர் உடல்நலம் குறைந்தால் அவர்வீட்டில் செய்யவேண்டிய வேலைகளை மற்றவர் ஏற்க வேண்டும். ஒருவர் நலத்தில் மற்றவர் அக்கறை கொண்டு அதைக்காட்டவும் வேண்டும். ஆண்கள் மனைவிக்குப் பிடிக்காத புகை, மது போன்றவற்றை ஒழிக்க முடியாவிட்டால் குறைக்க வேண்டும். இதற்கு மனைவியும் சில நேரங்களில் தொந்தரவாகுமளவு தான் பேசுவதை- அப்படியிருந்தால் (நொய் நொய்ன்னு) கட்டுப்படுத்த வேண்டும். அடிப்படையில் இருவருக்குமே வாழ்க்கையை நலமாக்க நாட்டம் வேண்டும். வளமாக்க நம்பிக்கை வேண்டும்.



## நேர்காணல்

ஈழத்தில் பத்திரிகை உலகில் எஸ்.எம்.ஜி என்ற மூன்றெழுத்துக்குரிய எஸ்.எம் கோபாலரத்தினம்ஒரு மிக முக்கிய பிரமுகரேயாவார்.

வீரகேசரி, ஈழநாடு,ஈழமுரசு,ஈழநாதம் ஆகிய தினசரிகளின் ஆசிரிய பீடத்தில் இருந்து அவர் ஆற்றிய பத்திரிகைத்துறைப் பணி ஆழமான அநுபவங்களைக் கொண்டது.

ஊர்சுற்றி (பின்னர் ஒறிஜினல் ஊர்சுற்றி) என்ற பெயரில் அவர் எழுதிய பத்தி எழுத்துலகம் ஜனரஞ்சகமானவை.

மூத்த பத்திரிகையாளரும் இளம் பத்திரிகையாளர் பலருக்கு வழிகாட்டியுமான இவருடனான சந்திப்பின்போது கூறியவை இதோ உங்களுக்காக.....



"தமிழர்களாகிய நாம் வரலாற்றில் பல தடவைகள் ஏமாற்றப்பட்டுள்ளோம். ஏமாற்ற மடையாத ஒரே ஒரு விடயம் ஆயுதம் ஏந்திய போராட்டத்தின் செல்நெறி மட்டுமே. இவ்வாறு அண்மையில் கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்த மூத்த பத்திரிகையாளர் திரு. எஸ். எம் செல்வரத்தினம் அவர்களை செவ்விகண்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். ஆயுதம் ஏந்திய போராட்டம் மூலமே எமது பிரச்சினை தீர்க்கப்பட முடியும் என 1958 முதலே தமிழ்மக்களிடையே நிலவிவந்த கருத்தாகும். ஆனால் சந்தர்ப்பவாத மிதவாத அரசியல் தலைவர்களால் எமது மக்கள் நீண்ட காலம் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள்".

"1958இல் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவன்முறையில் பாதிக்கப்பட்டு கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் தஞ்சமடைந்திருந்த தமிழர்கள் பலர் அங்கு வருகை தந்திருந்த திரு. எஸ் ஜே.ரி செல்வநாயகம் அவர்களை கண்டவுடன் தமிழரசை ஏற்படுத்துங்கள் ஐயா. நாங்களும் உங்களுடன் சேர்ந்து நிற்போம் என்று குரல் எழுப்பினர். அந்தக் கூட்டத்தில் நானும் இருந்தேன். தமிழரசு உருவாகும் என நம்பி இளைஞர்கள் பலர் குறிப்பாக , தமிழ்ச்செல்வன், இறைபுகழ்வாழி, போன்றோர் தமது தொழிலையும் துறந்து இவர்களுடன் இணைந்து உழைப்பதற்கு முன்வந்தனர். ஆனால் அரசியல் வாதிகள் விடுமுறை அரசியல் (Holiday Politics) நடத்துவதில் ஈடுபட்டிருந்தனர்".

"1958இல் கடவுளே வருவார். காடுகளோ சுடும்! என கூறி பதவியாப் பகுதியில் இருந்து வந்த சிங்களக் காடையர்களை வவுனியாவினுள் நுழைய விடாதுதடுத்த 'அடங்காத்தமிழன்' சுந்தரலிங்கம் 1960 நடைபெற்ற பொதுத்தேர்தலில் தனியரசினை முன்வைத்தே போட்டியிட்டார். திரு . அமிர்தலிங்கத்தின் வாதத் திறமையால் இக்கோரிக்கை முறியடிக்கப்பட்டதுடன், தேர்தலில் சுந்தரலிங்கம் தோற்கடிக்கப்பட்டார்".

"1961ம் ஆண்டிலும் தமிழ் மக்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தினால் மாபெரும் எழுச்சியைப் பெற்றிருந்தனர். அந் எழுச்சியை சிறிலங்கா அரசு ஆயுதப்படைகளை ஏவிவிட்டு காட்டுமிராண்டித்தனமான முறையில் இவ்வெழுச்சியை சரியான முறையில் வழிநடத்தியிருந்தால் போராட்டம் சரியான பரிணாமத்தை எப்போதோ அடைந்திருக்கும். அன்றையகால உலக ஒழுங்கு எமது போராட்ட வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருந்திருக்கக் கூடும்."

"அப்பொழுதே தமிழ் மக்களுடைய நல்வாழ்வு சுதந்திரம் என்பன பற்றிய நோக்கங்களை விடவும் பாராளுமன்ற கதிரைகளை பிடித்துக்கொள்வதிலேயே தமிழ் அரசியல் தலைமைகள் அதிக அக்கறையாய் இருந்தனர்.

ஆயுதப் போராட்டம் கூர்மையடைந்த பின்பும் அதனை ஒடுக்குவதற்கு சிறிலங்கா அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்தது. மக்கள் மீது இராணுவ வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டது மட்டுமல்ல பல்வேறு அரசியல் நெருக்கடிகளையும் ஏற்படுத்துவதற்கு முயற்சித்தது. சர்வதேச அழுத்தங்கள் காரணமாக 1985 யூலையில் திம்புவில் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது பேச்சுவார்த்தை மேசையில் இதய சுத்தியுடனான தீர்வை எட்டுவதற்கு அப்போதைய ஜே.ஆர் அரசு விரும்பவில்லை. சர்வகட்சி மாநாட்டை காரணம் காட்டி பிரச்சினையை இழுத்தடித்து நீட்டிச் சென்றது. முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்திகொலை செய்யப்பட்டதுடன் இப் பேச்சு வார்த்தை கைவிடப்பட்டது. ஜே.ஆர். இந்திராகாந்தி கொல்லப்படுவார் என எதிர்பார்திருந்தாரோ என்னவோ?"

"1987இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபை ஒரு உருப்படாத சபை. ஒப்பந்தத்தில் கையெழுத்து வைத்த உடனேயே வடக்கு கிழக்கு இணைப்பிற்கு எதிராக பிரச்சாரம் செய்யப்போவதாக அப்போதைய சனாதிபதி ஜே.ஆர் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார். உருப்படியாக எதனையும் சாதிக்க முடியாத குறைப்பிரவசமான இச்சபை தொடர்ந்த ஆயுதப் போராட்டத்தினாலேயே இன்று வரை உயிர்வாழ்கிறது என்று தெரிவித்த எஸ்.எம்.ஜி யிடம்

அண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தின் போது ஏற்பட்ட அனுபவங்கள் பற்றிக் கேட்டபோது, எமது புலம்பெயர்ந்த மக்கள் கடின உழைப்பினாலேயே தமது வாழ்வை நடத்துவதுடன், இந்த மண்ணில் உள்ள தமது உறவுகளையும் வாழவைக் கிறார்கள் என்றார். அவர்களின் உழைப்பின் கடினத்தை, பெறுமதியை இங்குள்ளவர்கள் உணர்ந்து கொள்வதில்லை என்பது துயரத்தைத் தருகிறது. அவர்களுடைய உழைப்பு இங்கு ஆடம்பர செலவுகளில் வீணடிக் கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

''சந்தர்ப்பவாத, மிதவாத அரசியல் வாதிகளினால் நாம் நெடுங்காலமாக ஏமாற்றப்பட்டோம்''

அரசியலைப் பொறுத்தவரை 90 வீதமான புலம்பெயர்ந்தவர்கள் விடுதலைப்புலிகளுடே மட்டுமே தமிழர்களுக்கான விடுதலையும், கௌரவமும் கிட்டுமென நம்புகிறார்கள். தலைவர் பிரபாகரனின் படங்களை காணமுடியாத எம்மவர் வீடுகளைக் காண்பதரிது. இஸ்ரவேல் எனும் நாடு உருவாகுவதற்கு மேலை நாடுகளின் யூதர்கள் எப்படி ஆதாரமாக இருந்தார்களோ. அவ்வாறே புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களும் எமது விடுதலைக்கான ஆதார சக்தியாக மாறி வருகிறார்கள். எங்களுக் கென்றொரு நாடு, எங்களுக் கென்றொரு கொடி வேண்டும் என்ற உணர்வு எல்லோரிடமும் வேரூன்றியுள்ளதுஎன்று கூறினார் திரு எஸ்.எம்.ஜி அவர்கள்

''இவருடைய ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை எனும் நினைவுப்பதிகை நூல் இந்திய ஆக்கிரமிப்பை ஆழமும் அகலமுமான பரிமாணமுடைய ஒரு தளத்தில் வைத்து எழுதப்பட்டது. ஒரு பத்திரிகையாளன் என்பதற்காகவே அறுபத்திரண்டு நாட்கள் இந்திய சிறையில் அடைக்கப்பட்ட தனது அநுபவத்தையும், உலகின் மிகப்பெரிய சனநாயக நாடு என மார்தட்டிக்கொள்ளும் இந்தியா மக்களின் அடிப்படை சனநாயகமான கருத்து வெளியிடும் சுதந்திரத்தின் ஊடகமான பத்திரிகை யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படுவதை தடுத்ததையும், குண்டு வைத்துத்தகர்த்ததையும் சிறப்பாக வெளிக்கொணர்ந்துள்ளது. தமிழீழ வரலாற்றில் இந்நூலுக்கும் ஒரு சிறப்பான இடமுண்டு.

1953 யூன் 8ம் திகதி வீரகேசரியில் இணைந்துகொண்ட இவர் இன்றுவரை தனது எழுத்துத்துறையை தொடர்ந்து கொண்டேயிருக்கிறார். எழுதிக் கொண்டேயிருக்கும் போதே எனது உயிர் பிரிய வேண்டும் என்பதே எனது ஆசை என்கிறார். இறக்கும்வரை பத்திரிகையாளனாக வாழ விரும்பும் இவர்தமது அநுபவங்களைத் தொகுத்து இன்னும் பல நூல்களை வெளியிட உள்ளார். யாழ்ப்பாணத்தில்

# புலம் பெயர்ந்து வாழ்வோரின் கடின உழைப்பை இங்குள்ளோர் சரியாக புரிந்து கொள்ளவில்லை

## மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம் கோபாலரத்தினம்


சந்திப்பு-
சங்கர் –
அன்ரன் அன்பழகன்

இருந்து வெளியான ஈழநாடு பத்திரிகையில் இருபதாண்டுகள் கடமையாற்றிய எஸ்.எம்.ஜி எனப்படும் கோபாலரத்தினம் அவர்கள் ஈழநாடு தினசரியாக நிலைபெறுவதற்கு காலாக அமைந்தவர். ஈழமுரசு, ஈழநாதம் என்பவற்றின் ஆசிரியராகவும் பணியாற்றிய இவர் ஒரு நல்ல மொழிபெயர்ப்பாளரும் கூட. ஐம்பது ஆண்டுகள் பத்திரிகை யாளனாக கடமையாற்றியஇவர் முன்மாதிரிப் பத்திரிகையாளனாக கொள்ளப்படக்கூடிய ஒருவர் ஆவார்.

கொழும்புக்கு வெளியே உருவாகிய பிராந்திய தமிழ்ப் பத்திரிகைகளின் உருவாக்கத்தில் இவருடைய பங்களிப்பு முக்கியமானதாக அமைகிறது.

---

### படித்ததில் பிடித்தது-02



# புதிய உயிர்

**இருள்** கெடுகிறது. காலை விரிகிறது. கீழ்த்திசையில் வர்ண பேதங்கள். ஒளிக்கற்றைகள் ஒளிச்சுடரில் பொய்யும் மெய்யும் கலந்த பிரபஞ்சத்தின் பிறப்பு. வஞ்சனையும் கயமையும் கலந்த கலப்பு. சிருஷ்டியின் பேதங்கள். புலனுக்குப் புலப்பட்டும் புலப்படாமலும் அறிவிற்கு எட்டியும் எட்டாமலும், இருதயத்தைத் தொட்டும் தொடாமலும் பிறக்கும் இசை ஒலிகள், அழுகுரல்கள், சின்னதுகள்,பெரிதுகள்.

காகம் கரைகிறது. சிருஷ்டியின் கீறலா? கறவை மாடு கத்துகிறது. சிருஷ்டியின் தாய்மையும் தியாகமுமா? மண்புழு நெளிகிறது. எது சேவை?

பிரபஞ்மே கலவைதானே? புதிய கலவை. மனிதன் கலந்தால் ஒரே மாதிரி இருக்கும். இது புதிய கலவை? நேற்றிருந்தாற் போன்று இல்லையே? நேற்றும் இன்றும்,நாளையும்,அதுமட்டும் என்ன? மனிதனின் காலக்கலவை? திங்கள், செவ்வாய்,புதன் – மாதம் – வருடம் – நிமிடம் மணி நாள். மனிதக் கலவை? கீறலாய்த் தெரிகிறதே?

புதிய கலவை விரிந்துகொண்டிருக்கிறதுமலரொன்று விரிகிறது.

பார்த்தபடியே நிற்கிறேன், மலர் மட்டும் கலவையில்லையா? புலனாகாத அணுக்களின் கலவை. பார்வை மட்டும் பிரபஞ்சமே அதுதானே?

முகை அவிழ்கிறது. இதமாய் மணம் மூக்கில் ஏறுகிறது. ஏறுகிறதா? ஏறுகிறதுபோல ஒரு தோற்றம். ஓர் எண்ணம். எண்ணம் மட்டும் என்ன? கலவைதானே?

நேற்றிருந்தவன், அதற்கு முந்தி, அதற்கு முந்திப் பேசியும் போசாமலும் காட்டிய, பேசிய,செய்தவைகளின் தொகுப்புத்தானே? அதுவும்கலவைதான். அவன் இல்லாவிட்டால் நானில்லை. என் எண்ணமில்லை.

ரசித்தபடியே நிற்கிறேன். எண்ணம் விரிகிறது. மகள் நட்டமரம். முந்தியநாள் அரும்பு சிறிதாய்க் கட்டியிருந்தது. உயிர்தோற்றம். பால்யம். பூ என்கிற பௌவனத்தின் பால்யம். சிறு குழந்தை. மெத்தக் கலவையின் ஆரம்ப கலவை. பருவம்.

அவ்வளவுதான்.

பார்த்துக் கொண்டிருக்கிற போதே பொல பொலவென்று இதழ்விரித்து மணம் பரப்பி... இப்போது பூ. பூ த்தாள். பூ வேதாள். என்ன அழகாய்ச் சிரிக்கிறது.

இது எங்கிருந்தது? எப்போது வந்தது? நெற்றாய் இருந்தது. – நெற்றுள் இருந்தது – வெளிக்கிளம்பத் துடித்து, அதன் ஓயாத பிரார்த்தனையில் மண்ணில் விழுந்து அமிழ்ந்து மாரி பெய்து முளையாச் செடியாய் மரமாய். அதுவும் பூ க்கிறதே?

பௌவனம் பௌவனம் பௌவனம்தானே . நடுப்பகல்தாண்டி மாலை வந்தது பூ . சோர்ந்து போய் நிக்கிறதே.

கலவை மங்கத் தொடங்கவிட்டதே? ஆங்கிலக் கவி ரெனிசன்இவற்றை வரையறுத்தானாமே! நிழல்கள் என்று? நிழல் மங்குகிறதா? உருவமில்லாமல் நிழலா? உருவமே நிழலே – கலவையே மங்குகிறதே?


முதுமை, முதுமை, தள்ளாத முதுமை தானே?

கீழ்த்திசையில் ஞாயிறு மறுநாள் சுடர் பரப்புகிறது.

புதிய கலவை புத்தம் புதிய கலவை? கலவையா? வேறு என்ன? அதே மரம்.

பூ காம்பு கழன்று சோர்ந்து போய் மண்ணில் கிடக்கிறது. அதேயளவு மரத்தில் நேற்றுப் பூ த்தாற் போல வேறு ஒரு பூ பளிச்சென்று சிரிக்கிறது. அதன் 'ஆத்மா' தான் இதில் சிரிக்கிறதோ?

# போராட்டத்துடன் இணைந்தே வளர்க்கப்பட்டுள்ள தமிழீழப் பெண்களின் ஆளுமை



பெண்கள் காலம்காலமாக அடக்குமுறைக்குள்ளாவது பற்றியும், உரிமைகள் மறுக்கப் படுவது பற்றியும் இன்று பல்வேறு தரப்பினரும் விழிப்படைந்து வருகின்றனர். இதனையொட்டிய பல திட்டங்களும், செயற் பாடுகளும் தனிநபர்களாலும், சிறு குழுக்களாலும், நிறுவனங்களாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஊடகங்களும் இவ் விடயத்தில் சற்று விழிப்படைந்துள்ளது.

பால்நிலைக்கல்வி வகுப்புக்கள், கருத்தரங்குகள் என்பனவும் நடந்தேறி வருகின்றன. இதனால் பெண்கள் வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டுள்ளதுடன், தமது உரிமைகளைப் பெறும் வகையில் தம்மை முன்னேற்றவும் துணிந்துள்ளனர். மாற்றங்கள் படிப்படியாக நிகழத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெருந்தொகையான பெண்கள் இணைந்து போர்க்களம் செல்கிறார்கள் என்ற விடயம் தமிழீழ எல்லைக்குள் வாழ்பவர்கள் மட்டுமல்லாது இலங்கை முழுவதும் ஏன் உலகநாடுகள் முழுவதும் அறிந்தவோர் விடயமாகும்.

ஆனால் இவர்களின் வளர்த்தெடுப்பு முறை பற்றியோ, பயிற்சி பற்றியோ, களத்தில் போரிடும் திறன் பற்றியோ இவர்களின் ஏனைய செயற்பாடுகள் பற்றிய ஆழ அகலங்கள், ஒட்டு மொத்த ஆளுமைவிருத்தி பற்றிய விடயங்கள் வெளித்தெரியாததொன்றாகவே இருந்து வந்துள்ளது.

ஆனால் தற்போதுள்ள அமைதியான சூழ்நிலையில் விடுதலைப்புலிகளின் மகளிர் அணியினர் வடக்கு, கிழக்கிலுள்ள சில இடங்களில் நடத்திய தமிழீழ பெண்கள் பேரெழுச்சி நிகழ்வில் முதன்முறையாக தம்மை மக்களுக்கு அறிமுகப்படுத்த விளைந்துள்ளனர்.

இந்நிகழ்வு விடுதலைப்புலி உறுப்பினராக இணைந்து பல சாதனைகள் செய்து முதல் வீரச்சாவடைந்த 2ம் லெப். மாலதியின் நினைவு நாளான ஒக்டோபர் பத்தாம்திகதி நடாத்தப்பட்டது. இந்நாளையே விடுதலைப் புலிகள் தமிழீழ பெண்கள் தினமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இத்தினம் பற்றிய செய்தியே இதுவரை காலமும் பலராலும் அறியப்படாதிருந்தது.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் நடந்த மகளிர் பேரெழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டதில் என்னால் அவதானிக்க முடிந்தவற்றையும், ஏற்பட்ட மனப்பதிவுகளையும் உங்களோடு பகிர்ந்துகொள்ளலாமென நினைக்கிறேன்.

தமிழீழ பெண்கள் பேரெழுச்சி நிகழ்வின் முதலாவது நிகழ்வான இராணுவ அணிவகுப்பே பார்ப் போரை திக்குமுக்காடச் செய்து விட்டது. ஏனெனில் அத்தனை நேர்த்தியும் வேகமும் கொண்டதாய் ஒவ்வொரு அணிகளும் சென்று மறைந்தன. புகைப்பிடிப்பாளர்களும், வீடியோ படப்பிடிப்பாளர்களும் இவற்றைத் துரத்திக்கொண்டு தமது கமறாத்திரைகளுக்குள் அடக்கப் படாதபாடு பட்டனர்.

மகளிரின் பதினொரு படையணிகள் இதில் பங்கேற்றன. இவையனைத்தும் ஓர் அடிப் படைத்தளத்துள் நின்றிருந்த போதும் ஒவ்வொன்றும் தமக்கான தனித்துவங்களை கொண்டிருந்தன. அணிந்திருந்த சீருடைகளிலும், பிடிக்கப்பட்ட கொடிகளிலும், சின்னங்களிலும் ஒவ்வொரு அணிகளும் தம்மை வேறுபடுத்திக் காட்டின.

ஓர் இராணுவ அணியின் வடிவமைப்பின் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையிலும், பயன்படுத்திய மேலைத்தேய பாண்ட் வாத்திய இசைக் கருவிகளுக் கேற்பவும்

''புலிகளின் தாகம் தமிழீழ
தாயகமென்றே நீ கூறு....'' என்ற

விடுதலைக் கானங்களிலொன்று அணியின் வேக நடையின்போது இசைக்கப்பட்டது. பின்னர் மைதானத்துள் நடந்த மெதுவான அசைவுகளுக்கு 'எங்கள் தோழர்களின் புதைகுழியில்' என்ற பாடல் பொருத்தமாக அமைந்திருந்தது.

சிறு சிறு இடைவெளிகளில் கரடிப்போக்கு சந்தியில் ஆரம்பமான இவ்வணிகள் கிளிநொச்சி மத்திய மைதானத்துள் ஒன்று சேர்ந்து அணிவகுத்து பெரும் பரப்பிலான இடத்தினைப் பிடித்து பெரும் இசைஎழுப்பி, பெரும் நகர்வினைப் புலப்படுத்தியது. இது சூழ நின்றிருந்தோரை பெரும் பரபரப்பிற்குள்ளாக்கியது.

இதனைத் தொடர்ந்து 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கையில் ஏ-9 பாதையூடான இராணுவ நகர்வினை எதிர்த்து மன்னகுளத்தில் பெண் போராளிகள் சமர் செய்ததன் 'மாதிரிச்சமர்' நிகழ்வொன்று நிகழ்த்திக்காட்டப்பட்டது.

பற்றைகளுக்குள்ளும், மரங்களுக்குள்ளும் நிகழ்த்திக் காட்டப்பட்ட இச்சமர் பெரும் வெடிச்சத்தங்களையும் துப்பாக்கிச் சூடுகளையும் கண்முன்னே காண்பித்தது.

மிகவும் தத்ரூபமான முறையில் நிகழ்த்தப்பட்ட இம்மாதிரிச்சமர், தமிழீழப் பெண்கள் படையணியின் இராணுவ வளர்ச்சியினையும் பலத்தினையும் காட்டி நின்றது. இது பெண்களின் உடல் உள ஆளுமை விருத்தியின் எல்லையினைக் கோடு காட்டியது.

பொதுவாக ஆசிய மரபில் வந்த பெண்கள் பயந்தவர்கள், மென்மையானவர்கள், நிதானமற்றுக் குழம்புபவர்கள், எதற்கும்தயங்கி நிற்பவர்கள், ஆண்களில் தங்கியிருப்பவர்கள், இலகுவில் அழும், சிரிக்கும் இயல்பு கொண்டவர்கள் என்ற கருத்துருவாக்கம், கணிப்பீடு அனைத்தையும் தகர்த்தெறியும் வகையில் தமிழீழப் பெண்கள் படையணி பெண்கள் உடல், உள ஆளுமை கொண்டுள்ளனர் என்பதனை இச்சமர் திட்டவட்ட வமாக காட்டி நின்றது.

இவர்கள் தமிழீழ எல்லைக்குள் வாழும் பெண்களுக்கு மாத்திர மல்ல, உலகிலுள்ள பெண்கள் அனைவருக்குமே தன்னம்பிக்கையினையும், உற்சாகத்தினையும் வழங்கக்கூடியவர்கள் என்றால் அதில் மிகைப்பாடு ஒன்று இல்லை என்றே கருதுகிறேன்.

மேலும் தொடர்ந்து நிகழ்ந்த கலைநிகழ்வுகள் மூலம் இவர்கள் பல்வேறு விடயங்களை மக்களிடம் முன்வைத்திருந்தனர். குறிப்பாக சாதாரணமாயிருந்த பெண்களாகிய தாம், காலத்தின் தேவையையும் கட்டாயத்தையும் அறிந்து போராட்டத்தில் இணைந்தது பற்றியும் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் தம் வளர்ச்சி நடந்தேறியது பற்றியும் குறிப்பிட்டனர்.

ஓர் இன ஒடுக்குமுறையில் ஆக்கிரமித்தல், ஆளுதலின் குறியீடாக சிங்கள பேரினவாதம் தமிழ்ப் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்தமை பற்றியும் இவ்விடத்தில் பெண்கள் போர்க்களம்செல்லும் அவசியம் பற்றியும் வலியுறுத்தினர்.

மேலும் தாம் சும்மாயிருந்து சூம்...சூம் காளியென்றுதாயத்துக் கட்டி அந்நியப் பேய்களை விரட்டவில்லை. நித்திரையற்ற இரவுகளை நிரந்தரமாக்கி உடலிலும், உள்ளத்திலும் பல வலிகளைத் தாங்கி, தியாகங்களை செய்து பெற்றதே இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை என்றனர்.

எனினும் நாம் மிகவும் சாதாரணமானவர்கள் எங்களைப் பற்றிய அதீத கற்பனைகளை வளர்த்துக்கொள்ளாதீர்கள் என்றனர்.

இக்கருத்தினை நிறுவுதாற்போல் கூடியிருந்த பெருந்திரளில் சில விடயங்களை அவதானிக்க முடிந்தது. சீருடையில் இருந்த பெண் போராளி ஒருவர் துவாயால் ஏந்திய ஒரு குழந்தையை மடியில் வைத்து பால் பருக்கிக் கொண்டிருந்தாள். பின்பு வாரியெடுத்து முத்தமிட்டு தோள்களில் போட்டுக்கொண்டாள்.

அது பெற்ற பிள்ளையா பிறர் பிள்ளையா என்ற ஆய்வுக்கு நான் போகவில்லை. அவளிடம் தாய்மை, அன்பு, பாசம் வெளிப்பட்டது. இதனை சீருடையில் கண்டபோதுதான் ஆச்சரியமாயிருந்தது. இருவேறு உன்னத நிலைகள் ஒருங்கே சங்கமித்தது. எனினும் அவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவை இல்லை என்பதை புரிய முடிந்தது.

இதனைவிட பெண் போராளிகள் சிலர் திருமணமாகி தம் கணவன் பிள்ளைகளுடன் வந்திருந்தனர்.

சீருடையில் நின்ற பெண் போராளிகள் பலர் எழுச்சி நிகழ்வுக்கு வந்திருந்த பலருடன் மகிழ்வாக உறவாடுவதைக் காண முடிந்தது. சிறு பிள்ளைகளுடன் விளையாடியதையும் காணமுடிந்தது.

கலை நிகழ்வுகளிலும் பெண் போராளிகள் தமது திறமைகளை நிலைநாட்டினர். மிக அழகாக ஆடவும் பாடவும் தெரிந்திருந்தனர்.

களத்தில் நிற்கும் போராளி பரதநாட்டியம் ஆடுவது என்பது போராளி பற்றிய பொதுவான நினைப்பிற்கு முரணானது. சீருடையற்று பாத்திரங்களுக் கேற்ப ஆடையணிந்து ஆடிய போது இவர்கள் போர்வீரர்கள் என்ற எண்ணமே தோன்றவில்லை. சீருடையுடன் வரும்பாத்திரங்கள் பல பாவதங்களை... அபிநயித்து நடனமாடிய போதுதான் போர்வீரர்கள் பற்றிய புதிய பரிமாணம் பெறப்பட்டது.

மற்றும் இப்பேரெழுச்சி நிகழ்விற்கான ஒழுங்குபடுத்தல்கள் சிறப்பான முறையில் அமைந்திருந்தது. இந் நிகழ்வுக்காக ஏலவே கொடுக்கப்பட்ட விளம்பரங்கள், கிளிநொச்சி மத்திய மைதானத்தில் கூடும் ஒன்றரை இலட்சம் மக்களினதும் வீதிக் கட்டுப்பாடுகள், வாகனப் போக்குவரத்து ஒழுங்குகள், இரவு நிகழ்வு சூழலில் மின்விளக்கு வசதிகள், மைதான அலங் காரங்கள், மைதானத்தில் இடப்பட்ட பெரிய மேடையும் இடமும், மேடை வடிவமைப்பு, இசைக்குழுவினருக்கான தனிமேடை, முழுப்பார்வையாளருக்கும் நிகழ்வுகள் தெரியும் வகையில் வைக்கப்பட்ட பெரும் திரைகள், (PROJOCTOR) மேடையின் இரு மருங்கிலும் நிகழ்ச்சி செய்வோர் கூடும்தனியான தகரக்கொட்டகைகள்,

மைதானத்தில் மக்கள் ஒழுங்காக நிகழ்வுகளுக்கேற்ப வகையில் அசையும் முறைக்கான கட்டுப் படுத்தல்கோடுகள், குடிநீர் தாங்கிகள், மலசலகூட வசதிகள், ஒலி ஒளி ஏற்பாடுகள்,நிகழ்ச்சி அறிவிப்புக்கள், ஊடகவியலாளர் ஆசன ஒதுக்கீடுகள், சிற்றுண்டி, குடிபான பரிமாற்ற ஒழுங்குகள் என்பன மிக நேர்த்தியாக மிக வசதியாக காலக்கிரமத்துக்கேற்ப ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. இந்நிலை யுத்தத்தினால் முற்றாக அழிக்கப்பட்ட பிரதேசத்தில், வளங்களற்ற பிரதேசத்தில் ஒழுங்குபடுத்தல் என்பது பெரும் சவாலான விடயமே. இது மகளிர் படையணியின் மற்றுமொரு பக்கத்தினை, பொதுவிடயங்களை செயற்படுத்தும் திறனை, முகாமைத்துவ திறனைக் காட்டியது.

இப்பேரெழுச்சி நிகழ்வினை பெண்போராளிகளே பெரும்பாலும் நின்று நடத்திய போதும், விடுதலைப் புலிகளின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த ஆண்போராளிகளும் இணைந்தே இந்நிகழ்வினை ஒழுங்கு செய்திருந்தனர்.

இவர்களிடையே ஆண், பெண் படையணி என்ற பிரிக்கப்பட்ட மனப்பாங்கு கிடையாது. இரு படையணிகளும் இணைந்தே பல காரியங்களை சாதித்து வருகின்றனர்.

ஆரம்ப மகளிர் படையணி க்கான பயிற்சிகளை ஆண் போராளிகளே வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக ஆரம்ப கடற்புலி பெண் உறுப்பினர் கருத்துத் தெரிவிக்கையில் ''ஆரம்பத்தில் கடற்படைத்தாக்குதல் தொடர்பான பயிற்சிகளை ஆண்போராளிகளே வழங்கினர். பின்னர் அவர்களிடம் பயிற்சி பெற்றுசிறப்புத் தளபதியாயிருந்த லெப்.கேணல் நளாயினி அக்கா என்பவரே எமக்கான பயிற்சிகளை வழங்கினார். அதன் வழியே பயிற்சிகள் தொடரப்படுகின்றன'' என்றார்.

பெண்கள் இயல்பாகவே தொழில்நுட்ப அறிவும் நாட்டமும் குறைந்து காணப்படுகின்றனர். ஆண்களே இவ்விடயங்களில் ஆர்வமாக விளங்குகின்றனர். காரணம் காலம் காலமாக ஆண்கள் வெளியில் சென்று பல்வேறு தொழில்முறைமைகளை பயின்றுவர பெண்கள் வீட்டிலிருந்து பிள்ளைகளையும் வீட்டையும், சுற்றுப்புறச் சூழலையும் பராமரித்துக்கொண்டு ஓர்மாறுபாடற்ற வாழ்வு வாழ்ந்து வந்தமையாகும். ஆனால் கடற்புலி பெண் உறுப்பினர்கள் சிலர் இவ்வெழுச்சி நிகழ்வில் தாக்குதல் படகொன்றினை மக்கள் பார்வைக்கு வைத்திருந்து அதன் இயக்கம் பற்றிய விளங்கங்களை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலி பெண் உறுப்பினர்கள் தாக்குதல் படகு தயாரிப்பது பற்றியும், அவற்றை இயக்குவது பற்றியும் தொலைநோக்கு தொடர்பு அறிதல் பற்றியும் , விமான எதிர்ப்புப் பீரங்கி, கடற்தாக்குதலுக்குரிய 50 கலிபர்கள் என்பவற்றின் இயக்கு முறைகள் பற்றியும், ஆங்காங்கே கொண்டுள்ள தகவல்மையங்கள் பற்றியும், இலக்குகளை இனம்காணல், கணித்தல், குறிவைத்தல் என்பவை பற்றியும், கட்டளை அதிகாரியின் செயற்பாடு பற்றியெல்லாம் பேசிய போதும் படகில்நிற்கும் தாம் ஒவ்வொரு வரும் படகின் ஒவ்வொரு விடயம் பற்றியும் கூறிய போது காலம் காலமாக பெண்கள் வளர்க் கப்பட்ட மரபில் வளர்ந்தவர்கள் தானே இவர்கள். இவர்களிடம் இத்தனை திறன் எப்படி வந்தது என்றே எண்ணத்தோன்றியது.

இவர்களிடம் ''தற்போது நீங்கள் தாக்குதல்படகு, ஆயுதங் களைப் பற்றிய தொடர்பான விடயங்களை வெளியிடுகிறீர்கள். எதிரி இதற்கேற்ப வகையில் தன்னைத்தயார்படுத்தக் கூடும் என்ற அச்சம் இல்லையா?'' எனக் கேட்டபோது.

கடற்புலி ஆரம்ப உறுப்பினரும்,தொலைநோக்கு தகவல் அறிபவருமான் பெண் ஒருவர் மிக நிதானமாகவும் சிறு அலட்சியமாகவும் சிரித்துவிட்டு'' ''எமது படகுகளையும்,ஆயுதம் பற்றியும் அறியலாமே தவிர எமது போர் முறைகளையோ, உத்திகளையோ, அறியமுடியாது. அவற்றையும்சரியான மனவலிமையையும் தலைவர் எமக்குத் தந்துள்ளார். அவை இருக்குமளவும் எமது வெற்றி நிச்சயமானது'' என்றாள்.

தமிழீழ பெண்கள் படையணியினது மிகுந்த கருத்தியல் தெளிவினையும், நிதானமான போக்கினையும் கொண்டு விளங்குகிறது என்பதனை இவர்களின் உரையாடல்கள் மூலமும் மகளிரணி அரசியல் பொறுப்பாளரான தமிழினி அவர்களின் உரை, பேட்டி என்பவற்றிலிருந்து புரியமுடிகிறது.

இவர்கள் தம்மைத்தாமே நிர்வகிக்கின்ற திறமையினையும், தமது செயற்பாடுகளைத்தாமே முன்னெடுக்கும் நிலையிலும் கட்டமைக்கப்படுவதனை ஒரு சில விடயங்கள் சுட்டிக்காட்டுகிறது.


இதில் மகளிர்படையணி உறுப்பினர்கள் ஒரு தீர்மானிக்கும் சக்திகளாக அரசியல் கட்டமைப்புக்குள் இருக்கின்றனர் என்பதே ஒரு முக்கிய விடயமாகும். மற்றும் பெண் போராளிகள் நடத்தும் பத்திரிகை-சுதந்திரப் பறவை சஞ்சிகைகள் இங்கு வெளிவருவதும் பெண்களே தீர்மானிக்கும் முடிவெடுக்கும் நிலையில் இருப்பதனையும் தம்மை சுதந்திரமாக வெளிப்படுத்தவும் தமது கொள்கைகளை பிரகடனப்படுத்தவும், வளர்க்கவும் உதவியாக அமையும்.

இன்று இலங்கையில் பன்னாட்டு நிறுவனங்களது செறிந்த வியாபாரமோ-அதோனோடொட்டிய காலாச்சாரமோ, பல்வேறு ஊடக கலாச்சாரமோ,மலிகைப்படங்களின் பாதிப்போ இடம்பெறாத ஒரு தேசம் என்றால் அது வன்னிப்பெருநிலப் பரப்பாகவே இருக்கிறது.

இதனால் இங்கு இருக்கும் ஒவ்வொரு விடயங்களும் தனித்துவமானதாகவும், சூழல்சார்ந்ததாகவும், நிலைத்து நிற்பதாகவும் வலுவுடன் விளங்குகிறது. இவ்வகையில் தமிழீழப் பெண்களும் அவர்கள் வளர்த்தெடுப்பும் ஆரோக்கியமானதாக அமைந்துள்ளது.

-சுதாஜினி-







விரைவில் தவறுபவன், விரைவிலே தவறைத் திருத்தியும் கொள்வான். - ∴பிரான்ஸிஸ் பேக்கன்

## மக்கள் கருத்து

# நாடகப் போட்டிகளின் தீர்ப்புகளும், மாணவர்களின் ஏமாற்றங்களும், பெற்றோரின் அங்கலாய்ப்பும்

அண்மையில் யாழ் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே கனிஷ்ட மாணவர்களுக்கான ஆங்கில நாடகப் போட்டி யா/பரியோவான் கல்லூரியில் நடைபெற்றது. அதில் இரண்டு பாடசாலைகள் நேரக் கணிப்பில் கூடிக்குறைந்ததால் ரத்துச் செய்யப்பட்டு மற்றைய இரு பாடசாலைகளுக்கும் முதலாம் இரண்டாம் இடங்கள் வழங்கப்பட்டன. இப்போட்டிகளுக்கான கோட்டமட்டப் போட்டிகள் நடத்தப்படாத காரணத்தினால் எமது பாடசாலை கேட்டுக் கொண்டதிற்கிணங்க ஆங்கில பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுதியுடன் ரத்துச் செய்யப்பட்ட இரு பாடசாலைகளுக்கும் மூன்றாம் இடம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. பின்பு 30-08 2002இல் தினக்குரலில் வெளியான அறிவித்தின்படி ஒரு பாடசாலைக்கு மட்டும் மூன்றாம் இடம் கொடுக்கப்பட்டு எமது பாடசாலைக்குத் தரப்படவில்லை. காரணம் கேட்டு கோப்பாய் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் தொடக்கம் வலயக் கல்விப்பணிப்பாளர் வரை மனு செய்யப்பட்டது. கிடைத்த பதில் மூன்றாவது இடம்கொடுக்கக் கூடிய அளவு புள்ளிகளை நாவலர் வித்தியாலயம் பெறவில்லை என்பதாகும்.

பாடசாலைகள் மூன்றாம் தவணைக்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதே மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் வலய மட்டத்தில் மூன்றாம் இடமும் கோட்ட மட்டத்தில் முதலாம் இடமும் அறிவிக்கப்பட்டுவிட்டது. பின்பு இடமில்லை என்பது ஜீரணிப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. ஆகவே 01-09-2002இல் பெற்றோர் ஒருவர் எமது பகுதி ஆங்கில ஆசிரிய ஆலோசகரிடம் இதுபற்றிக் கேட்டபோது, அவர் தனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லிவிட்டார். இந்நாடக நடுவராகக் கடமையாற்றிய ஐந்துபேரில் ஒருவரான ஆங்கில ஆசிரிய ஆலோசகரின் மனைவி இது பற்றிக் கருத்துக் கூறிய போது ஊர்ப்பிள்ளைகள் நகர்ப் பிள்ளைகள் போல் ஆங்கிலத்தைப் பேசவில்லை. ஆகவே இரண்டு பாடசாலைக்கும் மூன்றாம் இடம் கொடுக்க முடியாது என்றார்.

நாங்கள் என்ன சொல்ல வருகிறோம் என்றால் ஆங்கில தினப்போட்டிகள் என்றாலும் தமிழ்த்தின போட்டிகள் என்றாலும் மாணவரின் திறனை அதிகரிப்பதற்காக நடத்தப்படுகின்றதே தவிர வேறு எதற்குமில்லை. இங்கு மூன்றாம் இடம் கொடுக்கப்பட்ட பாடசாலை25-30 நிமிடம்வரை வரையறுக்கப்பட்ட நாடகத்தை 20 நிமிடங்களில் நடித்தி முடித்தனர். வேறு ஒரு பிரிவில் 40-45 நிமிடம்வரை வரையறுக்கப்பட்ட நாடகத்தை 24 நிமிடங்களில் நடித்து முடித்தனர். அதற்கு 3ம் இடம் கொடுக்கப்பட்டது. இதுவும் ஒரு நகர்ப்புற பாடசாலை. நகர்ப்புற பாடசாலைகளிலும் கணிசமான அளவு கிராமப்புற மக்கள் கற்கிறார்கள். கிராமப்புற பிள்ளைகள் கிராமப்புற பாடசாலைகளில் ஆங்கிலம் பேசமாட்டார்கள், நகரத்தில்தான் பேசுவார்கள் என்றால் எவ்வாறு உடுவில் மகளிர்கல்லூரி எல்லாப் பிரிவு நாடகங்களையும் வென்றது. உடுவில் எந்த நகர்ப்புறத்தில் அமைந்துள்ளது? இங்கும் ஊர்ப்பிள்ளைகள்தான் கற்கிறார்கள்.



கோப்பாய் நாவலர் வித்தியாலயம் கடந்த பத்து வருடங்களாக தமிழ் ஆங்கில நாடகங்களை மேடையேற்றி பரிசுகளைப் பெற்றிருக்கிறது. தனிப்பரிசுகள் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் வருடாவருடம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனால் பாடசாலையில் உள்ள சம்பந்தப்பட்டவர்களுக்கு சகல மட்டத்திலான விதிமுறைகளும் நன்கு தெரியும். போட்டிக்கு நடுவர்களை நியமிக்கும்போது அவ்வவ் வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை நியமித்தல் கூடாது. சென்ற வருடம் ஆங்கில நாடகத்திற்கு நடுவர்களாக இருந்தோர் வலிகாமத்தைச் சேர்ந்தவர்கள். இதனால் எமக்கு 2ம் இடம் கிடைத்தது. இம்முறை வலயத்திற்குட்பட்டவர்கள் நடுவர்களாக நியமிக்கப்பட்டனர். நடுவர்களுக்கு பாடசாலைகளைப் பற்றியும் பிள்ளைகளைப் பற்றியும் தெரியவாய்ப்பு ஏற்பட்டது. இதனால்தான் போட்டியில் பல்வேறு விதமான குழறுபடிகள் ஏற்பட்டது. கிராமப்புற ஆங்கில ஆசிரியரின் தரத்தை எட்டமுடியாது என்ற மனப்பாங்கு அதிகாரிகளுக்கு உள்ளது. கிராமப்புற பிள்ளைகளுக்குத்தான் ஆங்கிலம் கற்பிப்பதில் ஆர்வம் கொடுக்கப்பட வேண்டும்.

புள்ளி அடிப்படையில் முடிவு தெரிவிப்பதாயின் போட்டி நடந்த அன்றே முடிவு சொல்லியிருக்க வேண்டும். நடுவராக இருந்த ஓர் ஆசிரியர் கூட இது கோட்டமட்டத்தில் நடைபெறாத போட்டி ஆகவே ரத்துச் செய்யாமல் முடிவு சொல்ல வேண்டும் என்று தெரிவிக்கவில்லை. மாணவர்களின் மனநிலையைக் கருத்திற் கொண்டே இரு பாடசாலைகளுக்கும் மூன்றாம் இடம் கொடுக்கும்படி கேட்கப்பட்டது. நகர்ப்புற பாடசாலை மாணவருக்கு ஒரு மனநிலை, கிராமப்புற மாணவர்களுக்கு ஒரு மன நிலையா இருக்கும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மற்றப் பாடசாலைகளுக்கு கொடுக்கப்பட்ட மூன்றாம் இடம் ரத்துச்செய்யப்பட வேண்டும் என நாம் கேட்கவில்லை. இவ்வாறான பாகுபாடுகள் தமிழ்த்தின போட்டிகளிலும் நடைபெற்றுள்ளதை நாம் அறிவோம். இவை தொடர்ந்தால் மாணவர்களின் மனநிலை பாதிக்கப்படுவது மல்லாமல் போட்டிகளில் பங்கு பற்ற முடியாமலும் போகலாம் என்பதை பெற்றோராகிய நாம் மிகவும் மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள். ☆

---

# பிரபஞ்சத்தின் பிரமிப்பு

ஒரு மைதானத்துக்குச் செல்கிறீர்கள். காலி மைதானம். ஆனால் புகை பரவியிருக்கிறது மைதானம் முழுவதும் புகை பரவியிருக்கிறது. வெடிமருந்து வாசனை வீசுகிறது. இதிலிருந்து மைதானத்தில் கொஞ்ச நேரம் முன்பு ஏதோ வெடித்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு நீங்கள் வரலாம் அல்லவா?

பிரபஞ்சத்தில் நாம் இப்போது அந்த நிலையில்தான் இருக்கிறோம். பெரிய வெடி வெடித்து முழுதும் பரவிய நிலையில், ஒரேயொரு வித்தியாசம், வெடி 'சற்றுமுன்' வெடித்ததல்ல: 1500 கோடி வருடங்களுக்குமுன்.

பிரபஞ்சம் எப்படித் தோன்றியது என்கின்ற கேள்வி ஆதிகாலத்திலிருந்து மனித சிந்தனையை ஆக்கிரமித்து வந்திருக்கிறது. நம் புராணங்கள் பிரளயம் என்கின்றன. பைபிள் ஏதோ ஒரு திங்கட்கிழமை தொடங்கி கடவுள் படிப்படியாக சிருஷ்டித்து வார இறுதியில் ஓய்வு எடுத்துக்கொண்டார் என்கின்றது. அதே போல் திருக்குர் ஆன்.....

எல்லா மதங்களிலும் எல்லா சிந்தனைகளிலும் பிரபஞ்சத்தின் ஆரம்பத்தைப்பற்றிய செய்திகள் உத்தரவாதமாக உள்ளன. இவற்றில் பல வேறுபட்டிருந்தாலும் ஆதாரமாக இந்த சிருஷ்டித் தத்துவங்களுக்கு எல்லாம் பொது அம்சம் சாட்சியங்கள் இல்லாதது. விஞ்ஞான முறைப்படி அடிப்படையில்லாதது.

அறிவியல் சிந்தனை அப்படியில்லை. ஒரு துப்பறியும் கதையைப் போல. இன்று நமக்குக் கண்கூடாகக் கிடைக்கும் தடையங்களைக் கொண்டு பிரபஞ்சம் எப்படி ஆரம்பித்திருக்கக் கூடும் என்று ஊகித்து சொல்வது அறிவியல்முறை. இந்தயூகங்கள் பலிப்பதற்கு நிரூபணங்களாக பௌதீக இயற்பியலின் விதிகள் பயன்படுகின்றன. பிரபஞ்சத்தின் மிக மிக ஆரம்பக் கணத்திலிருந்து இன்றுவரை நடந்தது அனைத்தையும் ஊகிக்க முடிந்திருக்கிறது. முதல் செக்கண்டின் முதற் பிரிவைத்தவிர மற்றவை அனைத்துக்கும் விஞ்ஞானம் விளக்கம் தருகிறது.

நோபல் பரிசுபெற்ற 'ஸ்டீவன் வைன்பர்க்'(Steven Wineberg) 'முதல் மூன்று நிமிஷங்கள்' என்றொரு புத்தகம் எழுதியிருக்கிறார். ஏதோ பக்கத்தில் இருந்து பார்த்தவர் போல பிரபஞ்சத்தின் ஆரம்ப நிமிஷங்களை விவரித்திருக்கிறார்.

ஆரம்பத்தில் பிரபஞ்சம் அளவில் சூன்யமாகவும் சக்தியில் அனந்த மாகவும் இருந்தது. அதாவது ஒன்றுமில்லாத ஒரு வஸ்துவுக்கு அளவில்லாத சக்தி இருந்தது. அப்போது அது வெடித்தது. வெடித்தவுடன் உஷ்ணம் மிக மிக அதிகமாகி அளவில் விரியத் தொடங்கியது. அப்போது உஷ்ணம் பத்தாயிரம்கோடி டிகிரி சென்டி கிரேட்! இந்த உஷ்ணத்தில் எலக்ட்ரான்,ப்ரோட்டான் போன்ற சிறு துகள்கள் கூட நிலைத்திருக்க முடியாது. இந்தக் குழம்பத்தில்,அதீத உஷ்ணத்தில் துகள்கள் பிளந்து பிளந்து அழிந்தன.

முதல் செக்கண்டில் கொஞ்சம் உஷ்ணம் குறைந்து ஆயிரம் லட்சம் டிகிரிக்கு வந்தது. இதுவே சூரியனின் மையத்தில் இருக்கும் உஷ்ணத்தைப்போல ஆயிரம் மடங்கு! (ஆனால் ஹைட்ரஜன் குண்டு வெடிக்கும் போது இவ்வகை உஷ்ணம் ஏற்படுகிறது!) இந்த உஷ்ணத்தில் பிரபஞ்சத்தில் /போட்டான் , எலக்ரான்,நியூட்ரினோ என்ற துகள்கள் மட்டும் இருந்தன. பிரபஞ்சம் விரிவடைந்து உஷ்ணம் குறைந்து கொண்டே வந்தது.

வெடித்து சுமார் நூறு செக்கண்டில் உஷ்ணம்



நூறுலட்சம் டிகிரி ஆயிற்று. (இன்றைய நட்சத்திரங்களின் உஷ்ண அளவு இது) எலக்ட்ரான்,ப்ரோட்டான்கள் இப்போது தத்தமது கவர்ச்சியைத்தவிர்க்க இயலாமல் ஒன்று சேர்ந்துகொண்டு ஹைட்ரஜன்,ஹல வாயு, ஹீலியம் இவை பிறந்தன. திடப் பொருட்களின் ஆரம்பங்கள் இவைதான். இந்த சமாசாரம் முழுவதுமே மூன்று நிமிடங்களில் நிகழ்ந்துவிட்டது. அப் போதிலிருந்து ஏழு லட்சம் வருசம்கழிந்த பின்தான் கொஞ்சம்கனமான மற்ற அணுக்கள் உண்டாயின. அங்கிருந்தும் இன்னும் பல தசலட்சம்வருசங்கள் கழிந்த பின் தான் அடர்த்தியான மற்றத் திடப் பொருள்கள் ஏற்பட்டு நட்சத்திரங்கள், கலாக்ஸிகள் என்று உண்டாயின.

வைன்பர்க்கின் புத்தகம் முதல் மூன்று நிமிசங்களை உன்னதமாக நுட்பமாக விவரித்தாலும், ஆரம்பத்திலும் ஆரம்பமான முதல் செக்கண்டின் நூற்றில் ஒரு பாகத்தை -சிருஷ்டி என்பதை விவரிக்க பௌதீக விதிகள் இல்லை. அதை மட்டும் விபரிக்க பௌதீக விதிகள் இல்லை. ஐன்ஸ்டீனின் ரிலேட்டிவிட்டி விதிகள் செல்லும்படி யில்லை.... வைன்பர்க்கின் விவரணை தொடங்கும்பொது பிரபஞ்சம் வெடித்து சுமார் ஒரு புட்பால் அளவுக்கு வந்துவிட்டது.

அங்கிருந்துதான் இன்றுவரை விவரித்திருக்கிறார். இந்த ஆரம்ப மில்லி செக்கண்டில்தான் கடவுள் தேவைப்படுகிறார். இந்த ஆரம்பக் கணத்தில் எந்த தத்துவமும் எந்த மதமும் இடம்பெறும். சிருஷ்டிகர்த்தா என்று ஒருவர், பிரளயகாலமோ அல்லது பைபிளின் ஆறுநாள் 'கனோ அல்ல. ஒரு மில்லி வெண்டில் கடவுள் பிரபஞ்சத்தை சிருஷ்டித்தார் என்றால் இன்று அதை மறுக்க இயலாது.

அந்த அற்புதக் கணத்தை சிங்குலாரிட்டி (Singularity) என்கிறார்கள். இங்கேதான் காலம்ஆரம்பித்தது. பிரபஞ்சம் ஒரு கணிதப்புள்ளியாக, அளவிலா அடர்த்தியுள்ள சக்தியாகத் தொடங்கி 'டமால்' என்று வெடித்தது.

ஸ்டீபன் ஹாக்கிங் (Stephen Hawking) போன்ற அபார மனிதர்கள் இந்த ஒருமித்த கணத்தையும் வசீகரமாக விவரிக்கிறார்கள். (A Brief History of time) என்கிற புத்தகத்தில் படித்துப்பாருங்கள். ஹாக்கிங்கின் சிந்தனைகளைப் பற்றி மற்றொரு தனிப்பட்ட கட்டுரையே எழுத வேண்டும்.

பிரபஞ்சத்தின் ஆரம்ப உஷ்ண காலங்களை முதலில் விவரித்தவர் ஜார்ஜ் காமோ (George Gomow) என்பவர், இவர் 1948இல் எழுதிய ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையில் பிரபஞ்சம் முழுவதும் உஷ்ணம் விரவியிருக்க வேண்டும். என்கிற ஆச்சரியமான முடிவுக்கு வந்திருந்தார். அந்த மிச்ச உஷ்ணத்தின் டிகிரி அளவைக் கூடக் கணித்திருந்தார்.

1965இல் பென்ஸியாஸ் (PEnzias) வில்சன் (Wilson) என்னும் இருவர் இந்த மிச்ச உஷ்ணம் நிசமாகவே பிரபஞ்சத்தில் விரவியிருப்பதை ஒரு பரிசோதனை மூலம் நிரூபித்துக் காட்டினார்கள்.

பிரபஞ்சத்தின் அத்தனை துகள்களும் அந்த ஆரம்ப நிமிஷங்களில் பிறந்துவிட்டன.

இன்றைய தினமும் புள்ளியிலிருந்து ஆரம்பித்த பிரபஞ்சம் பிரமாண்டமாக விரிவடைந்து கொண்டிருக்கிறது. யாரோபெருமூச்சு விடுவதுபோல யாரென்றுதான் தெரியவில்லை.

ஹாக்கிங்,கடவுள் என்னும் தத்துவத்துக்குத் தேவை இல்லாமல் எல்லாவற்றையும் பௌதீக விதிகளைக் கொண்டே விளக்க முடியுமா என்று முயற்சிசெய்கிறார் அந்த ஆரம்ப ஒருமித்த மகா கணத்தின் கணக்கு மட்டும் உதைக்கிறது.'.

அதற்கு ஒரு சிருஷ்டி கர்த்தா தேவையாக இருக்கிறார்.

கொஞ்ச நாளைக்கு!அதுவரை இந்தப் பெருமூச்சு விரிந்து கொண்டிருக்கிறது.....

பெருமூச்சு என்பது இதயத்தின் தாய்மொழி என்றார் ஓர் ஆங்கிலக் கவிஞர்.

யாருடைய பெருமூச்சு இது!

# ஊர்கோலம்

## ஒரு சைக்கிளின் கதை

இனி இயங்காது என்று கைவிட நினைத்தபோதெல்லாம்இழுத்து இழுத்து... இதுநாள்வரை இயங்கி கனகசபையரையும் இயங்கவைத்த அவரது ஐம்பது வயது 'றலே' சைக்கிள் 'மாப்பிள்ளைக் கோலத்திலை'கம்'மென்று நின்றது.....

கனகசபையருக்கு வாயெல்லாம்பல். எந்தப் பிரதான பகுதியையும் மாற்றக் கூடாது என்று கடுமையான 'கண்டிசன்' போட்டே ஐயன்கோயிலடி சண்முகத்திடம் திருத்தி 'பெயின்ற்' அடிக்கக் கொடுக்கும் போது சண்முகம் கேட்டான்.

'அண்ணே.... உதுக்கு செலவழிக்கிற காசுக்கு புது லுமாலா ஒண்டு வாங்கலாம்.... உதை உப்பிடியே கைவிடுறது நல்லது.....'

-அவனுக்கும் இந்தச் சைக்கிள் நிறையவே உழைப்பைத் தந்துதான் இருக்கிறது..... அவனும் இதனை ஒட்டியும் திருத்தியும் களைத்துப் போனான். கனகசபையரும் இந்த சைக்கிளும் பட்டபாட்டை அவன் நன்கு அறிவான்.அதனாலதான் இப்படிச் சொன்னான்.

கனகசபையருக்கு வந்ததே கோபம்....... உன்னாலை திருத்த முடியாட்டி விடு நான் யாழ்ப்பாணம் கொண்டு போயாவது திருத்துவன். ஆனால் உந்தப் பேய்க்கதை மட்டும் கதைக்காதை என்று கத்தினார்.

வேறு கதையின்றி சண்முகம் திருத்திபெயின்ற் அடித்துக் கொடுத்துவிட்டான்.

சைக்கிளை கனகசபையர் கையேற்கும்போது சண்முகத்திடம் இப்படிக் கூறினார்.-

"இடம் பெயர்ந்து வந்தது முதல் நான் பட்ட கஸ்ரம் அலைச்சல் எல்லாத்திலையும் என்னோடு சேர்ந்து இந்தச்சைக்கிளும் கஸ்ரப்பட்டிருக்கு... அலைஞ்சிருக்கு என்ரை பிள்ளையள் கூட இதைப்போல எனக்கு உதவேல்லை.... உதவவும் போறதில்லை...."

❂❂❂❂❂

## அதிரடிப் படை குறித்து...

'தமிழர்களை அழித்தொழிப்பதற் கென்றே மிகவும் தொலைநோக்குத் திட்டங்களுடன் முன்னாள் சனாதிபதியும் முன்னாள் பிரதமர் ஒருவரால் 'நச்சுப்பாம்பு' என வர்ணிக்கப்பட்டவருமான ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் மகனான ரவி ஜெயவர்த் தனாவினால் உருவாக்கப்பட்டதுதான் இந்த விசேட அதிரடிப்படை.

தமிழின அழிப்பிற்கென்றே விசேட பயிற்சி அழிக்கப்பட்ட படைதான் இது. மிகவும் குரூரமான நடவடிக்கைகளை சுயசிந்தனையற்று செய்வதற்கு இவர்கள் பழக்கப்பட்டவர்கள். மனிதநேயம்- மனித உரிமைபற்றி எந்தவித எண்ணமும் இல்லாதவர்கள்.

இவர்களின் கடந்தகால நடவடிக்கைகள் இரத்த வாடைவீசும் இவர்களின் வரலாற்றைக் கூறும்

கிழக்கில் அம்பாறையிலும், திருகோணமலையில் கடந்தவாரம் நடந்த காட்டுமிராண்டித்தனமான தமிழர் மீதான தாக்குதல்கள் குறித்து ஒஸ்ரின் பெர்ணாண்டோ அவர்தான் சிறிலங்காவின் பாதுகாப்பு செயலர் சமாதானத்தைக் குழப்ப முயலும் தீயசக்திகளின் செயல் எனக்கூறியுள்ளார்.

அவர் பாதுகாப்பு செயலர் என்பதால் அவருக்குத்தங்களின் ஆட்களைப் பற்றி சரியான அபிப்பிராயம் இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

'தீயசக்திகள்' சரியான மதிப்பீடுதான்.

தீயநினைவோடும் தீய நோக்கோடும், உருவாக்கப்பட்ட படைவேறு எப்படி இருக்கும்? தீய சக்தியாய் மட்டும் தான்இருக்கும்.

இந்த சக்தி அதைஉருவாக்கியவர்களுக்கு எதிராகத் திரும்பும் நாள் வெகுதூரத்திலில்லை....

அடுத்தவனைக் கடிக்க வேண்டும் என்பதற்காக பாம்புக்கு பாலூட்டி வளர்ப்பவனைப் போல அறிவற்றவன் வேறுயாரும் இருக்க முடியாது. இன்று சிறிலங்காவில் அதிகளவிலான குற்றச் செயல்களை மேற்கொள்பவர்கள் - சிறிலங்காவின் பாதுகாப்புப்படையினரைச் சேர்ந்தவர்கள்தான். அவர்கள் இராணுவத்தை விட்டோடியவர்களாக இருந்தாலும் கூட அவர்களுக்கு வழங்கப்பட்ட இராணுவப்பயிற்சிதான். அவர்களை இந்த குற்றச் செயல்களுக்கு தூண்டிவருகிறது என்பதில் ஐயமில்லை.

இவையாவும் தென்னிலங்கையில் இருந்து வன்னிக்கு வந்துசென்ற ஒரு கல்வியாளரும் - ஊடகவியலாளருமான ஒருவர் சொன்னது.....

அவர் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் தான் இங்கு முக்கியமானது.

'வடக்கு கிழக்கில் இராணுவமும் அதிரடிப்படையும் நிலைகொண்டிருப்பதைவிடவும் அமைதிக்கும் சமாதானத்திற்கும் அச்சுறுத்தலான விடயம் வேறெதுவுமில்லை.இதுபற்றி சிறிலங்கா அரசு அக்கறை கொள்ளாமல் இருப்பது சமாதானம் மற்றும் நியாயபூர்வமான அரசியல் தீர்வுபற்றி இன்னமும் ஒரு உறுதியான முடிவுக்கு வரவில்லை என்பதையே காட்டுகிறது....!

-அவர் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்.

❂❂❂❂❂

## இரு பாடல்கள்

யாழ்ப்பாணம் பஸ்நிலையம் முன்பாக இருந்த ஒரு வர்த்தக நிலையத்தில் மனதை ஈர்க்கும் வண்ணம் எழுதி வைக்கப்பட்டிருந்த இருபாடல்கள்....இதோ உங்களுக்காக

(01)

ஆபத்துக்குதவாப் பிள்ளை
அரும்பசிக் குதவா அன்னம்
தாகத்தைத் தீராத் தண்ணீர்
தரித்திரமறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கேளாச் சீடன்
பாவத்தைத் தீராத் தீர்த்தம்
பயனிலை ஏழும்தானே....

(02)

தன்பங்கு தாரவன்ர தம்பியும்
தப்பியோடின் புற்றுவாழாத் தமையனும்
வல்லாண்மை பேசும் மனையாளும்-
இம்மூன்றும்
கொல்லாமல் வந்த கூற்றுவன்.
எப்படி இருக்கிறது?

பாதசாரி




## கையாலாகாதவர்களின் ......

எதியோப்பியாவும் எரித்திரியாவும் பிரிந்தன. ஐ.நா உதவியுடன் நல்லுறவுகளை வளர்க்கின்றன. இந்தோனேசியாவுக்கும் கிழக்குத்தீமோருக்குமிடையே இனி இத்தகைய நல்லுறவுகளை எதிர்பார்க்கலாம். துருக்கிய சைப்பிரசுக்கும் சைப்பிரசுக்குடியரசுக்கும் இடையே 74 முதல் ஐ.நா படை அமைதி பேணுகிறதே! லிமசொல் சென்று பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொண்ட போது அங்கு நிலவிய அமைதியையும் அது கொடுத்த வளர்ச்சியையும் ரணில் விக்கிரமசிங்க கண்கூடாகக் கண்டிருப்பார். பிரிந்த நாடுகள் மீண்டும் இணைவதை விரும்புவதில்லை. பிரிந்ததால் ஏற்பட்ட நன்மைகளைத் துறக்கப் பிரிந்தவர்கள் விழைவதில்லை.

இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்த பின் குறுகிய காலப் போர்கள் அவற்றிடையே மும்முறை நிகழ்ந்துள. ஒரே அரசைப் பேணுவதற்காகக் கடந்த 18 ஆண்டுகளாக இலங்கைத் தீவில் தொடரும் போரைவிட அது குறைந்த விளைவுகளையே தந்தது.

தனித்தனி நாடுகளாகப் பிரிவதால் போர் தொடரும் எனக்கருதுவது உலக அநுபவத்துக்கு முரணானது. உலக அநுபவத்தைத் திட்டமிட்டே புறக்கணித்தாலும் அதிலிருந்து பாடங்களைக் கற்க மறுத்தாலும் போர் தொடர்கிறது.

உள்ளம் நிறைய ஒட்டடைகள். அந்தஒட்டடைகளைத் துடைக்காமல் சிங்களவராகிய நாம் நமக்கு அமைதியையும் தேட முடியாது. தீவை நம்முடன் பகிர்ந்து கொள்ளும் அண்டைத்தமிழருடன் இணக்கமான நல்லுறவையும் பேண முடியாது.

சிங்கள அரசியலாளர் தம் நாட்டினத்தைக் கையாலாகாத நிலைக்குத் தள்ளியுள்ளனர். அடைய முடியாத அமைதியை அவர்கள் தேடுகின்றனர். ஒரு தீவில் ஓர் ஆட்சி என்பது அடைய முடியாத கனவு. எனவே இன்றைய சிங்களத் தலைவர்களின் அமைதி நாட்டம் என்பது கையாலாகதவர்களின் வாய்ச்சவடாலாகவே தெரிகிறது. இந்த வாய்ச்சவடாலால் எந்தப் பயனும் இல்லை. மெய்நிலையைத்தெரிந்த சிங்கள மக்களும், பகுத்தறிவும் மெய்நிலை உணர்வும் உடைய சிங்களத்தலைவர்களும் அடையமுடியாதது என நன்றாகத் தெரிவதைக் கைவிட்டுவிடுவர். அடையக் கூடியதை அமைதியையே அடைய முயல்வர். அவ்வாறு அடையக் கூடிய அமைதியின் பேறாக இந்நாள் வரை நமக்கு எட்டாக் கனியாய் இருந்த செல்வச் செழிப்பையும் வளமான வாழ்வையும் நோக்கிய நீண்ட நெடிய பயணத்தைத் தொடங்குவோமாக.

## கருத்துப் பகிர்வு

ஈழநாதமே உன் 27-09-2002 வெள்ளிநாத பதிப்பை கொழும்பில் பெறக் கூடிய அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 1995ம் ஆண்டுக்குமுன் உன் ஒவ்வொரு வரவையும் எண்ணி ஏங்கி தவமிருந்த நாட்கள் பல. அப்போதெல்லாம் என் இதய நாதமாக நீயிருந்தாய். ஆனால் 1995 யாழ்மண் இடப் பெயர்வின் பின் நான் 1996ல் இருந்து கொழும்பில் குடியேறி விட்டேன். அதன் பின் உன்னை என் கண்கள் தரிசிக்கவில்லை. ஆனால் என்ன ஆச்சரியம் 6வருடங்களின் பின் இன்றைய சமாதான சூழலில் உன்னைக் கொழும்பில் உள்ள பத்திரிகைக் கடையில் பெறக் கூடிய அருமையான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தானைத் தலைவனின் புகைப்படத்துடன் உன்னைப் பார்த்ததும் ஆச்சரியம் ஒரு புறம். ஆனந்தக் கண்ணீர் மறுபுறம். உன்னுடைய வளர்ச்சி கண்டு என் உடலெல்லாம் ஒரு கணம் புல்லரித்துப் போனது. வசதிகள் அற்ற நிலையிலும் உன் ஆற்றல் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. எப்படி உன்னால் மட்டும் இப்படி முடிகின்றது. என்றுமே சோபை இழக்காத அரசியல் கட்டுரைகள் "நறுக்கென" நறுக்கும் பகுதி, ஓயாதஅலைகள்-1 சித்திரக்கதை,படமும் தகவலும்,மதவடி மயிலர், சிறுகதைகள் போன்ற அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. தொடர்ந்தும் உன் வரவை எண்ணி காத்திருக்கின்றேன். "காசி அண்ணனின் அம்மா உனக்காக காத்திருக்கின்றேன்" பகுதி நெஞ்சை நெருட வைத்தது. உன் பணி தொடர வாழ்த்துக்கள் கூறி விடைபெறுவது ...

கொழும்பிலிருந்து இதய வாசகன், செ.வி.முகிலன்.

ஆசிரியர் ஈழநாதம்,

நீண்டதொரு கால இடைவெளியின் பின்பு ஈழநாதத்தினைப் படிக்க முடிந்ததில் பெருமகிழ்ச்சி. வன்னி வாழ்விடையே கொடிய பயணங்களின் பின்பும் "நான் சோர்ந்துவிடவில்லை" என்று நெஞ்சு நிமிர்த்தி சவாலானதொரு நெடிய பயணத்திற்கு நாதம் தன்னைத்தயார்படுத்திக் கொண்டுள்ளமை மெச்சத்தக்கது.

கட்டுரைகளில் கூட இங்கே கொழும்பில் இருந்து வெளியாகும் பத்திரிகைகளைவிடவும் கனதி மேலோங்கி இருக்கின்றது. இங்கே எல்லோரும் சப்பைக்கட்டு கட்டுவார்கள். புலிகள், விடுதலைப்போராட்டம் பற்றிய தெளிவான கண்ணோட்டங்களோ, பற்றுதல்களோ இன்றி தம்மைத்தாமே தூக்கி வைத்துக் கொண்டாடும் போக்கிரிகள் தான்கொழும்புப் பத்திரிகைத் துறையிலேயே அதிகமாக மலிந்து போயுள்ளார்கள்.

"பிறமுக அறிமுகம்" பகுதி தமிழ் மக்களுக்கு பல்வேறு தரப்பினர்களின் நிஜசொரூபங்களை அடையாளமிடும். இந்த அறிமுகம் அனைவரையும்- சகல தமிழ் மக்களையும்- சென்றடைய வேண்டும்.

ஓயாத அலைகள் தொடர்எதிரிகள் "தங்கத் தாம்பாளக் கனவுகளில்"மூழ்கியிருந்த வேளை தாயக வெற்றியின் பக்கம் தமிழ் மக்களை நெஞ்சுரம் கொள்ளச் செய்த தலைவரின் ஆச்சரியமான அதிரடி வெற்றி. அதனைமுழுமையாக களம் காண்பதற்கு தொடர் வழிசமைத்திருக்கிறது.

எஸ்.கௌசிகன்,
கொழும்பு-12

தவறுவது, மனித இயல்பு; பழியைப் பிறர் மீது சுமத்துவது, அரசியல். - பில் வாஹ்ன்

# வெள்ளி நாதம்

நேர் நோக்கு

## நடவடிக்கை அவசியம்

அம்பாறை மாவட்டம் காஞ்சிரங் குடாவிலும், திருகோணமலையிலும், கடந்தவாரம் நடைபெற்ற தமிழ் மக்கள் மீதான படுகொலைத் தாக்குதல்கள்,தமிழ் மக்கள் மத்தியில்பெரும்அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த காலங்களில் சிங்கள இனவாதிகளும், ஆயுதப் படைகளும் நடத்திய படுகொலைகள் பல இந்தப் படுகொலைகள் தமிழ் மக்கள் தாம் சிங்கள இனத்துடன் இணைந்துவாழ முடியாது பிரிந்து வாழ்வதே ஒரே வழி என்ற உறுதியான முடிவை ஏற்படுத்தியிருந்தன. ஆனால் இலங்கையில் தமிழ் மக்கள் தங்களுக்குரிய உரிமையுடனும் பாதுகாப்புடனும் சிங்கள இனத்துடன்வாழ முடியுமா? என மீளாய்வு செய்வதற்கு ஒரு சந்தர்ப்பமாக தற்போதைய சமாதான முயற்சிகள் தீவிரமாக இடம்பெற்று வருகையில் ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இப் படுகொலைகள் முற்றிலும் மாறான உணர்வுகளையே தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல, இந்தச் சந்தர்ப்பங்களுக்கு சிறிலங்காவில் இயங்கும் சில ஊடகங்கள் வழங்கிய/வழங்கிவரும் வியாக்கியானங்கள் தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையழிப்பவையாகவே உள்ளன. இவர்களுக்கும் ஒருபடி மேலேபோய் இனவாதப் பத்திரிகைகளும் ஊடகங்களும் புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறித் தாக்குதல்களை ஆரம்பித்து விட்டனர் என்று காட்டுவது போல தகவல்களை வெளியிட்டுள்ளன.

காஞ்சிரங்குடாவில் நடைபெற்ற படுகொலைத்தாக்குதல்கள் குறித்த முதலறிக்கை அதுவும் அரச ஊடகங்கள் வெளிட்ட செய்தி காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாமை புலிகள் தாக்கினர் என்பதாகவே இருந்தது.

திருகோணமலைச் சம்பவம் தொடர்பான அரச ஊடகங்களின் முதற்செய்தி வீதி மறியலில் ஈடுபட்டவர்களுக்கும் அதற்கு எதிர்ப்புத்தெரிவித்தவர்களுக்கும் இடையேயான மோதல் என்பதாக இருந்தது.

ஆனால்பின்னர் காஞ்சிரங்குடாவில் விசேட அதிரடிப்படை முகாம்முன் மறியல் போராட்டம் நடத்திய மக்கள் மீது அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு அது என்பதும் அதில் நான்கு மாணவர்கள் உட்பட பொதுமக்களே பலியாக நேர்ந்தது என்பதும் நிரூபிக்கப்பட்டது.

இதேபோலவே திருகோணமலைச் சம்பவம் மறியல்போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மறியல் போராட்டத்திற்கு எதிர்ப்புத்தெரிவித்த சாதாரண மக்கள் நடத்திய தாக்குதல் அல்ல, ஆயுதப்படையினரே தாக்குதல் நடத்தினர். என்பதும் தெரியவந்தது.

தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் இலங்கையில் வாழும் பெரும்பான்மையான மக்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒன்று என்பது உண்மையே. ஆனால் இந்தச் சமாதான முயற்சிகளை விரும்பாத சக்திகள் –அதிகாரம் கொண்ட சக்திகள் இருக்கவே செய்கின்றன. சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதி இந்தச் சமாதான முயற்சிகளை எவ்வாறாயினும் குழப்பியடித்துவிடும் நோக்கம்கொண்டவராக இருக்கிறார் என்பது ரகசியமானதொன்றல்ல.

இன்று மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளின் ஒவ்வொரு அடியிலும்அவர் ஏதாவதொரு தடைக்கல்லை ஏற்படுத்தாது விட்டதில்லை. ஆனால் அவர் முற்றிலும் எதிர்பாராத வகையில் சமாதான முயற்சிகள் முன்னேறிச் செல்வது அவருக்கு விருப்பத்திற்குரியதாக இல்லை. எனவே போலியான குற்றச்சாட்டுக்களை புலிகள் மீது மட்டுமல்ல அரசாங்கம் மீதும் அவர் சுமத்திவருகின்றார். அத்துடன் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இம்முயற்சிகளை சீர்குலைக்கவும் அவர் தயாராகவே உள்ளார்.

அதுபோலவே சிறிலங்காவின் மூன்றாவது அரசியல் சக்தியாக உள்ள ஜே.வி.பியும்இந்தச் சமாதான முயற்சிகளை ஆரம்பம் முதலே எதிர்த்து வருவதுடன் அதற்கு எதிரான போராட்டங்களை வெளிப்படையாகவே மேற்கொண்டு வருகிறது. அத்துடன் சிங்கள மக்களின் வாழ்வே இந்தச் சமாதான முயற்சிகளால் அழிந்துவிடப்போகின்றது என்றவாறான தீவிர பிரச்சாரங்களை அது நடத்தி வருகின்றது.

அதேவேளை சிங்கள இனவாத சக்திகள் எங்கே ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் தமது கைவரிசையைக் காட்டலாம் எனக் காத்திருக்கின்றன. இவ்வாறான ஒரு மனப்போக்குடனேயே சிறிலங்காவில் உள்ள சில இனவாத ஊடகங்களும் உள்ளன. அவற்றுக்கு புலிகள் மீது இல்லாத பொல்லாத குற்றச் சாட்டுக்களை முன்வைப்பதே தொழிலாக உள்ளது.

இவ்வாறு பல தீய சக்திகள் இச்சமாதான முயற்சிகளை எவ்வாறாயினும் குழப்பியடித்துவிட முயன்று வருகையில் அரசாங்கம் இந்த சக்திகளின் முயற்சிகளை முறியடிக்கும்தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலையில் உள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறான படுகொலைச் சம்பவங்களுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படாமையே இன்றைய நிலை தோன்றியமைக்கு காரணம் என்பதை புரிந்துகொண்டு சம்பந்தப்பட்டவர்கள் மீதும் அதற்குத் துணை போவோர் மீதும் கடுமையான

வேலவன்


## படமும் தகவலும்



படத்தில் காணப்படுவது ஒரு ஆள் உயரமுள்ள ஏர்னஸ்ரோ சேகுவேராவின் சிலையாகும். இது கவானாவுக்கு அப்பால் 185 மைல் தூரத்தில் சன்றா கிளாராவில் கம்யூனிஸ்ட் கட்சியால் நிறுவப்பட்டுள்ளது. சே குவேராவின் 35ஆவது இறந்த தினத்தையொட்டியே இச் சிலை நிறுவப்பட்டது. இதனை உருவாக்கியவர் பஸ்கியூ ஒவியர் கஸ்ரோ சொலானா.



இந்தியப் பொலிசாரின் பாதுகாப்பில் ஹொலிவூட் திரை நட்சத்திரம் சல்மான் கானை இந்திய நீதி மன்றொன்றில் ஆயர் படுத்துவதற்காக அழைத்துச் செல்லும் போது இப்படம் எடுக்கப்பட்டது.




ஒரு இளம் பெண் அமர்ந்திருக்கும் இப் பெரிய அகராதி வாசிப்பு நூல் பிராங் போட்டில் நடைபெற்ற புத்தக விழாவில் வைக்கப்பட்டிருந்தது.

இப்பொழுது **வெள்ளிநாதம்** வன்னிக்கு வெளியே

* யாழ்ப்பாணம் * வவுனியா * மன்னார்
* திருகோணமலை * மட்டக்களப்பு * கொழும்பு

எங்கும் கிடைக்கிறது.

நீங்களும் வெள்ளிநாதத்தில் விளம்பரம் செய்ய தொடர்பு கொள்ளுங்கள்

**ஈழநாதம் பணிமனை**

யாழ் சாலை, கிளிநொச்சி.

வவுனியாவில் விளம்பர முகவர்:
உமையாஸ்
இல.12, பஸ்நிலையம்,
வவுனியா.

மன்னார் விளம்பர முகவர்:
தமிழிசை
விளம்பர சேவை,
பஸ்நிலையம், மன்னார்.

வெள்ளிநாதத்தில் விளம்பரம் செய்வதற்கு திங்கட்கிழமைக்கு முன்னதாக விளம்பரங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.